விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 18 வியாழக்கிழமை (01.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 164

# காணாமல் ஆக்கப்பட்டோர் கொலை செய்யப்பட்டிருப்பர்

## தடுப்பில் இல்லை; தகவல் இருந்தால் தேடுவோம் – முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து



(கொழும்பு)

தமிழர் தாயகப் பகுதியில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டுகின்ற பெற்றோர், அந்த இரகசிய இடம் தொடர்பில் தெரிவிக்கப்படும் தகவலை ஜனாதிபதியிடம் வழங்குவதாக குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, காணாமல் போனவர்களை இராணுவத்தினர் பொறுப்பேற்றிருந்தால் அப்போதைய சூழலில் அவர்களை கொன்றிருப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## பொறுப்புக்கூறலில் நழுவிட முடியாது!

### ஆளுநரின் கருத்துக்கு சுரேஷ் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் தமது பிள்ளைகளை இராணு 24☛

## வித்தியா கொலை; மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதி 23☛

## இயற்கை பேரிடர்; 202 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில நாட்களாக தொடரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அதனுடன் இணைந்ததாக ஏற்பட்ட மண் சரிவு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 202 ஆக உயர்ந்து 23☛

## மாணவர் ஒருவர் நேற்று மரணம்

(குருமன்காடு)

வவுனியா பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்த பாடசாலை மாணவர் ஒருவர் ஆசிரியர் தண்டித்ததன் காரணமாக மனமுடைந்து உயிரை மாய்ப்புச் செய்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா கனகராயன்குளம் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் நேற்றை 23☛

### அடாவடி புரிந்து தலைமறைவாகியிருந்த

## யாழ்.வாள்வெட்டு சூத்திரதாரிகள் இந்தியாவுக்கு தப்பித்த வேளை கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத வாள் வெட்டு குழுக்களை இயக்கி வருபவர்கள் என பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேவா, பிரகாஸ் உள்ளிட்ட மூன்று முக்கிய நபர்கள் நேற்று முன்தினம் இரவு இந்தியாவுக்கு சட்டவிரோதமான முறையில் தப்பி சென்ற நிலையில் இந்திய உளவுத்துறை பொலிஸாரால் தமிழகத்தின் திருச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் குழு மோதல்களுக்கு காரணமாக இருந்தும் பல குழுக்களை இயக்கி வருவதாகவும் தெரிவித்து.

பிரசன்னா, தேவா, பிரகாஸ் ஆகிய 24☛

## ஞானசார தேரர் ஆஜராகவில்லை

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகவில்லை.

மேற்படி வழக்கில் கடந்த 24-ம் 24☛

## போராளிகள் மூன்று பேர் விடுதலை

(வவுனியா)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் மூவரும் 24☛

## இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

அமைச்சரவை திருத்தத்துக்கமைய நான்கு இராஜாங்க அமைச்சர்களும், மூன்று பிரதி அமைச்சர்களும் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி 24☛

## உதவி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் வெள்ள மற்றும் நிலச்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி பொருட்களை வழங்க யாழ். மாவட்ட செயலகம் நடவடிக்கை 24☛

## இராணுவத்திடம் கையளித்தோரை அரசிடம்தான் கேட்க முடியும்!

### ஆளுநர் கூரேக்கு சாள்ஸ் எம்.பி பதில்

(பனிக்கன்குளம்)

இறுதி கட்ட யுத்தத்தின்போது இலங்கை இராணுவத்தினரிடம் நேரடியாக கையளிக்கப்பட்ட உறவுகளை அரசாங்கத்திடமே கேட்கமுடியும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் கிடைத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களது பெற்றோர்கள் போராடிவரும் நிலையில், வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயின் கருத்து பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வேதனைக்கு உள்ளாக்கியு 24☛

## கல்லுண்டாய் வெளியில் ஒருவித நோய் தொற்று

### மக்கள் அவதி; கால்நடைகள் இறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்லுண்டாய் வெளிக்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு தோல் மற்றும் சுவாசம் சம்பந்தமான ஒருவித நோய் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் இறப்புக்கள் திடீரென அதிகரித்துள்ள காரணத்தால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளிக்கு சற்று தொலை 23☛

## ஞானசார தேரரை கொல்ல சதித்திட்டம்

### பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை

(கொழும்பு)

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை படுகொலை செய்யும் இரகசிய சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

ஞானசார தேரருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த விடயம் நீதிமன் 23☛

## பெண்ணொருவர் குத்திக் கொலை

(காலி)

காலி - மாகொல்ல பிரதேசத்தில் நேற்றைய தினம் இளம் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை நபரொருவர் கூரிய ஆயுதத்தால் குத்தியுள்ளதுடன், அந்நபரும் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது பலத்த காயங்களுக்கு உள்ளான இருவரும் கராப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது குறித்த பெண் உயிரிழந்துள்ளார். 24☛



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார தொண்டர்கள்; நியமனங்கள் வழங்கப்படும்

## வடக்கு ஆளுநர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களால் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டமானது சேவைக் காலத்தின் அடிப்படையில் வெற்றிடங்கள் ஏற்படும் போது கல்வி தகைமையின்றி நியமனங்கள் வழங்கப்படும் என்ற வட மாகாண ஆளுநரின் உறுதிமொழியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 23 வருட கால தொடக்கம் 3 ஆண்டுகள் வரை சேவைக் காலத்தை உடைய சுகாதார தொண்டர்கள் 820 பேருக்கும் இதுவரை நிரந்தர நியமனமானது வழங்கப்பட்டிருக்கவில்லை. இவர்கள் அனைவரும் பொது சுகாதார திணைக்களத்தின் கீழான வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் சுகாதார தொண்டர்களாக சேவையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு சுகாதார தொண்டர்களாக பணியாற்றும் இவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிரந்தர நியமனமும் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து வடக்கில் உள்ள அனைத்து சுகாதார தொண்டர்களும் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி கடந்த ஒரு மாத காலமாக தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இப் போராட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த மாதம் 17ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரை சந்திப்பதற்கு கோரியிருந்தனர். எனினும் அன்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் விடுமுறையில் இருந்ததன் காரணமாக சந்திப்பு பிற்போடப்பட்டு நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயுடன் சுகாதார தொண்டர்களின் பிரதிநிதிகள் மூன்று பேர் சந்தித்து தமது நிரந்தர நியமனம் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடியிருந்தனர். இக் கலந்துரையாடலின் போது ஆளுநர் சுகாதார தொண்டர்களுக்கு சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்.

இதன்படி வடக்கு ஆளுநர் சுகாதார தொண்டர்களுக்கு கூறுகையில், தற்போது சுகாதார தொண்டர்களை நிரந்தர நியமனம் வழங்கி உள்ளீர்ப்பதற்கு வெற்றிடங்கள் எதுவும் இல்லை.

எனவே தற்போது பணியில் உள்ளவர்கள் ஓய்வுபெற்று செல்லும் போது அவர்களது இடத்திற்கு தற்போதுள்ள சுகாதார தொண்டர்கள் சேவைக் காலத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

இவ்வாறு உள்ளீர்க்கப்படும் சுகாதார தொண்டர்கள் எந்தவிதமான கல்வித் தகைமையும் இன்றி அவர்களது சேவைக் காலத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படுவதுடன் இதில் எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் காணப்படாது எனவும் உறுதியளித்திருந்தார்.

அந்தந்த பொதுச் சுகாதார திணைக்களத்தினரின் கீழ் பணியாற்றியவர்களுக்கு இவ் நியமனம் வழங்கப்படும் என வடக்கு ஆளுநர் இதன்போது உறுதியளித்தார்.

இக் கலந்துரையாடலில் கருத்துரைத்த சுகாதார தொண்டர்களின் பிரதிநிதிகள், மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு தொடர்பில் பரீட்சார்த்தமாக சுகாதார தொண்டர்களை உள்ளீர்ப்பு செய்துள்ள நிலையில் அதுபோன்று வடக்கிலும் மேற்கொள்ள வேண்டும் என கோரியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த ஆளுநர் அது தொடர்பாக தாம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து விட்டதாகவும் அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது இடம் பெற்றுக் கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இன்றைய தினம் உத்தியோகபூர்வமான கடிதமொன்றை சுகாதார தொண்டர்களுக்கு ஆளுநர் வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

இதனையடுத்து. இக் கடிதமானது ஆளுநரினால் வழங்கப்பட்ட பின்னர் தாம் தமது போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக சுகாதார தொண்டர்கள் தெரிவித்தனர்.

மேலும் ஆளுநர் கூறியது போன்றல்லாது இவ் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டு தமது நியமனமானது பாதிக்கப்படும் சூழல் ஏற்படுமாயின் தமது போராட்டம் மாற்று வழியில் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் சுகாதார தொண்டர்கள் இதன்போது தெரிவித்திருந்தனர். (செ-4)


# 5 ஆம் நாளில்...

அஞ்சலி செய்கின்றாள்
நல்லை மங்கையர்க்கரசி



கந்தப்பு விக்னேஸ்வரன்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதர்சினி சிவஸ்ரீ அவர்களின் அன்புத் தந்தையார் கந்தப்பு விக்னேஸ்வரன் அவர்களின் பிரிவுத்துயரில் யாமும் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
2017.06.01 யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(9096)



சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

# பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் பதவி வெற்றிடமாக இருப்பதால் இதனை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பதவி | : தட்டெழுத்தாளர் |
| சம்பளக் குறியீட்டு இல. | : 305/15 |
| சம்பள அளவுத்திட்டம் (66/2016 இன் படி) | : 9450-75x10-80x10-11000 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

க.பொ.த (சாதாரண தரம்) தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் சிங்களம் அல்லது தமிழ் தட்டெழுத்து வேகம் நிமிடத்துக்கு 20 சொற்களுடன் ஆங்கில தட்டெழுத்து நிமிடத்துக்கு 30 சொற்கள்

வயதெல்லை: 18-45, சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

கூட்டுறவு ஆணைக்குழு சுற்றுநிருபத்துக்கு அமைய வாழ்க்கை செலவுப்படி 7800/= வும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பூரணப்படுத்தப்பட்டு 15.06.2017இற்கு முன்பு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்

(9092)

பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
பிரதான வீதி, சங்கானை.


# போலி சாரதி அனுமதிப்பத்திரம்; சட்டவிரோத கும்பல் சிக்கியது

(கொழும்பு)

போலி வாகன சாரதி அனுமதிப் பத்திரங்களை தயாரிக்கும் இடம் ஒன்றினை சுற்றி வளைத்த பொலிஸார் 56 போலி சாரதி அனுமதிப்பத்திரங்களுடன் 6 சந்தேக நபர்கள் உள்ளிட்ட குழு ஒன்றினை கைது செய்துள்ளனர்.

திட்டமிட்ட குற்றங்களைத் தடுக்கும் சிறப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக வேரஹெர, மருதானை பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது போலி சாரதி அனுமதிப்பத்திரங்களை தயாரித்து வந்த மருதானை - தேவனம்பியதிஸ்ஸ பகுதியில் உள்ள வீடொன்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு அது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதுடன் மோட்டார் வாகன திணைக்களத்தினுள் உள்ள சில அதிகாரிகளின் ஒத்துழைப்புடனேயே இந்த சட்டவிரோத நடவடிக்கை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளமையும் அதனூடாக இதுவரை ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இவ்வாறு போலி சாரதி அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளமையும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந் நிலையில் இது தொடர்பில் விஷேட அவதானம் செலுத்தியுள்ள திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவினர், போலியாக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களின் பட்டியல் அடங்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் ஹார்ட் டிஸ்க் எனப்படும் வன்தட்டு ஒன்றினை மீட்டுள்ளதுடன் அதிலிருந்து தகவல்களைப் பெற்று போலி சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்போருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

இதனைவிட இன்று முதலாம் திகதி மோட்டார் வாகன திணைக்களத்துக்கு செல்லும் சிறப்பு பொலிஸ் குழு அங்கு, இந்த சட்டவிரோத கும்பலுடன் தொடர்பினைப் பேணிய அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்துவது குறித்தும் ஆராயவுள்ளது. (செ-11)

# அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

(மூதூர்)

திருகோணமலை மூதூர் பேருவளைப் பகுதியில் 3 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பான அடையாள அணி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூதூர் நீதவான் நீதிமன்றில் நேற்று அடையாள அணி வகுப்பு நடைபெறவிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாமையால் எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதிக்கு அடையாள அணி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ)

# திருப்தி கொள்ள முடியாது - மகிந்த

(களுத்துறை)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று களுத்துறையில் தெரிவித்துள்ளார்.

காலநிலை சீர்கேட்டினால் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (செ-11)


**பகிரங்க ஏல விற்பனை**

2016ஆம் ஆண்டுக்கான பொருள் கணக்கெடுப்பில் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்ட பொருள்கள் 15.06.2017ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

**இடம்:** யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
(C-6737) அதிபர்



**ஆசிரியர் தேவை**

தரம் 1 – 5 வரை வகுப்புகளுக்கு
கணிதம், சுற்றாடல் கற்பிக்கக்கூடிய
அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை

தொடர்புகளுக்கு:
077 912 2918

மதுரம் கல்வி நிறுவனம்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
இருபாலை.
(C-6735)



**கண்ணீர் அஞ்சலி**



சின்னத்தம்பி சிவராசா

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம் வருட மாணவி சி.நிவேதா அவர்களின் பாசமிகு தந்தையார் சின்னத்தம்பி சிவராசா அவர்கள் 30.05.2017 அன்று சுழிபுரத்தில் காலமானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
41வது அணி விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(C-6738)



யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக

**மீள்பாவனைப் பொருட் சந்தை - 2017**

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக மீள்பாவனைப் பொருட்சந்தை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஜூன் 01 தொடக்கம் ஜூன் 03 வரை நடாத்தப்படவுள்ளது.

**பொதுமக்கள் தங்களிடம் நல்ல நிலையிலுள்ள பாவிக்க விரும்பாத பொருட்களை அவை தேவைப்படுவோருக்கு விற்க ஓர் அரிய சந்தர்ப்பம்!**

**காலை 9.00 முதல் மாலை 6.00 வரை**

குறிப்பு:-
- [illegible]தைப்படுத்தல் வசதிக்கான இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.
- விற்பனை தொடர்பாக எழும் விடயங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்காது.

(C-6736)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நடவடிக்கை குறித்து கொழும்பு பார்த்துக்கொள்ளும்

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ நழுவல்

காங்கேசன்துறை பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களின் இலக்கத்தகடுகளை இராணுவத்தினர் உடைத்து எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு விரைவாக நழுவிச் சென்றமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, இது தொடர்பில் கொழும்பு பார்த்துக்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

காங்கேசன் துறை வடக்கு குருவீதி என்ற இடத்தில் உள்ள கிணற்றினை சுத்தம் செய்ய கிணற்று உரிமையாளர்கள் ஆயத்தமாகியுள்ளனர். கிணற்றில் உள்ள தண்ணீரை வெளியேற்றிக் கொண்டிருந்த போது கிணற்றுக்குள் மோட்டார் சைக்கிள்களின் பாகங்கள் தென்பட்டுள்ளன.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவலை வழங்கி விட்டு பொதுமக்களே குறித்த மோட்டார் சைக்கிள்கள் (கீரோ கொண்டா பஷன், ரீ.வி.எஸ்) மற்றும் மோட்டார் சைக்கிள் பாகங்கள் சிலவற்றை கிணற்றிலிருந்து வெளியே எடுத்துள்ளனர். அப்போது அவ்விடத்துக்கு உடனடியாக வான் ஒன்றில் பதற்றத்துடன் வருகை தந்த இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்த அனைவரையும் வெளியேற்றிவிட்டு மோட்டார் சைக்கிளில் இருந்த இலக்கத்தினை உடைத்து எடுத்துக்கொண்டு மிக விரைவாக அவ் இடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

அதன் பின்னரே பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து மோட்டார் சைக்கிள்களை பார்வையிட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் இருந்த இலக்கத்தகடு தொடர்பாக பொலிஸாரை கேட்ட போது தாம் வரும் பொழுது மோட்டார் சைக்கிள்களில் இலக்கத்தகட்டினை காணவில்லை என தெரிவித்தனர். இராணுவத்தினரின் இந்த செயல் அப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பின்னர் இலக்கத்தகடு ஒன்று மீட்கப்பட்டதாக கூறப்பட்டு. இலக்கத்தகடு ஒன்றும் காண்பிக்கப்பட்டது.

அது எந்தளவிற்கு உண்மைத்தன்மை உடையது என்பது தெரியாத நிலையில், நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் குறித்த விடயம் தொடர்பாக கேட்ட போதே பொலிஸ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தான் பதில் கூற முடியாது எனவும், கொழும்பில் உள்ளவர்களே பதில் கூற முடியும் எனவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (இ-4)

# தீவு நாடுகளில் முதலீட்டுக்கு பொருத்தமான நாடு இலங்கை

## பிரித்தானிய FDI சஞ்சிகை சுட்டிக்காட்டு

27 தீவுகளைக் கொண்ட நாடுகளின் பொருளாதாரம் தொடர்பில் பிரித்தானிய FDI சஞ்சிகை மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் பலமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய நாடாக இலங்கை இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் தீவு நாடுகளில் முதலீடு செய்வதற்கு. பொருத்தமான நாடு இலங்கை என்று அந்த சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் முதலீட்டு வாய்ப்புக்களை உலகுக்கு காட்டும் இல்ங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக மாநாடு - 2017 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் ஆரம்பமானது.

இதன்போது இதற்குரிய சான்றிதழ் பிரித்தானியாவின் FDI சஞ்சிகையின் துணை ஆசிரியர் Jacopo Dettoni அவர்களால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த சான்றிதழ் ஜனாதிபதியால் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக மாநாடு 23 நாடுகளைச் சேர்ந்த 130 இற்கும் அதிகமானோரின் பங்குபற்றுதலுடன் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளன.

ஏற்றுமதி, உற்பத்தி, விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, ஏற்றுமதி சேவைகள், உள்நாட்டு அறிவுசார் சேவைகள், மின்சாரம் மற்றும் சக்திவலு, சுற்றுலாத்துறை போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு முதன்மை கவனம் செலுத்தப்படுவதுடன், முன்னணி இலங்கை கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் உயர் மட்ட அரச அலுவலர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு இந்த மாநாட்டின் போது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும். (இ-7)

# நிவாரணம் சேகரிக்கும் மத்திய நிலையங்களாக தேசிய பாடசாலைகள்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



அனைத்து தேசிய பாடசாலைகளையும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான நிவாரணப் பொருட்களை சேகரிக்கும் மத்திய நிலையமாக செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதேவேளை நிதி வழங்க வேண்டாம் என்று உதவி வழங்குபவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ள கல்வியமைச்சர் ஆடைகள் வழங்குவதாயின் புதிய ஆடைகளை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆபத்தான கட்டடங்களை அடையாளம் கண்டு வலயப் பணிப்பாளர்களிடம் தெரிவிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும், வரும் நாட்களில் அது தொடர்பான அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கு கப்பல் போக்குவரத்தை தொடங்க வேண்டும்

## இந்து மக்கள் கட்சி வலியுறுத்தல்



(கொழும்பு)

காங்கேசன் துறையிலிருந்து. தமிழகத்தில் உள்ள காரைக்கால் வரை கப்பல் போக்குவரத்தை தொடங்க வேண்டும் என இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் வலியுறுத்தியுள்ளார்.

சிதம்பரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது. ஜுன் மாதம் நடராஜர் கோயில் ஆனித் திருமஞ்சன விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்க இலங்கைத் தமிழர்கள் திரளானோர் சிதம்பரத்துக்கு வருவர்.

இலங்கைக்கும், தமிழகத்துக்கும் உள்ள உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கை தமிழர்கள் சிதம்பரம் வருவதற்கு வசதியாக காங்கேசன்துறையிலிருந்து காரைக்கால் வரை கப்பல் போக்குவரத்தை தொடங்க வேண்டும்.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த இந்த போக்குவரத்து யுத்த காலத்தில் தடை செய்யப்பட்டது. தற்போது யுத்தம் இல்லை.

எனவே இந்திய மத்திய, மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீட்டுத்திட்ட தேவையைப் பூர்த்தி செய்ய 24 ஆயிரத்து 400 வீடுகள் உடன் தேவை

## யாழ்.மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள அடிப்படை தேவைகளில் ஒன்றான வீட்டுத்திட்ட தேவையை பூர்த்தி செய்வதற்கு 24 ஆயிரத்து 400 வீடுகள் உடனடித் தேவையாகவுள்ளது என யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள் தொடர்பில் எமது கணிப்பீட்டின் படி 29 ஆயிரத்து 500 வீடுகள் தேவையாக இருந்தது. அந்த வகையில் கடந்த வருடம் எமக்கு 4 ஆயிரம் வீடுகள் கிடைத்திருந்தன. இந்த வருடம் அண்ணளவாக ஆயிரத்து 100 வீடுகள் கிடைத்துள்ளன.

வீட்டுத்திட்டம் உடனடியாக தேவையாக உள்ளவர்கள் என்ற ரீதியில் நாம் தெரிவு செய்யும் பொழுது அதில், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 2ஆயிரத்து 900 பேரும், காணாமல் போனவர்களுடைய குடும்பங்கள் 800 பேரும், போரினால் பெண் தலைமைத்துவமான 3 ஆயிரத்து 500 குடும்பங்களும், போரினால் அங்கத்தவர்களை இழந்த 4ஆயிரத்து 500 குடும்பங்களும், போரினால் அங்கவீனமுற்ற அங்கத்தவர்களை கொண்ட 5 ஆயிரத்து 500 குடும்பங்களும், அண்மையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் குடியமர்ந்த 4 ஆயிரத்து 500 குடும்பங்களும், வறுமை காரணமாக பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 500 குடும்பங்களும், இந்தியாவில் இருந்து திரும்பி வந்த ஆயிரத்து 100 குடும்பங்களும், தமக்கு உடனடி தேவையாக வீட்டுத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

அந்த வகையில் இதுவரை அண்ணளவாக 5 ஆயிரத்து 100 வீடுகளே எமக்கு கிடைத்துள்ளன. மேலும் 24 ஆயிரத்து 400 வீடுகள் உடனடித் தேவையாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்ய நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும் யாழில்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வும் பிரயோகப் பரீட்சையும் 2017 நடைபெறவுள்ளது.

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரால் 2017.02.09 ஆம் திகதி வடமாகாண சபை இணையத்தளம் மூலமாக கோரப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாக வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) -2017(II)இற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் தகைமை பெற்றவர்கள் என வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை கடந்த 25.05.2017, 26.05.2017 ஆம் திகதிகளில் வட மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றது.

எனினும் குறித்த நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்காதவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 05.06. 2017ஆம் திகதி காலை 8.30 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. எனவே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு சமுகமளிக்காத விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

மேலும் நேர்முகத்தேர்விற்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களின் பெயர் விபரம், நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள் என்பவற்றை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த சம்பியன் ட்ராபி இன்று கோலாகல ஆரம்பம்

## முதல் போட்டியில் இங்கிலாந்து - பங்களாதேஷ் மோதல்




8 நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிராபி போட்டி இன்று தொடங்குகிறது. இதன் தொடக்க ஆட்டத்தில 'ஏ' பிரிவில் உள்ள இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

மினி உலக கோப்பை என்று அழைக்கப்படும் ஐ.சி.சி. சம்பியன்ஸ டிராபி 1998-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

1998-ம் ஆண்டு பங்களாதேஷில நடந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்கா அணி மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி கோப்பையை வென்றது.

இதுவரை 7 சம்பியன்ஸ் டிராபி போட்டிகள் நடைபெற்றுள்ளன. முதல் 2 போட்டியும் ஐ.சி.சி. நொக் அவுட் டிராபி என்று அழைக்கப்பட்டது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் அதிகபட்சமாக தலா இரண்டு முறை கோப்பையை வென்றுள்ளனர். இந்திய அணி 2002-ல் இலங்கையுடன் இணைந்து கூட்டாக வென்றது.

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை தலா 1 முறை வென்றன. தொடக்கத்தில் 2 ஆண்டுக்கு ஒரு முறையும், பின்னர் 3 ஆண்டுக்கு ஒரு முறையும, அதை தொடர்ந்து 4 ஆண்டுக்கு ஒரு முறையும் இந்த போட்டி நடைபெற்று வருகிறது.

கடைசியாக 2013-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் டிராபியை தோனி தலைமையிலான இந்திய அணி கைப்பற்றியது.

8-வது சம்பியன்ஸ் டிராபி போட்டி இங்கிலாந்தில் இன்று (1ஆம் திகதி) தொடங்குகிறது. ஜுன் 18ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடக்கிறது.

இதில் தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கின்றன. 2015-ம் ஆண்டு செப்ரெமபர் மாதம் கணக்கின் படி தரவரிசையில் உள்ள 'ரொப் 8' நாடுகள் தகுதி பெற்றன. மேற்கிந்தியத் தீவுகள் 9-வது வரிசையில் இருந்ததால் வாய்ப்பை இழந்தது. பங்களாதேஷ் அணி அந்த அணியை பின்னுக்கு தள்ளி வாய்ப்பை பெற்றது. 2006-க்கு பிறகு பங்களாதேஷ் சம்பியன்ஸ் டிராபி போட்டிக்கு திரும்பி உள்ளது.

சம்பியன்ஸ் டிராபி போட்டியில் விளையாடும் 8 அணிகளும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவிலும் இடம் பெற்றுள்ள அணிகள் விவரம்,

'ஏ' பிரிவு: அவுஸ்திரேலியா, இங்கிலாந்து (போட்டியை நடத்தும் நாடு), நியூசிலாந்து, பங்களாதேஷ்.

'பி'பிரிவு: இந்தியா (நடப்பு சம்பியன்ஸ்), தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான்.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன தலா 1 முறை மோத வேண்டும். 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

12ஆம் திகதியுடன் 'லீக்' ஆட்டம் முடிகிறது. 13ஆம் திகதி ஓய்வு நாளாகும். 14ஆம் திகதி முதல் அரை இறுதியும், 15ஆம் திகதி 2-வது அரை இறுதியும் நடைபெறும். 16 மற்றும் 17ஆம் திகதி ஓய்வு நாளாகும். இறுதிப்போட்டி 18ஆம் திகதி நடக்கிறது.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் உள்ள இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்தப்போட்டியில் விளையாடும அணிகள் இங்கிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 3 அணிகள் தான் கோப்பையை வெல்லவில்லை. இங்கிலாந்து 2 முறை இறுதிப் போட்டியில் தோற்று இருக்கிறது. இதனால் அந்த அணி முதல் முறையாக கோப்பையை வெல்லும் ஆர்வத்தில உள்ளது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி இரண்டு பயிற்சி ஆட்டத்திலும் நியூசிலாந்து, பங்களாதேஷையும் வென்று இருந்தது. இதனால் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. 3-வது முறையாக சம்பியன்ஸ் டிராபியை வெல்லும் வேட்கையில் இருக்கிறது.

ஏற்கெனவே வென்ற அணி கோப்பையை வெல்லுமா? புதிய அணி பட்டம் பெறுமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர்.

## பிரெஞ்ச் ஓபன் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி தோல்வி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து ஏமாற்றம் அளித்தது.

பாரீஸ் நகரில் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா - கஜகஸ்தானின் யரோஸ்லாவா ஷ்வெடோவா ஜோடி அவுஸ்திரேலியாவின் டரியா கவ்ரிலோவா - ரஷ்யாவின் அனாஸ்டாசியா பவ்லியுசென்கோவா ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செட்டை சானியா ஜோடி கடுமையாக போராடியது. இறுதியில் 6(5)-7(7) என இழந்தது. ஆனால் 2-வது செட்டை 6-1 என எளிதில் கைப்பற்றியது. ஆனால், வெற்றியை தீர்மானிக்கும் 3-வது செட்டில் 2-6 என தோல்வியடைந்து முதல் சுற்றோடு சானியா ஜோடி வெளியேறியது.

ஆனால், ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் போபண்ணா ஜோடி வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

## சம்பியன்ஸ் டிராபி தொடரில் விளையாட தயாராக உள்ளேன் - டினேஸ் கார்த்திக்



சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடித்து விளையாடுவதற்காக நான் தயாராக உள்ளேன் என்று தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி தொடர் இன்று தொடங்குகிறது. முதல் போடடியில் இந்தியா வருகிற 4ஆம் திகதி பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்படும்போது தினேஷ் கார்த்திக் இடம்பெறவில்லை. ஐ.பி.எல். தொடரின்போது மணீஷ் பாண்டேவுக்கு காயம் ஏற்பட்டதால் அவருக்குப் பதிலாக தினேஷ் கார்த்திக் இடம்பிடித்தார்.

சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ்ற்கு எதிராக மோதியது.

முதல் போட்டியில் நியூசிலாந்தை 189 ஓட்டங்களில் சுருட்டியது இந்தியா. பின்னர் இந்தியா துடுப்பெடுத்தாடிய போது தினேஷ் கார்த்திக் ஓட்டம் எதுவும் எடுக்காமல் டக் அவுட் ஆனார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது பயிற்சி ஆட்டத்தில் பங்களாதேஷத்திற்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 324 ஓட்டங்கள் குவித்தது. 4-வது வீரராக களம இறங்கி 77 பந்தில் 94 ஓட்டங்கள குவித்தார்.

யுவராஜ் சிங் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தினேஷ் கார்த்திக் 4-வது வீரராக களம் இறங்கி 77 பந்தில் 8 பவுண்டரி, 1 சிக்சருடன் 94 ஓட்டங்கள் குவித்தார்.

பங்களாதேஷ்ற்கு எதிரான போடடியில் இந்தியா வெற்றி பெற்றதற்குப் பிறகு இந்திய அணித்தலைவர் விராட ஹோலி கூறுகையில் "தினேஷ் காரத்திக் ஒரு சிறப்பான வீரர். அவருக்கு நாங்கள் கூடுதல் வாய்ப்பு கொடுக்க விரும்பினோம்" என்று கூறியிருந்தார்.

இதனால் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தினேஷ் கார்த்திக் இடம் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தற்போதைய சம்பியன்ஸ் டிராபி தொடருக்கு நான் தயாராக உள்ளதாக உணர்கிறேன் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து தினேஷ் கார்த்திக் கூறுகையில் பங்களாதேஷ்ற்கு எதிரான போட்டியை நான் பார்க்கும் போது, என்னுடைய திறமையை வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்பு. களத்தில் நீண்ட நேரம் நின்று விளையாடியது சிறப்பாக இருந்தது. தொடருக்கு நான் தயாராக இருப்பதாக உணர்கிறேன்.

எனக்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போட்டி. என்னுடைய துடுப்பாட்ட திறமையை அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளர் பார்த்திருபபார்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக விளையாடுவது முக்கியமானது என்றார்.

## ஐ.சி.சி ஒரு நாள் போட்டிக்கான தரவரிசையில் தென்னாபிரிக்கா அனைத்திலும் முதலாம் இடம்




ஐ.சி.சி. சம்பியன்ஸ்டிராபி 50 ஓவர கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது. ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் தென்னாபிரிக்காவின் ஏபி டி வில்லியர்ஸ் 874 புள்ளிகளுடன் முதல் இட்த்தில் உள்ளார். டேவிட் வோர்னர் 871 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். விராட் ஹோலி 852 புள்ளிகளுடன 3-வது இடத்தில் உள்ளார். விராட் ஹோலிக்கும் டி வில்லியர்ஸ்க்கும் இடையில் 22 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி தொடரில் விராட் ஹோலி சிறபபாக விளையாடினால் முதல் இடத்தை பிடிக்க வாய்ப்புள்ளது.

ரோகித் சர்மா 12-வது இடத்திலும், தோனி 13-வது இடத்திலும், தவான் 15-வது இடத்திலும் உள்ளனர். இந்த மூன்று பேரும் சிறப்பாக விளையாடினால் 10 இடங்களுக்குள் வர வாய்ப்புள்ளது.

பந்து வீச்சில் இந்திய வீரர்கள் யாரும் முதல் 10 இடத்திற்குள் இல்லை. அக்சார் பட்டேல் 11-வது இடத்தில் உள்ளார். அஸ்வின் 18-வது இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 724 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இம்ரான் தாஹிர் 722 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் 701 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும் உள்ளனர்.




அணிகள் தர வரிசையில் தென்னாபிரிக்கா 122 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா 118 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், இந்தியா 117 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும், நியூசிலாந்து 114 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், இங்கிலாந்து 112 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும் உள்ளது.

## சுழற்சி பொருள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய சுற்றுச்சூழல் தினம் யாழ்ப்பாணம் மாநகர சபையால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் பொதுமக்கள் வீடுகளில் உள்ள பாவனைக்குதவாத் பிளாஸ்ரிக், கண்ணாடி, இரும்பு, பல்புகள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் போன்றவற்றை முத்திரைச் சந்தியில் உள்ள சங்கிலியன் பூங்காவில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 6.00 மணி வரை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சுழற்சிப் பொருட்கள் சேகரிப்பு நிலையத் திடம் ஒப்படைக்கமுடியும்.

அதேசமயம் மீள்பாவனைப் பொருட்களின் சந்தை இன்று வியாழக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களிடம் நல்ல நிலையிலுள்ள பாவனையில் இல்லாத பொருட்களை தேவைப்படுவோருக்கு சுயமாக விற்பனை செய்ய ஓர் அரியவாய்ப்பாக இது அமைகின்றது. இதற்கான இடவசதி வழங்கப்படும். இவ்விற்பனை தொடர்பில் எழும் விடயங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்காது என மேற்படி தகவலை யாழ்.மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் வெளியிட்டுள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச புகைத்தலுக்கு எதிரான செயற்பாட்டு நிகழ்வு நேற்று நடைபெற்றது. பிரதேச செயலர் இ.தயாரூபன் தலைமையில் தீய பழக்கங்களை ஒழித்து நிரந்தர மகிழ்ச்சியை அனுபவிப்போம், ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு என்பன நடைபெற்றன. காரைநகர் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலம் காரைநகர் புது வீதிச் சந்தியை சென்றடைந்து அங்கு இராட்சத சிகரெட் ஒன்றும் தீயிட்டு எரிக்கப்பட்டது. இந் நிகழ்வுகளில் காரைநகர் பிரதேச செயலர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)




புகைத்தல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தினமான நேற்று தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்றலில் நிறைவு பெற்றது. அங்கு தென்மராட்சி பிரதேச செயலர், மதுவரித்திணைக்கள ஆணையாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (படங்கள்:-விஜயவாசன்)

# பரீட்சை சான்றிதழ்கள் ஒரு நாள் சேவையின் கீழ் வழங்கப்படும்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பரீட்சை சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு ஒரு நாள் சேவையின் கீழ் சான்றிதழ்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார். பரீட்சை சுட்டெண்ணை வழங்குவதன் மூலம் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்குக் காரணமாக சட்டவிரோத குடியிருப்புகளை அகற்ற வேண்டும்

## சந்திரிகா வலியுறுத்து

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்பதற்கு இன, மதபேதம் பாராமல் செயற்பட்டமை பெரும் பாராட்டுக்குரியது. இனிமேல் இவ்வாறான அனர்த்தம் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அத்துடன் வெள்ளம் ஏற்படுவதற்கு காரணமான சட்டவிரோத குடியிருப்புகளை அகற்ற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீரற்ற காலநிலை காரணமாக பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதன் போது இன,மத பேதம் பாராமல் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றனர். எனவே பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக இன, பேதம் பாராமல் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

இந்த அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்கு பெரும் ஒத்துழைப்புக்களை வழங்கிய முப்படையினர் மற்றும் அரச ஊழியர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எனவே, இனிமேல் இவ்வாறான அனர்த்தம் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அத்துடன் வெள்ளம் ஏற்படுவதற்கு காரணமான சட்டவிரோத குடியிருப்புக்களை உடன் நீக்க வேண்டும். இனி மேலும் இவ்வாறான குடியிருப்புகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி அரியஜோதி முருகேசபிள்ளை**



எமது சங்க உறுப்பினரான Dr.திருமதி. ஜெனிநோபேட் எமில் அவர்களின் அன்புத்தாயார் **திருமதி அரியஜோதி முருகேசபிள்ளை** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (9091)

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்.**


## இராசி பலன்

01.06.2017
(வைகாசி 18, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சப்தமி பிற்பகல் 12.18 மணிவரை
மகம் பிற்பகல் 4.49 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சர்வதேச சிறுவர்கள் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம், திருவோணம் | | |
| | | | ராகு சந் |
| | சனி | | குரு |

**மேடம்:** பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழிலில் மேன்மையும் [illegible]ம் கிடைக்கும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு, புதிய விடயங்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** உறவு- பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் மேன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை கரவெட்டி பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் கே.சிறிமோகனன் இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் ரஜீவ், சமுர்த்தி முகாமையாளர், மற்றும் பிரதேச செயலகத்தின் கணக்காளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டு "புகைத்தலை ஒழிப்போம் புதுவாழ்வு பெறுவோம்" என சத்தியப் பிரமாணம் செய்தனர். (படங்கள் :- மகாலிங்கம்)

# தேசிய கல்வி நிறுவக பட்டக் கற்கை நெறிகளுக்கு பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

(கோப்பாய்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற கல்விமாணி, முதுமாணி பட்டக்கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இதற்கான அங்கீகாரக் கடிதமும் ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப் பட்டக் கற்கை நெறியின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி செல்வராணி இளங்கோ தெரிவித்தார்.

2011 ஆம் 2013 ஆம் கல்வியாண்டில் பிராந்திய நிலையத்தில் கல்வி மாணிப் பட்டம் பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிறைவு விழாவானது கடந்த 27 ஆம் திகதி நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய கல்வி நிறுவகப் பட்டக் கற்கை நெறிகள் பல்கலைக்கழகங்களினால் நடத்தப்படுகின்ற பட்டக் கற்கை நெறிகளுக்கு சமமாக இருப்பதனால் இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியதாகவும் பொருத்தமான கலைத் திட்ட வடிவமைப்புக்களைக் கொண்டதாகவும் கல்விமாணி, முதுமாணிப்பட்ட நெறிகள் சர்வதேச தரத்திற்கு ஏற்ற விதத்தில் நடைபெறுகின்றன.

இவ் வருடம் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் கல்விமாணிப் பட்ட நெறிக்கு விண்ணப்பித்திருக்கின்றார்கள். இவர்களில் 100 புள்ளிகளுக்கு மேல் பெறும்மாணவர்களுக்குநான்கு ஆண்டுகள் கொண்ட விசேட கற்கை நெறியாகவும் சாதாரண வெட்டுப் புள்ளிகளை பெறும் மாணவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கொண்ட பொதுக் கற்கை நெறியாகவும் நடைபெறவிருப்பது சிறப்பான விடயமாகும். எனவே இப் பயிற்சிகளைப் பெற்று பட்டதாரிகளாக வெளியேறுபவர்கள் பாடசாலைகளில் ஏனைய ஆசிரியர்கள் போன்று மாணவர்களின் அடைவு மட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நெல்லியடி பிராந்திய நிலைய இணைப்பாளர் கலாநிதி எஸ்.சேதுராஜா, வடமாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன், வடமாகாண முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் சிவராசா, கல்வியியலாளர்கள், துறைசார் விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-5-108)

# புகைத்தல் எதிர்ப்பு; கொடிவார சேமிப்பு

(யாழ்ப்பாணம்)

புகைத்தல்எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பிரதேச ரீதியாக கொடி வார சேமிப்பு நேற்றைய தினத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஒவ்வொரு பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களால் கிராமங்கள், பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள், ஊர்வலங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கொடிவார சேமிப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பொது இடங்களில் பதாகைகள், ஸ்டிக்கர்கள் என்பன காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்றையதினம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஒவ்வொரு பிரதேசங்களிலும் புகைத்தல் எதிர்ப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-9)

# மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 31 ஆவது நினைவு தினம்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்களின் 31 ஆவது வருட நினைவு தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 5.45 மணிக்கு ஓய்வுபெற்ற சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் உப அதிபர் திருமதி யூயின் யூலியஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நினைவுத் தூபியில் இரங்கல் வழிபாடும் நடைபெறவுள்ளது. புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எம்.வி. இ. ரவிச்சந்திரன் ஈகச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைப்பார். (இ-5-106)

# பிரதேச செயலகங்கள் ஊடாக உதவிகளை வழங்க முடியும்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

தெற்கில்இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உதவி செய்ய விரும்புவர்கள் யாழ். மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகங்கள் ஊடாக தமது உதவிகளை வழங்க முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

தென் பகுதியில் தொடர் மழை மற்றும் மண்சரிவினால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பல்வேறு பகுதியினர் உதவிகளை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்க முடியாதவர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் யாழ். மாவட்ட செயலகத்திலும் நாளை வெள்ளிக்கிழமைக்குள் ஒப்படைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# பொதுக் கூட்டம்

வட்டு கிழக்கு, சித்தன் கேணி அந்திரான் ஜனசக்தி தோற் பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டு கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்க வளாகத்தில் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் செல்வி.ச. பிரேமினி, கௌரவ விருந்தினர்களாக சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி.கி.செந்தூரன், யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன், யாழ். மாவட்ட உதவிக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தி.பொன்மோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு மணியர்பதி வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு 7 மணிக்கு திருக்கல் யாணமும் இடம்பெறும். இதே வேளை நாளை 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (இ-7)

# பருத்தித்துறை பிரதான வீதி எப்போது திருத்தப்படும்?

## அவதிப்படும் பயணிகள் கேள்வி

கொடிகாமம் தொடக்கம் பருத்தித்துறை பிரதான வீதியானது, பல வருடங்களாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பயணிகளும் வாகன சாரதிகளும் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடைப்பட்ட இப் பிரதான வீதியானது காப்பெற் வீதியாக மாற்றுவதற்கு கடந்த வருடம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் அதன் பின் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் கேட்டபோது இந்த வருடம் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர். இந்த வருடமும் இரு தடவைகள் வீதி அளவீடுகள் மேற்கொள்ளபட்டு வீதி அகலிப்பு குறியீடுகளுடன் வீதியின் இரு மருங்கிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அடையாளப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு பல மாதங்களாகியும் காப்பெற் போடுவதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பயணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும் இவ் வீதியால் பயணிப்பதனால் சில வேளைகளில் வாகனங்கள் பழுதடைவதாகவும் இதனால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

எனவே மழைகாலம் தொடங்குவதற்கு முன்பாக காலதாமதமின்றி இவ் வீதியை செப்பனிடுமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-103)

# மஹோற்சவம்

(மந்துவில்)

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்றைய தினம் விசேட பொங்கலும் நடைபெறவுள்ளது தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (இ-5-101)

# விளையாட்டு விழா

இலங்கை வங்கியின் வடமாகாணத்திற்கான வருடாந்த விளையாட்டுவிழா நாளை மறுதினம் 3 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கலந்து கொள்வார். (இ-3)

# வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

கொழும்புத்துறை, மகேந்திரபுரம் கடற்கரை வீதியில் பல நாட்களாக வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை என பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் வீதியில் பயணிப்போரும் அப் பகுதியில் குடியிருக்கும் மக்களும் பல சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



நல்லாட்சி என்று கூறிக் கொள்ளும் ஆட்சியாளர்களும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் இன்றுவரை தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையும் விடிவும் இன்றி சிறைகளிலேயே தமது வாழ்வை கழிக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் உண்




## சுமந்திரன் எம்.பிக்கு ஆஸியில் கடும் எதிர்ப்பு

ணாவிரதப் போராட்டம் நடத்தினால் மட்டும் அவர்களைச் சென்று பார்ப்பது என்ற ஒரு நிபந்தனையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை செயற்படுகின்றது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு அறவே விருப்பமில்லை என்பது நிதர்சனமானது. விடுதலைப்புலிப் போராளிகள் மீது கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு கடும் கோபம் உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

விடுதலைப்புலிகளின் மரண தண்டனைப் பட்டியலில் இரா. சம்பந்தனின் பெயர் முதல் நிலையில் இருந்தது என்ற அடிப்படையில் விடுதலைப்புலிப் போராளிகள் மீது சம்பந்தர் தரப்பிற்கு இயல்பான கோபம் இருக்கவே செய்கிறது என்ற உண்மையை இவ்விடத்தில் பதிவு செய்வது தவிர்க்க முடியாததாகிறது.

எது எவ்வாறாயினும் நல்லாட்சி தானாக நினைத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை .வழங்கினால் அன்றி தமிழ் அரசியல் தலைமை நடவடிக்கை எடுத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடு தலை கிடைக்கும் என்பது இந்த ஜென்மத்தில் நடக்கப்போகும் காரியமல்ல.

இவை ஒருபுறம் இருக்க, 2015 ஆம் ஆண்டு ஜெனிவாக்கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொண்ட முறையும் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடந்து முடிந்து விட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பரப்புரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை மீது தமிழ் மக்களுக்கு கடும் வெறுப்பை ஏற்படுத்தியது.

அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழ் உறவுகள் கூட்டமைப்பின் தலைமைமீது தீராத ஆத்திரம் கொண்டனர். இதில் நியாயமும் இருக்கவே செய்கிறது.

2009ஆம் ஆண்டு வன்னிப்போர் உச்சம் பெற்ற போது இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெறுகிறது என உரக்கக் கோசம் எழுப்பி ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி புலம்பெயர் தமிழ் உறவுகள் எங்கெல்லாம் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தியவர்கள் எம் புலம்பெயர் தமிழ் உறவுகள்.

வன்னிப் போரில் தமிழினத்திற்கு அநீதி நடந்தது, போர்க் குற்றம் இடம்பெற்றது என்பதை ஏற்று அதனை ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் முன்கொண்டு வருவதில் புலம்பெயர் உறவுகளின் வகிபங்கு காத்திரமானது.

2009 ஆம் ஆண்டு வன்னிப் பெரு நிலப்பரப்பில் எம் உறவுகள் துடிதுடித்துப் பலியாகியபோது உண்ணாமல், உறங்காமல் பனியிலும் வெயிலிலும் கால்நடையாய்- பேரணியாய்- ஆர்ப்பாட்டமாய் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திய புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் அறிவிப்பு ஆறாத கோபத்தைக் கொடுத்தது.

நிலைமை இதுவாக இருக்கையில், எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடவும் அவுஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைச் சந்திப்பதற்குமான நிகழ்வொன்றில் கலந்து கொள்ளும் பொருட்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயம் 08.11.2015 அன்று இடம்பெற்றது. நிகழ்வு மண்டபத்திற்கு ஏற்பாட்டாளர்களால் சுமந்திரன் அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கு கூடி நின்ற இளைஞர்கள் சுமந்திரனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இளைஞர்கள் சிலர் சுமந்திரனை நோக்கிப் பாயும் வேகத்தில் இருக்க, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அதிர்ந்து போயினர்.

நிகழ்ச்சியை நடத்துவதை விட சுமந்திரனைப் பாதுகாப்பாக கூட்டிச் செல்வதே புத்திசாலித்தனமானது என அவர்கள் முடிவு செய்தனர்.

உடனடியாக அவுஸ்திரேலியப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட, அவர்கள் அங்கு விரைந்து வந்து பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனையும் அவருடன் சென்றவர்களையும் பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர்.

எந்த நிகழ்விற்காக சுமந்திரன் அவுஸ்திரேலியா சென்றாரோ அந்த நிகழ்வு தமிழ் இளைஞர்களின் எதிர்ப்பால் நடைபெறாமல் போயிற்று.

இஃது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு விழுந்த முதல் அடி எனலாம். எனினும் தமிழ் இளைஞர்களின் எதிர்ப்பு கூட்டமைப்பிற்கு புறவயமான தாக்கத்தை ஏற்படுத்தாதது போல கூட்டமைப்பின் தலைமை காட்டிக் கொண்டது.

ஆயினும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடந்த சம்பவம் அவர்களுக்கு அகவயமான தாக்கத்தைக் கடுமையாக ஏற்படுத்தியிருந்தது என்பது உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றபோது தமிழ் இளைஞர்கள் ஒன்றுகூடி அவரை வரவேற்று எம் இனத்தின் எதிர்கால நன்மைக்காக புலம் பெயர் தமிழர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்றே ஆராய்ந்திருக்க வேண்டும்.

ஆனால் எம் தமிழ்த் தலைமையின் பிறழ்வுத் தனத்தால், சென்றவரை எதிர்த்து தம் உணர்வை வெளிப்படுத்துவதே ஒரே வழியென அவுஸ்திரேலிய வாழ் தமிழ் இளைஞர்கள் முடிவு செய்தனர். அதுதான் அங்கு நடந்த சம்பவம்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக வழியில் போராடும் மக்களின் உணர்வுகளை அரசு கண்டு கொள்ளாமல் இருக்குமாகவிருந்தால் விளைவுகள் பாரதூரமானவையாக அமையும்

## எச்சரிக்கிறார் சிறிதரன் எம்.பி.



ஜனநாயக வழியில் போராடும் மக்கள் உணர்வுகளை அரசு கண்டு கொள்ளாமல் இருக்குமாகவிருந்தால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக அமையும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமது உறவுகளை மீட்பதற்காக ஜனநாயக வழியில் போராடி வரும் எமது மக்களின் உணர்வுகளை இந்த அரசும் கண்டுகொள்ளாமல் இருந்து காலங்கடத்துமாகவிருந்தால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் எச்சரித்துள்ளார்.

காணாமல் போனவர்களது விடுதலையை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கிளிநொச்சி மக்களது போராட்டம் நேற்று முன்தினம் நூறு நாட்கள் கடந்து விட்ட போதும் அவர்களை இலங்கை அரசு கண்டு கொள்ளாத நிலையில் அவர்கள் தமது போராட்ட வடிவத்தை மாற்றி நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை ஏ-9 வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இப்போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மக்கள் என ஆயிரக் கணக்கானவர்கள் பங்கெடுத்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கும் ஆதரவு வழங்கியிருந்தார்கள். இப்போராட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் இது தொடர்பில் கேட்கப்பட்ட போது மேற்படி கூறியிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் இறுதியில் தம்முடன் வந்த தமது உறவுகளை விசாணையின் பின்னர் விடுதலை செய்வதாகக் கூறி பிடித்துச் சென்ற இலங்கை அரச படைகளான இராணுவத்தினர் இன்னும் அவர்களை விடுவிக்காமலும் அவர்கள் பற்றிய விபரங்களை வெளியிடாமலும் உள்ளமையால் தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி மக்கள் இன்றுடன் 100 ஆவது நாளாக நேற்று முன்தினம் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

இலங்கை அரச படைகளான இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட உறவுகளை விடுவிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கப்பால் அரச படைகளால் பிடித்துச் செல்லப்பட்ட உறவுகள் எங்கே உள்ளார்கள் என்பது பற்றிய விபரங்கள் எதனையும் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் பொறுப்பற்ற நிலையில் கண்மூடி இருந்து வருகின்றமையானது காணாமல் போனவர்களது உறவுகள் மத்தியில் பாரிய விரக்தியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை நாட்களும் அமைதியான முறையில் தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமது உறவுகளை எங்கே வைத்துள்ளீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள் என்று இலங்கை அரசாங்கத்தைக் கோரியும் இரவு- பகலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களை நல்லாட்சி என்று கூறும் இந்த அரசு கண்டு கொள்ளாத நிலையில் தமது போராட்டத்தின் வடிவத்தை மாற்றி கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆயிரக்கணக்கானோர் ஒன்றிணைந்து ஏ-9 வீதியை மறித்து அவ்வீதியூடான போக்குவரத்தை நிறுத்தியுள்ளார்கள்.

இது இந்த மக்களது உணர்வுகளின் வெளிப்பாடாகவே அமைந்து காணப்படுகின்றது. இந்நிலையை பொறுப்புள்ள இலங்கை அரசாங்கம் இனியும் கண்டு கொள்ளாமல் கண்மூடி இருக்குமாகவிருந்தால் இதன் விளைவுகள் எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமானவையாகவே அமையும். இது இந்த நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல.

இந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு இவர்களது மனிதாபிமானப் பிரச்சினைக்கு இலங்கை அரசு விரைவாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து கண்மூடியிருந்து செயற்படுமாகவிருந்தால் எமது மக்கள் எடுக்கும் எந்த முடிவுகளுக்கும் நாம் அவர்களுடன் கூட இருந்து அவர்களுக்காகச் செயற்படுவோம்” என்று கூறினார். (2-312)




### ஒட்டுசுட்டான், ஒலுமடு பகுதிகளில்

# கட்டாக்காலி கால்நடைகளை அடுத்த வாரம் முதல் பிடிக்க நடவடிக்கை

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாக வீதியில் அலைந்து திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் நடராசா ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிந்து வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருக்கும் கால்நடைகளை எமது பிரதேச சபையின் பணியாளர்கள் பொலிஸார், கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகள் கட்டிவைத்து பராமரிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டதன் பின்னர் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து வருகின்றோம்.

தற்போது புதுக்குடியிருப்பு உப அலுவலகப்பிரிவுகளின்கீழ் நடைபெற்று வரும்இந்த நடவடிக்கை எதிர்வரும்வாரங்களில் ஒலுமடு, ஒட்டுசுட்டான் ஆகிய உப அலுவலகப் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள், கால்நடை உரிமையாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, ஒலிபெருக்கிமூலம் இந்தத் தகவல் அறிவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருட்கள் சேகரிப்பு



நாட்டின் தென்பகுதியில் சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நிவாரணப் பொருட்கள் வர்த்தக நிலையங்களுக்கு சென்று சேகரிக்கப்பட்டன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிவாரணப்பொருட்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட நிவாரணப்பொருட்கள் அனைத்தும் நேற்றைய தினம்காலி மாவட்டத்திலுள்ள மக்களிடம்கையளிப்பதற்காக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தைச்சேர்ந்த அலுவலர்கள் கொண்டு சென்றனர். (2-310)

# தென்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொருட்கள் சேகரித்து கையளிப்பு



சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் வவுனியா பிரதேச செயலகத்திடம் நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தென்பகுதியில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக வவுனியா கூமாங்குளம் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் உலர் உணவுப் பொருட்களை சேகரித்து வவுனியா பிரதேச செயலகத்திடம் கையளித்துள்ளது.

கூமாங்குளம் கிராம சேவகர் கம்ஜகன் தலைமையில் கூமாங்குளம் சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இணைந்து வீடு வீடாகச் சென்று சேகரித்த உலர் உணவுப் பொருட்களையே இவ்வாறு கையளித்தது. (2-250)

# முல்லை.இ.செ.சங்க புதிய நிர்வாகத் தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அருகாமையிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர்ச.திருச்செல்வம்தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த கூட்டத்தின் போது, கடந்த ஆண்டு நடைபெற்ற வேலைத் திட்டங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

தலைவராக ச.திருச்செல்வம், உப தலைவராக சு.மரியநாயகம், செயலாளராக செ. சிவராசா, பொருளாளராக- ச. நாகரத்தினம் ஆகியோர் தெரிவாகினார்.

செயற்குழு உறுப்பினர்களாக, செ.சதீஸ்வரன், சி. கணபதிப்பிள்ளை, க.அசோகராஜா,பா.நவரத்தினம், தே.தயாளன், தே.ஶ்ரீகமலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வின் போது, பிரதம அதிதிகளாக, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய தலைமைச் செயலகத்தின் மத்திய செயற் குழு உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைவருமான செ.பாலகிருஷ்ணன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் மைக்கல்பிள்ளை-ஜேசு நெறிஜோசப் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (2-15-134)

# போட்டிப்பரீட்சைக்கு இலவச வழிகாட்டல் வகுப்புகள்

அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தெரிவு திறந்த போட்டிப் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

வகுப்புகள் அனைத்தும் ஜூன் மாதம் 5, 7, 9 ஆகிய திணங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.

அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர் குழுவினரால் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு வழிகாட்டல் வகுப்புக்கள் நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்படும். ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 021 228 3363 என்ற கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வெற்றிடம் இருப்பின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் தொடர்பில் இனியும் காலதாமதம் வேண்டாம் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்

## சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு கோருகின்றது

(பரந்தன்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளைத் தேடித் தருமாறு கேட்டு கிளிநொச்சியில் ஆரம்பித்த போராட்டம் தீர்வேதுமில்லாத நிலையிலே 100 ஆவது நாளை எட்டியிருக்கிறது.

தங்களுடைய நியாயமான பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு தீர்வு கிட்டும். காணாமலாக்கப்பட்ட தங்களின் உறவுகளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தப் போராட்டத்தை இந்த மக்கள் ஆரம்பித்திருந்தனர்.

ஆனால் அந்த நம்பிக்கை இந்த 100 களிலும் வெற்றியடையவில்லை. இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே பாதிக்கப்பட்டு துயரினால் வருந்திக் கொண்டிருந்த மக்கள், தாங்கள் நடத்திய இந்த நீண்ட போராட்டத்துக்குச் சாதகமான பதில் கிட்டவில்லை என்பது இரட்டைப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மக்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு. இனியும் கால தாமதங்களைச் செய்யாமல் உடனடியாக உரிய தீர்வினை முன்வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தெரிவிக்கின்றது.

தற்போதைய ஆட்சியானது மிகக்கூடுதலான ஜனநாயக அடித்தளத்தைக் கொண்டது எனவும் பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளது என்றும் கூறப்படுவதைக் கருத்திற் கொண்டே, இந்த நெடிய போராட்டத்தை நம்பிக்கையோடு இந்த மக்கள் நடத்தி வருகின்றனர்.

குறைந்தபட்சம் இந்த மக்களை ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாட்டையாவது செய்திருக்க வேணும். அதற்கான தார்மீகப் பொறுப்பு சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு.

தனிப்பட்ட ரீதியிலான அரசியல் தேவைகளுக்காக நேரம் ஒதுக்கி, தங்கள் வீடுகளுக்கு ஜனாதிபதியையும் பிரதமரையும் அழைக்கின்ற அக்கறையை ஏன் இந்த மக்களின் இந்தச் சக்திகள் எடுக்கவில்லை என்பதை இந்த மக்களோடு இணைந்து சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு கேட்கிறது.

வலிகளைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களுக்கு தீர்வே மகத்தான மருந்தாகும். அந்த மக்களைத் தொடர்ந்தும் வலிகளில் துவள விடுவதில்லை.

ஆகவே, இனியும் தாமதங்களை நீட்டிச் செல்லாமல், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான முயற்சியை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

இந்த நாடு கண்ணீருடன் வாழ்கின்ற மக்களைக் கொண்டிருக்க வேண்டாம் என்று உறுதிசெய்வோம். உறவுகளை இழப்பதும் உறவுகள் எங்கே என்று தெரியாமல் தவிப்பதும் ஒரு நாட்டிற்கு ஏற்படுகின்ற மிகக் கொடியதொரு நிலையாகும். இதற்குக் காரணமான அரசியல் சூழல் முடிவுக்கு வந்ததைப் போல இந்தப் பிரச்சினையும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு கோருகிறது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளோடு இணைந்து அவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு எமது ஆதரவையும் பங்களிப்பையும் தொடர்ந்தும் நாம் வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம்.

மிகக் கூடிய விரைவில் எல்லோரும் கூடிய மகிழ்ச்சியான ஒரு தருணம் வரும் என்ற நம்பிக்கையோடு இந்தப் போராட்டத்திற்கான தார்மீக ஆதரவினை சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு வழங்குகின்றது என்றார். (2-312)




# புனர்வாழ்வு பெற்ற நால்வர் குடும்பங்களுடன் இணைவு



வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் ஒருவருடம் புனர்வாழ்வு பெற்று-வந்த முன்னாள் விடுதலைப் புலிகள் நான்கு பேர் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக, நிலையப் பயிற்சிப் பொறுப்பாளர் சித்திரகுணதுங்க, சிரேஷ்ட அதிகாரி சமன்பெரேரா, பூந்தோட்ட நிலை பொறுப்பதிகாரி கேணல் ஹேமிடோன், சர்வமதத் தலைவர்கள், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், பொலிஸார், விமானப் படையினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புனர்வாழ் நிலையத்தில் ஒருவருட புனர்வாழ்வு பெற்ற கிளிநொச்சியைச் சேர்ந்த சற்குணசிங்கம் தயாபரன் (வயது-44), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விக்னராசா துஷ்யந்தன் (வயது-35), ஒட்டுசுட்டானைச் சேர்ந்த முத்துலிங்கம் ஜெயகாந்தன் (வயது-37), பேலியகொடவைச் சேர்ந்த அஜித் ரோகண (வயது-48) ஆகிய நான்கு பேரே தமது குடும்பத்துடன் இணைத்து வைக்கப்பட்டவர்களாவர். (2-250)

# அனர்த்த பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு உதவிட நிவாரண சேகரிப்பு மன்னாரில் ஆரம்பம்

நாட்டில் தற்போது நிலவி வரும் அசாதாரண கால நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை மேற்கொள்ளும் வகை யில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண சேகரிப்பிற்கு மன்னார் மாவட்ட மக்களை பூரண ஆதரவு வழங்குமாறு இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் ஜே.ஜே.கெனடி கேட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் நிவாரண சேகரிப்பு தொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தென் பகுதியில் ஏற்பட்ட திடீர் அனர்த்தம் காரணமாக 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய 6 மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரின் தலைமையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்கொள்ளும் வகையில் நிவாரணம் சேகரிப்பது தொடர்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் ஆயர் இல்லத்தில் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் மன்னார் ஆயர் இல்லம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை, மன்னார் வாழ்வுதயம் ஆகியவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் நிவாரணப் பொருட்கள் சேகரிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

எனவே மன்னார் மாவட்ட மக்கள் தங்களால் முடிந்த நிவாரண உதவிகளை எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்பதாக மன்னார் கத்தோலிக்க பங்கு பணிமனைகள், மன்னார் கரிதாஸ்வாழ்வுதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மன்னார் கிளை, இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகிய இடங்களில் நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவிகளை வழங்கி வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-4)

# புகைத்தல் எதிர்ப்பு தினம்

## புகைத்தல் பொருட்களை விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கல்





நாடளாவிய ரீதியில் புகைத்தல் எதிர்ப்பு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான பேரணி ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் முள்ளியவளை நகரில் நடைபெற்றது.

குறித்த பேரணி முள்ளியவளை நகர்பகுதியிலிருந்து நகர்ந்து முள்ளியவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சென்றடைந்தது. இறுதியில் அங்கு விழிப்புணர்வு கருத்தரங்கும் ஒன்று நடைபெற்றது. இதன்போது தமது வர்த்தக நிலையங்களில் புகைத்தல் பொருட்களை விற்காத வர்த்தகர்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (2-310)

# ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பிரதேச கலாசார அதிகார சபை நிறுவப்படும்

இலங்கை மத்திய அரசின் புதிய சுற்றுநிருபத்திற்கமைவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கலாசார அதிகார சபை நிறுவப்படவுள்ளது. கடந்த வாரம் பூநகரி பிரதேச கலாசார அதிகார சபையை நிறுவுவதற்கான பொதுக்கூட்டம் பூநகரி பிரதேசசெயலர் சி.க.கிருஸ்ணேந்திரன் தலைமையில்நடைபெற்றது. பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் சமுகமளித்திருந்தனர்.

புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. தலைவராக பிரதேச செயலர் சி.க.கிருஸ்ணேந்திரன் உப தலைவர் பொன். தில்லைநாதன், செயலாளர் இ.பார்த்தீபன், உப செயலாளர் இரா. செல்வராசா, பொருளாளர் ப.ஸ்ரீவனசன் ஆகியோர் தெரிவாகினர்.

அதிகாரசபைஒருங்கிணைப்பாளராக கலாசார உத்தியோகத்தர்திருமதி மகவிதா, ஆலோசகராக கு.சுமுகலிங்கம், கணக்காய்வாளராக பிரதேச செயலக கணக்காளர் பே.பிரேமச்சந்திரனும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-84)

# இரு கடைகள் சேதம்

வவுனியா மதினா நகர் பகுதியில் அமைந்துள்ள இரண்டு முஸ்லிம்கடைகள்நேற்று முன்தினம்இரவு இனந்தெரியாத நபர்களினரல் சேதமாக்கப்பட்டுள்ளது.இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மதினா நகர் பள்ளிவாசலுக்கு அருகே அமைந்துள்ள முஸ்ஸிம் உண வகத்தின் முன்பக்கம் தீயூட்டப்பட்டதுடன் அருகே இருந்த தொலைத்தொடர்பு நிலையத்தின் விளம்பரப்பலகை, மின்குமிழ் என்பவற்றை இனந்தெரியாத நபர்கள் சேதமாக்கி விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா மகாறம்பைக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காகப் பிரார்த்தனை

வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் ஏராளமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதையிட்டும் பலர் உயிரிழந்திருப்பதையிட்டும் அகில இலங்கை இந்துமா மன்றம் மிகுந்த கவலையடைகின்றது. இந்த அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாமன்றம் தன்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆத்ம சாந்திக்காகவும் இவ் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை கூடிய சீக்கிரம் சீரடையவும் நாளை 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலயங்களில் விசேட பூசைகளையும் மக்கள் சிறப்பு வழிபாடுகளையும் செய்து பிரார்த்திக்க ஒழுங்குகளைச் செய்யும்படி இந்து மக்களையும் சகலஆலயங்களையும் இந்து சமய நிறு வனங்களையும் அகிலஇலங்கை இந்துமா மன்றம் கேட்டுக் கொள் கின்றது என அந்த மன்றத் தின் தலைவர், செயலாளர் ஆகியோர் அறிவித்துள்ளனர். (இ-3)

# மாணவிகள் மீது துஷ்பிரயோகம்; கண்டித்து மாகாணம் தழுவிய ஒருநாள் பகிஷ்கரிப்பு

திருகோணமலை மாவட்டம் மூதூர் கல்வி வலயத்திலுள்ள பெரியவெளி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவிகள் மூவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதான விடயத்தைக் கண்டிக்கும் வகையிலும் நடந்த சம்பவத்திற்கு நீதி விசாரணையோடு தண்டனை பெற்றுக் கொடுக்கக் கோரியும் மாகாணம் தழுவிய அனைத்து மாணவர் ஒரு நாள் பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.ஜெயராஜா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் நேற்றுப் புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையில்,

மூதூர் பெரிய வெளிப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு மாணவிகள் மூவர் கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரத்தியேக வகுப்பிற்குச் சென்றவேளையில் சிலரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களில் வடக்கு-கிழக்கில் மாணவர்கள் அதிகம் இதுபோன்ற பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

வீட்டில், வேலைத் தளங்களில் மட்டுமன்றி பாடசாலைகளில், பிரத்தியேக வகுப்புக்குச் செல்லுமிடங்களில் அதிபர்கள், ஆசிரியர்களின் செயற்பாடுகளினாலும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இச்செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனைக் கட்டுப்படுத்த சமூக ஆர்வலர்களும் புத்திஜீவிகளும் மாத்திரம் செயற்பட்டால் போதாது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் பொலிஸார் நீதிக்குத்தலை வணங்கி செயற்படவேண்டும்.

குற்றச் செயலில் ஈடுபடுவோரை செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், இனம், மதம், சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதம் பார்த்து சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தக் கூடாது.

ஆனால், அரசியல்வாதிகளோ பொலிஸாரோ சமத்துவமான நீதியை அழுத்தம் கொடுக்காமல் ஒருபோதும் பெற்றுத் தரப்போவதில்லை.

எனவே எமது உரிமையை வென்றெடுப்பதற்கும், எமது அனைத்து மாணவ சமுதாயத்தையும் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாப்பதற்கும் நாம் போராட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே பாதிக்கப்பட்ட சிறுமியருக்கு நீதியைப் பெற் றுக் கொடுக்க நாளை வெள்ளிக்கிழமையன்று கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாணவர்களும் இன, மத, மொழி பேதமின்றி பாடசாலையைப் புறக்கணித்து மாணவர்களின் பலத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# குற்றவாளிகள் மீதான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்

## கிழக்கு முதல்வர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் மீதான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என கிழக்கு முதல்வர் நஷீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மல்லிகைத்தீவு பெரியவெளிப் பகுதியில் சிறுமிகள் மூவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், கிழக்கு முதல்வர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க விசேட பொலிஸ் குழுவொன்றை நியமிக்குமாறு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ள கிழக்கு முதல்வர், சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, சிறுமிகள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் கண்டிக்கத்தக்க விடயமாகும்எனவும்அவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் குறிப்பிட்டுள்ள கிழக்கு முதல்வர், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜெயக்குமார் ஹிருஷாந்
Bsc in Computation & Management
கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தில் 25.05.2017 அன்று நடைபெற்ற 75 ஆவது பட்டமளிப்பு விழாவில் கற்கோவளத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் ஹிருஷாந் அவர்கள் Bsc in Computation & Management பட்டத்தை பெற்றமைக்காக அவரை பாராட்டி மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
இரத்தினவேலு குடும்பத்தினர்

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா:33செவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:கணனி பொறியியலாளர்
தொ.இ: B/6203

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 36
தகைமை/தொழில்:வைத்தியர்
தொ.இ: B/6206

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி.பா: 17செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/Lகனடா
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/6202

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 5
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/6207

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா: 51
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1609

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 62
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1716

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா: 15 செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/1717

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 6 1/2 செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/2071

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

சேவை நலன் பாராட்டு வாழ்த்து
திருமதி. சுந்தராம்பாள் கதிர்காமு

1. கிளி/ கரியாலை நாகபடுவான் இல-03 அ.த.க. பாடசாலை - 01.09.1992-28.02.1993
2. கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் 01.03.1993 - 17.01.1999
3.கிளி/ அக்கராயன் வித்தியாலயம் 18.01.1999 - 31.06.1999
4.வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் - 01.07.1999 - 06.03.2005
5.யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை - 07.03.2005 - 06.01.2013
6. கிளி. கிளிநொச்சி மகா வித்தியாலயம் - 07.01.2013 - 26.05.2017



ஆற்றலின் திருவுருவாய்
அன்பின் நிறைவடிவாய்
அகிலத்தோர் உயர்ந்தேத்தும்
ஆசிரியப் பணிபுரிந்தீர்
உம் சொல்நயத்தில் வகுப்பினிக்கும்
செயற்றிறனில் சபை சிறக்கும்
பாரதியின் புதுமகளாய்
மிடுக்கான நடையுடனே
அழகொளிர வலம் வருவீர்
உள்ளதை நேரே சொல்லும்
பாங்குடைய திருமகளே!
மணிவிழாக்கண்டு நீர்
சேவைதனில் ஓய்ந்தாலும்
உம் வண்ணத்தில் உருவானோர்
அகிலத்தில் உம் பேர் சொல்வர்
மிடி சூழ்ந்த காலத்தில்
துடிப்போடு பணிபுரிந்தீர்
இறை அருளோடு என்றும் நீர்
இனிதே வாழியவே!

(C-6734)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி. கிளிநொச்சி
மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையம்

## ஒரு பார்வை

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் ஒரு தொழிற்சாலையாக கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. இந்த உற்பத்தி தொழிற்சாலையானது, முல்லைத்தீவு பிரதான வீதியாகிய ஏ-35 வீதியில் கிளிநொச்சி- பரந்தன் சந்தியில் இருந்து 7 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கண்டாவளைச் சந்தியில் அமைந்துள்ளது.

கடந்த 1994 ஆம் ஆண்டு குறித்த இடத்தில் பலகோடி ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட வெல்லத் தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை, சாராய வடிசாலை என்பன மிகவும் பிரமாண்டமான கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு, கடந்த 15.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று வரை மக்களுக்கான சிறந்த



வெல்ல உற்பத்தியை தரமான முறையில் உற்பத்தி செய்து வருகின்றது.

தற்போது மக்கள் மத்

ளனர்.

இந்த உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூலவளம் இருந்தும், வெல்லம் உற்பத்தி செய்வதற்கான ஏனைய வளங்கள் எமக்கு போதுமானதாக இல்லை.

குறிப்பாக, நிதிவசதிகள், தளபாடங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுகள் என்பன போதுமானதாக

லம் வைத்திருக்க முடியாத நிலை மற்றும் ஒருநாள் முழுவதும் பாணியைக் காய்ச்ச வேண்டிய நிலை காணப்படுகிறது. எனவே, இதனை குறுகிய நேரத்தில் செய்வதற்கான தொழில் நுட்ப அறிவு தேவை யாகவுள்ளது.

எனவே, இவற்றை செய்வதற்கு வெளிநாட்டில் உள்ள எமது தாயக உறவுகள் அதிலும் குறிப்பாக மூலதனம் வழங்கி பெருமளவில் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கக்கூடியவர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூக சேவையாளர்கள்என அனைவரும் முன்வந்தால் இன்னும் நாங்கள் சிறப்பான முறையில் இதனை முன்னெடுக்க முடியும்.

ர்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு இந்த வெல்ல உற்பத்தி நிலையத்தில் வேலை வாய்ப்புகளை நாம் வழங்கி வருகின்றோம். எதிர்காலத்தில் இந்த உற்பத்தி நிலையம் விஸ்தரிக்கப்படும்போது இன்னும் ஏராளமான்வர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடிய சூழல் உருவாகும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையா

வருகின்றோம்.

சிலர் கலப்படமான வெல்லங்களை உற்பத்தி செய்து கிளி. நகரில் உள்ள பல இடங்களிலும் விற்பனைக்கு வழங்கி பல வர்த்தகர்கள் விற்பனை செய்வதை நாம் அறிகிறோம்.

நிச்சயமாக அவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் இவ்விடத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன், நாங்கள் கலப்படம் அற்ற தரமான வெல்லங்களை உற்பத்தி செய்து வருகின்றோம்.

# கைத்தொழிலை ஊக்கப்படுத்துவோம் பொருளாதார வளத்தை பெருக்குவோம்

அப்போதைய தடைப்படுத்தப்பட்ட பொருளாதார நிலையில் வாழ்ந்த மக்களின் தேவைகளை முழுமையாக நிறை வேற்றியிருந்த சூழலில், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களினால் குறித்த தொழிற்சாலைகள் முற்று முழுதாக அனைத்துக் கட்டடங்களும் அழிவடைந்த நிலையில் தரைமட்டமாக காணப்பட்டது. மீண்டும் மீள் குடியேற்றத்திற்கு பின்னர், 2012 ஆம் ஆண்டு சிறுகைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சாலை, 2014 ஆம் ஆண்டு யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 12.39 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில்

தியில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஒரு நோயாக நீரிழிவு காணப்படுகிறது. இந்த நோய் காரண மாக சீனித் தன்மை குறைந்த இந்த வெல்லங்களை மக்கள் கொள்வனவு செய்வதில் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

வர்த்தகர்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் ஊடாக காகில்ஸ் பூட் சிற்றிக்கு 30 ஆயிரம் கிலோ வெல்லங்களை விநியோகம் செய்ய எண்ணியுள்ளோம். இருந்தும் எமக்கு இந்த தொகை போதுமானதாகவில்லை. இதற்கு காரணம் பலர் அண்மையில் எமக்கு ஆயிரக்கணக்கான கிலோ வெல்லங்களை கொள்வனவு செய்வதற்கு தொடர்பு கொண்டுள்


இல்லை. முக்கியமாக விறகுகளைக் கொள்வனவு செய்வதற்கு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

விறகுகளைக் கொள்வனவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு கடிதங்கள் அனுப்பினாலும் அது நிராகரிக்கப் படுகிறது. தளபாடங்களை எடுத்துக்கொண்டால் வெல்லங்களை ஒவ்வொரு அளவிலும், ஒவ்வொரு வடிவிலும் செய்வதற்கான அச்சுகள் மற்றும் பொறித் தொகுதிகள் என்பன தேவைப்படுகின்றது. தொழில்நுட்ப அறிவைப் பொறுத்தவரையில், கலப்படம் அற்ற தரமான வெல்லத்தை உற்பத்தி செய்து வருகின்றோம்.

வெல்லத்தை நீண்டகா

கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையத்தில் தற்போது 15 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். கடந்தகால யுத்தத்

ளர் எஸ்.துரைசிங்கம், "எமது சங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையமானது மக்



தின்போது பாதிப்புகளை எதிர் கொண்டு கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ள பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவ

களுக்கு தரமான வெல்லங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றது.

இதனை நாம் வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல, செயலாலும் செய்து

இதனை எமது வெல்ல உற்பத்தி நிலையத்திற்கு வந்தால் நேரில் பார்க்க முடியும்.

நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நலன் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக நாம் இதனை முன்னெடுத்து வருகின்றோம்.

இன்னும் இதனை நாம் விஸ்தரிக்கும்போது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மட்டுமல்ல, வேலையில்லாமல் உள்ள இளைஞர், யுவதி களுக்கும் இது பெரும் வரப் பிரசாதமாக இருக்கும்" என்றார்.

நவரத்தினம் சதீஸ்.



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் பாகிஸ்தானிய அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண பொருட்கள் பி.என்.எஸ். சுல்பிகார் கப்பல் மூலம் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தன. பாகிஸ்தானிய பதில் உயர்ஸ்தானிகர் சர்ப்ராஸ் அஹமட் கான் சிப்ரா வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் இந்த பொருட்களை கையளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. இரு அணிகளுக்கு இடையே பிரமாணப்பத்திரம் தாக்கலில் கடும் போட்டி

(சென்னை)

இரட்டை இலை சின்னம் பெற அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கிடையே பிரமாணப்பத்திரம் தாக்கலுக்கு கடும் போட்டி நிலவி வருகிறது.

ஜெயலலிதா மரணத்தை தொடர்ந்து அவரது தோழி சசிகலா முதலமைச்சராக முயற்சி செய்ததால் அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டது.

சசிகலா தலைமையில் ஒரு பிரிவினரும், ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் மற்றொரு பிரிவினரும் செயற்பட்டு வருகின்றனர்.

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் இரு அணிகளும் போட்டியிட்டதால் அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. அதோடு சசிகலா அணிக்கு அ.தி.மு.க. அம்மா அணி என்றும், ஓ.பி.எஸ். அணிக்கு அ.தி.மு.க. புரட்சி தலைவி அம்மா அணி என்றும் பெயரிடப்பட்டது.

இதனையடுத்து எந்த அணி உண்மையான அ.தி.மு.க. என்பதை நிருபிப்பதற்காக தலைமை தேர்தல் ஆணையம் வாய்ப்பு கொடுத்துள்ளது. அதன் பேரில் இரு அணிகளும் அ.தி.மு.க. நிர்வாகிகளிடம் இருந்து பிரமாணப் பத்திரங்களில் கையெழுத்து பெற்று அவற்றை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்து வருகின்றன.

அ.தி.மு.க.வில் அமைப்பு ரீதியாக 16 இலட்சத்து 90 ஆயிரம் பேர் பல்வேறு பதவிகளில் உள்ளனர். இவர்களில் அதிகம்பேர் எந்த அணிக்கு ஆதரவாக இருக்கிறார்களோ அந்த அணிக்குதான் இரட்டை இலை சின்னம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.




பாரதச் செய்தி

இதனால் அமைப்பு ரீதியாக உள்ளவர்களிடமும், தொண்டர்களிடமும் அ.தி.மு.க. இரு அணியினரும் போட்டி போட்டு பத்திரங்களில் கையெழுத்து பெற்று வருகிறார்கள்.

இதுவரை ஓ.பன்னீர் செல்வம் அணியினர் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் பேரிடம் கையெழுத்து பெற்று தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்துள்ளனர். சசிகலா அணியினர் 84 ஆயிரம் பேரிடம் கையெழுத்து பெற்று பிரமாணப்பத்திரங்களை தேர்தல் ஆணையத்திடம் கொடுத்துள்ளனர்.

இது குறித்து சசிகலா அணியின் சட்டத்தரணி செந்தில் நிருபரிடம் கூறியதாவது.

கட்சியில் அமைப்பு ரீதியாக பொறுப்பில் இருப்பவர்களிடமும், அந்த கட்சியின் மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்தும் மட்டுமே பிரமாணப் பத்திரங்களில் கையெழுத்து பெற்று தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ளது.

அந்த அடிப்படையில் நாங்கள் மாவட்ட ரீதியாக அமைப்பு பொறுப்புகளில் இருப்பவர்களிடம் கையெழுத்து பெற்று வருகிறோம். இதுவரை தேனி, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, மதுரை மாநகர், சேலம் மாநகர், காஞ்சிபுரம் மத்தி ஆகிய 6 மாவட்டங்களில் கையெழுத்து பெற்று முடித்து விட்டோம்.

மீதமுள்ள மாவட்டங்களில் இன்னும் 15 நாட்களுக்குள் கையெழுத்து பெற்று தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.க. புரட்சி தலைவி அம்மா அணியை சேர்ந்த மைத்ரேயன் எம்.பி. இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

தமிழ் நாட்டில் அ.தி.மு.க.வுக்கு சுமார் ஒன்றரைக் கோடி தொண்டர்கள் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக இருப்பவர் ஒன்றரைக் கோடி தொண்டர்களால்தான் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று கட்சி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் நாங்கள் கட்சி நிர் வாகிகள், பொறுப்பாளர், மக்கள் பிரதிநிதிகளிடம் கையெழுத்து பெற்று வழங்கி வருகிறோம்.

இதுவரை சுமார் 2 இலட்சம் பேரிடம் கையெழுத்து பெறப்பட்டுள்ளது. இன்னும் 10 இலட்சம் தொண்டர்களிடம் கையெழுத்து பெற உள்ளோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் விதிகள் மாறுபடும். ஏதோ ஒரு கட்சியின் விதிப்படி முன்பு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அந்த தீர்ப்பு தற்போதைய அ.தி.மு.க. விவகாரத்துக்கு பொருந்தாது.

அ.தி.மு.க. விதியின் அடிப்படையில் உறுப்பினர்கள் தான் எதையும் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர். எனவே நாங்கள் அ.தி.மு.க.வின் அனைத்து தரப்பினரிடமும் கையெழுத்து பெற்று வருகிறோம் என அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.க.வின் இரு அணிகளும் பிரமாணப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு ஜூன் 17 ஆம் திகதி தலைமை தேர்தல் ஆணையம் கால அவசாகம் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையிலேயே இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பது முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# தியாகி வெளிநாடு செல்ல தடை டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு!

(டில்லி)

விமானப்படை முன்னாள் தளபதி எஸ்.பி. தியாகி வெளிநாடு செல்ல இடைக்கால தடை விதித்து டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

பிரதமர், ஜனாதிபதி போன்ற முக்கிய தலைவர்கள் பயணம் செய்வதற்காக 12 சொகுசு ஹெலிகொப்டர்கள் வாங்குவதற்கு இங்கிலாந்து நாட்டின் அகஸ்டா வெஸ்ட் லேண்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டதில் ஊழல் நடந்துள்ளது.

இதுதொடர்பான வழக்கில், விமானப்படை முன்னாள் தளபதி எஸ்.பி. தியாகியும் (வயது 71), அவரது நெருங்கிய உறவினரான சஞ்சீவ் தியாகி, சட்டத்தரணி கவுதம் கெய்த்தான் ஆகியோரும் சிக்கியுள்ளனர்.

இந்த நிலையில் எஸ்.பி. தியாகி, இந்தோனேசியா நாட்டுக்கு செல்வதற்கு விசாரணை நீதிமன்றம் அனுமதி அளித்தது. ஆனால் இதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. மேல்முறையீடு செய்துள்ளது.

இந்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதி ஐ.எஸ். மேத்தா நேற்று முன்தினம் விசாரித்தார். அப்போது எஸ்.பி. தியாகி தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வழக்கு விசாரணையில் தலையிட்டு கெடுக்கலாம் என சி.பி.ஐ. தரப்பில் கூறப்பட்டது. அதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். விசாரணை நீதிமன்றம் அளித்த அனுமதிக்கு நீதிபதி இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். (3)

# கருணாநிதிக்கு 94ஆவது பிறந்தநாள் 18 இலட்சம் பேர் வாழ்த்து தெரிவிப்பு



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நாளை மறுதினம் 3 ஆம் திகதி 94-வது பிறந்த தினமாகும். அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையத் தளத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணி வரை சுமார் 18 இலட்சம் பேர் வாழ்த்து தெரிவித்து இருந்தனர்.

இதையொட்டி சென்னையில் அவரது பிறந்த தின விழா பிரமாண்டமாக கொண்டாடப்படவுள்ளது. அதில் காங்கிரஸ் தலைவர் ராகுல், பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் உட்பட பல்வேறு கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கருணாநிதிக்கு உடல் நலம் குறைவாக இருப்பதால் அவர் வீட்டிலேயே சிகிச்சை பெற்று வருகிறார். பிறந்த தினத்தன்று பார்வையாளர்களை சந்தித்தால் நோய் தொற்று ஏற்பட்டுவிடக் கூடும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இதையடுத்து கருணாநிதியை நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதற்காக தொண்டர்கள் யாரும்வர வேண்டாம் என்று தி.மு.க. தலைமை வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாழ்த்து தெரிவிக்க விரும்பும் தொண்டர்கள் இணையத்தளம் மூலம் வாழ்த்துக்களை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கருணாநிதிக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அந்த இணையத்தளத்தின் முகவரி www.wishthalaivar.com ஆகும். இந்த இணையத்தளத்தை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

பிறகு அவர் கருணாநிதிக்கு தனது முதல் வாழ்த்து செய்தியை பதிவு செய்தார். இதைத் தொடர்ந்து தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் அந்த இணையத்தளம் மூலம் கருணாநிதிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

இணையத்தளம் செயற்பாட்டுக்கு வந்த சில நிமிடங்களிலேயே உலகம் முழுவதிலும் இருந்து கருணாநிதிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் குவிந்தன. நேற்று முன்தினம் இரவு 11 மணி வரை சுமார் 18 இலட்சம் பேர் வாழ்த்து தெரிவித்தனர்.

அமெரிக்கா, இங்கி லாந்து, கனடா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் இருந்து கருணா நிதிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் வந்த வண்ணம் உள்ளன.

வெளிநாடு வாழ் தமிழர்களில் மலேசியா தமிழர்கள் தான் அதிக அளவில் கருணாநிதிக்கு வாழ்த்து அனுப்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# கன்றுக்குட்டியை வெட்டியதைக் கண்டித்து பா.ஜனதா இளைஞர் அணியினர் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

கேரளாவில் காங்கிரஸ் அணியினர் கன்றுக்குட்டியை வெட்டி இறைச்சி வழங்கியதை கண்டித்து டில்லியில் பா.ஜனதா இளைஞர் அணியினர் காங்கிரஸ் அலுவலகம் நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

அப்போது சோனியா, ராகுல்காந்தி உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன.

கால்நடை சந்தைகளில் இறைச்சிக்காக மாடுகளை விற்பனை செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்து உள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 2 நாட்களுக்கு முன்பு கேரள மாநிலம் கண்ணனூர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடந்தது.

கன்றுக்குட்டி ஒன்றை பொது இடத்தில் வைத்து வெட்டி அதன் இறைச்சியை பொதுமக்களுக்கு காங்கிரஸ் அணியினர் வழங்கினர். இது தொடர்பான



புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தொண்டர்களை காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி வன்மையாக கண்டித்தார்.

கேரள இளைஞர் காங்கிரஸ் அணியினரின் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்து டில்லியில் பா.ஜனதா இளைஞர் அணியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினர் காலை பா.ஜனதாவைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தாஜ்மான்சிங் விடுதி அருகே திரண்டனர். அங்கு ஒரு கன்றுக்குட்டியை நிறுத்தி வைத்து அதை வணங்கினர். பின்னர் அக்பர் வீதியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகம் நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

அப்போது கன்றுக்குட்டியை வெட்டிய விவகாரத்தில் சோனியா காந்தியும், இளைஞர் காங்கிரஸ் தலைவர்களும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர்கள் முழக்கமிட்டனர். கபுர்தலா அவுஸ் பகுதியில் அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றனர். ஆனால் பொலிஸாரின் தடுப்பு அரணை தகர்த்துவிட்டு தங்களுடைய ஊர்வலத்தை அவர்கள் தொடர்ந்தனர்.

இதையடுத்து சற்று தொலைவில் காங்கிரஸ் தலைமை அலுவலகம் செல்லும் வழியில் அமைக்கப்பட்டு இருந்த இன்னொரு தடுப்பு அரண் பகுதியில் பா.ஜனதா இளைஞர் அணியினர் தடுத்து நிறுத்தப்பட்டனர். அதையும் மீறி செல்ல முயற்சித்ததால் தண்ணீரை வீசி அவர்களை விரட்டியடிக்கப்பட்டனர்.

சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரின் உருவ பொம்மைகளையும் அவர்கள் எரித்தனர். மேலும் அப்பகுதியில் சோனியா, ராகுல்காந்தி புகைப்படங்களுடன் அச்சிட்டு ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மீது கறுப்பு மையும் பூசினர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் அட்டூழியம் தொடர் குண்டு வெடிப்பில் 40 பொதுமக்கள் பலி!




(பக்தாத்)

ஈராக் நாட்டில் ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு மற்றும் தற்கொலைப்படை தாக்குதலில் சுமார் 40 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஈராக் நாட்டில் பல்வேறு நகரங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்து அட்டூழியத்தில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், தற்போது பெருமளவு தங்கள் வசமிருந்த பகுதிகளை அரசுப்படையினரிடம் இழந்து வருகின்றனர். இதனால், தங்களது ஆத்திரங்களை தீர்த்துக்கொள்ள அப்பாவி பொதுமக்கள் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்துகின்றனர்.

ஐ.எஸ். அமைப்பின் வசமிருந்தபழமையானமொசூல் நகரை ஈராக் ராணுவம் சமீபத்தில் மீட்டது. இதனால், கொதிப்படைந்த அவர்கள் நேற்று முன்தினம் பக்தாத் நகரில் உள்ள பிரபல ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் அருகே வெடிகுண்டுகள் நிரம்பிய காரை நிறுத்தி விட்டு சென்றனர்.


ரம்ழான் மாதம் என்பதால் அதிக அளவிலான பொதுமக்கள் அங்கு கூடியிருந்தனர். அப்போது பயங்கர சப்தத்துடன் குண்டு வெடித்தது. இதில், 17 பேர் உடல் சிதறி பலியாகினர். மேலும், 32 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றொரு தாக்குதல் ஷவாகா பகுதியில் உள்ள அரசு அலுவலகம் அருகே நடைபெற்றது. இந்த கோர தாக்குதலில் 19 பேர் பலியாகினர் மற்றும் 39 பேர் படுகாயமடைந்தனர். இந்த இரு தாக்குதலுக்கும்ஐ.எஸ்அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

ஐ.எஸ்.அமைப்பின் தற்கொலைப்படை இத்தகைய தாக்குதலை நடத்தியது என அவர்கள் இணையதளம் வழியாக அறிவித்தனர். இருப்பினும், அரசுத்தரப்பில் இந்த தகவல் உறுதி செய்யப்படவில்லை. புனித ரம்ழான் மாதம் என்பதால் முக்கிய நகரங்களில் மாலை நேரத்தில் பொதுமக்கள் ஒன்று கூடுவதை அறிந்த தீவிரவாதிகள் இத்தகைய தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தியில் கூறியுள்ளன. (3)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளைவிடவும் ஆபத்தானவர் ரஷ்ய ஜனாதிபதி புடின்

## அமெ.செனட்டர் சர்ச்சை





(மெல்பேர்ன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக எழுந்த குற்றச்சாட்டு வலுத்து வரும் நிலையில், அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஐ.எஸ்.தீவிரவாதிகளை விட ஆபத்தானவர்என அமெரிக்காவின் ஆயுத சேவை செனட் தலைவர் மெக்கைன் அதிரடியாக கருத்து தெரிவித்துள்ளார்.


கடந்தாண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய உளவுத்துறையின் தலையீடு இருந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால், இதை ரஷ்யா மற்றும் அமெரிக்கா மறுத்து வந்தது. மேலும், பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இரு நாடுகளுக்குஇடையேதொடர்ந்து பனிப்போர் நிலவி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க ஆயுத சேவை செனட் குழுவின் தலைவராக உள்ள ஜான் மெக்கைன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கடுமையாக விமர்சித்து அவுஸ்திரேலிய ஊடகங்களுக்கு பேட்டியளித்துள்ளார். " ஐ.எஸ் தீவிரவாதிகளை விட உலக பாதுகாப்புக்கு புடின் ஆபத்தானவர். எனது பார்வையில் ரஷ்யர்களை சவாலாக எதிர்கொள்ள வேண்டும்.

ரஷ்யாவுக்கு எதிராக பல தடைகளை நாங்கள் வெற்றிகரமாக ஏற்படுத்தியுள்ளோம். இனியும் பல தடைகளை புதிதாக விதிப்போம்" என பரபரப்பு அளிக்கும் விதமாக அவர் பேசியுள்ளார்.

மேலும், தனது பேட்டியில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பாதுகாப்பு படைகள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார். அவர் நாட்டின் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். பாதுகாப்பு அமைப்பின் ஆலோசனைகளை பரிசீலித்து முடிவெடுக்கிறார் எனவும் மெக்கைன்தெரிவித்துள்ளார். (3)

# வடகொரியாவிற்குப் பதிலடியாக ஏவுகணை எதிர்ப்புச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

கொரிய தீபகற்பத்தில் போர்ப்பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் பாதுகாப்பு சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் போர்ப்பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் பாதுகாப்பு சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.


கடந்த ஓராண்டில் சுமார் 9 ஏவுகணைகளை வடகொரியா பரிசோதனை செய்துள்ளது. அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஐ.நா சபை ஆகியவை கண்டனங்கள் தெரிவித்தும் வடகொரியா தனது சோதனைகளை நிறுத்தவில்லை. இதனால், கொரிய தீபகற்பத்தில் பதற்ற நிலை நீடித்து வருகிறது.

இந்நிலையில், வடகொரியாவை சமாளிக்கும் விதமாக ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் பாதுகாப்பு பரிசோதனையை அமெரிக்கா நடத்தியுள்ளது. கலிபோர்னியா மாநிலத்தில் நடைபெற்ற இந்த சோதனையின் போது, பசுபிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவிலிருந்து ஏவப்பட்ட மாதிரி ஏவுகணையை, பாதுகாப்பு அமைப்பானது இடைமறித்து அழித்தது. இந்த சோதனை வெற்றிகரமாக நடைபெற்றதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

மேலும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் பாதுகாப்பு அமைப்பு சோதனையை அமெரிக்கா முதன் முறையாக வெற்றிகரமாக நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் அமெரிக்காவின் இந்த பாது காப்பு சோதனையை ரஷ்யா, சீனா மற்றும் வடகொரிய நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன. (3)

# ஜேர்மனி தேவாலயத்தில் 'ரோபோ' பாதிரியார்



(பெர்லின்)

ஜேர்மனியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் 'ரோபோ' பாதிரியார் நியமிக்கப்பட்டுள்ளது. அவை 'கடவுள் உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக' என்று பைபிளில் உள்ள வாசகத்தை கூறுகிறது.

ரோபோ' எனும் எந்திர மனிதனின் செயற்பாடுகள் அனைத்து துறைகளிலும் மேலோங்கி நிற்கிறது. இந்த நிலையில் பாதிரியார் பணியிலும் 'ரோபோ' ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அது பக்தர்களுக்கு ஆசி வழங்குகிறது. இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த 'ரோபோ' ஜேர்மனியின் விட்டன் பெர்க் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஜேர்மனியை சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் மார்டின் லூதர் பிராட்டஸ் டன்ட் சீர்திருத்தங்களை பரப்ப 95 ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதியுள்ளார். அதன் 500ஆம் ஆண்டு நினைவை குறிக்கும் வகையில் விட்டன் பெர்க் தேவாலயத்தில் 'ரோபோ' பாதிரியார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ரோபோவுக்கு 'பிளஸ்யூ -2' என பெயரிடப்பட்டுள்ளது. இது ஹெஸ்சி மற்றும் நசாயூ இவர்ஞ் சலிகல் கிறிஸ்தவ தேவாலயத்தினரால் உருவாக்கப்பட்டது.

அதில் தொடுதிரையுடன் கூடிய உலோக பெட்டி உள்ளது. இரு புறமும் 2 கைகளும், 2 கண்களுடன் தலை உள்ளது. அதில்டிஜிட்டல்வாயும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயத்துக்கு வரும் பக்தர்களை இந்த ரோபோ ஆண் மற்றும் பெண் குரலில் வாழ்த்தி வரவேற்கிறது. மேலும்தனது 2 கைகளை உயர்த்தி அவர்கள் விரும்பும் மொழியில் ஆசி வழங்குகிறது. அப்போது கைகளில் சிவப்பு நிற விளக்கு எரிகிறது.

கடவுள் உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக' என்று பைபிளில் உள்ள வாசகத்தை கூறுகிறது. அதை பிரிண்ட் ஆகவும் எடுத்துக் கொள்ள முடியும் இது போன்று ஆங்கிலம், ஜேர்மன் உள்ளிட்ட 5 மொழிகளில் இது ஆசி வழங்குகிறது.

தனிச்சிறப்பு மிக்க இந்த 'ரோபோ' தேவாலயத்துக்கு வருகை தரும் அனைத்து தரப்பினரையும் கவர்கிறது. (3)

# மோடி பயணம் மேற்கொண்ட பெர்லினில் தற்கொலை தாக்குதலுக்கு சதி

## 17 வயது சிறுவன் கைது



(பெர்லின்)

பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மனி தலைநகர் பெர்லினுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் அங்கு தற்கொலை தாக்குதலுக்கு சதி செய்ததாக 17 வயது சிறுவன் ஒருவர் நேற்று முன் தினம் பிடிபட்டார். அவர் பெர்லின்

அருகேயுள்ள உக் கர் மார்க் பிராந்தியத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதை பிரான்டன்பர்க் மாகாண அரசின் உள்துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். கைது செய்யப்பட்டுள்ள சிறுவனின் பெயர் விபரம் வெளியிடப்படவில்லை.

அதே நேரத்தில் அவர் தனது குடும்பத்தி னரிடம் இருந்து பிரியாவிடை பெற்று இறுதி தகவல் அனு ப்பி உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சிறுவனிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

*1953 தை மாதம் 9 ஆம் திகதி முள்ளியவளையில் பிறந்த இவரின் குரல் வளத்தைக் கண்ட கலைஞர் வேல் ஆனந்தன் சங்கீதத் துறைக்குள் இவரைக் கால்பதிக்க வைத்தார். பாடசாலைக் காலங்களில் சங்கீத மேடைகளை தன் குரலின் இனிமையால் அலங்கரித்துக் கொண்டார். 1976 இல் யாழ்.பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்து 1980 இல் பட்டப்படிப்பை முடித்து வெளியேறினார். 1999 இல் துணுக் காய் வலயக் கல்விப் பிராந்தியத்தில் உதவிக் கல்விப் பணிப் பாளராக கடமையாற் றினார். 2014 இல் முதலமைச்சர் விருதி னையும் 2016 இல் கலாபூஷண விருதினையும் பெற்றார். கருணாலயா சங்கீத நடனப் பள்ளியின் ஸ்தாபக இயக்குந ராகவும் புதுவையாள் நுண்கலைக் கல்லூரியின் அதிபராக வும் இருந்து கலைப்பணிகளை முன்னெடுத்து வருகின்றார். ''நீ பாடு வாய் பாடு'' என்று தட்டிக்கொடுத்த இவரின் தாயார் பார்வதியம் மாளின் கனவை நினைவாக்கி யுள்ளார். கலா பூஷண திருமதி கருணாதேவி அற்புதரா்ஜா அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.*



## கலாபூஷணம் திருமதி கருணாதேவி அற்புதராஜா அவர்களுடனான சந்திப்பு

**◆ தங்களின் கலைப்பிரவேசம் பற்றி சொல்லுங்கள்?**

நல்ல சாரீரம் சங்கீதத்தில் விருப்பம் கொண்ட என் தாய் பார்வதியம்மாள் என் கலைப்பயணத்திற்கு வித்திட்டவர் ''நீ பாடுவாய் பாடு'' என்றுசொல்லிட்டக்குவமாய்என்னை வழிநடத்தியவர் பாடகரும் சிறந்த கூத்து நடிகருமான என் தாய் மாமன் சிவனார் அவர்கள் சின்ன வயதில் எனக்கிருந்த குரலைக் கண்டு கொண்டு என்னைச் சங்கீதத்தில் கால் பதிக்க வைத்தவர் என்முதல் ஆசான் கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கள்.

என் ஆரம்பக் கல்விக்காக வன்னியின் முடிசூடிய கலைக் கோவில் வித்தியானந்தாவில் நுழைந்த போது கலைத்துறையைக் காண வைத்த திருமதி கந்தவனநாதன், சதாசிவம் ஆகிய புடம் பெற்ற இந்தியப் பட்டக் கலைஞர்களால் சங்கீதத்தில் பட்டம் தீட்டப் பெற்றேன்.

பாடசாலைக் காலங்களில் நான் கலந்து கொண்டு கல்லூரிக்கும் எனக்கும் பெருமை சேர்த்த சங்கீதப் போட்டிகளில், பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற ஆக்கமும் ஊக்கமுமளித்த சங்கீத ஆசிரியை செல்வி தங்கணாச்சி மயில்வாகனம் என்றும் என் மனதில் நிழல் கொண்டுள்ளார்.

எனது சங்கீத ஆற்றல்கள் பெருக சங்கீத சபை பரீட்சைகளில் தேற யாழ்.புகழ் வித்துவான்களான திருவாளர்கள் பாலசிங்கம் கணபதிப்பிள்ளை, கருணாகரன் ஆகியோரின் வழிகாட்டல்கள் பின்னர் தனிக் கச்சேரிகள் செய்ய எனக்கு உதவியாக அமைந்தன.

எனக்குப் பலரும் ஊக்கமும் அளித்து உதவிய நிலையில் 1976 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் நுழைந்து 1980 இல் பட்டப்படிப்பை முடித்து வெளியேற வாய்ப் பளித்தது.

பல்கலைக்கழகத்தை முடித்து வெளியேறி ஒட்டுசுட்டான், அளம்பில் ஆகிய இடங்களில் பல மாணவர்களுக்கு சங்கீதத்தை போதிக்க வாய்ப்பு உண்டானது மேலும் என்னை அத் துறையில் வளர்த்தது.

**◆ தங்களின் கலை நடவடிக்கைகள் பற்றிக் கூறுங்கள்?**

1981 இல் முல்லைத்தீவில் நடந்த வன்னிப் பிராந்திய தமிழாராய்ச்சி மாநாட்டில் என்னால் மேடையேற்றப்பட்ட ''சங்கீதக் கச்சேரி'' எனக்கு பெருமையை ஏற்படுத்தியதோடு பெரு வாழ்வையும் பெற்றுத் தந்தது என்பதை என் கலை வரலாற்றில் குறிப்பிடாதிருக்க முடியாது.

எனது தனிப்பட்ட ஆரம்பகால மாணவிகள் நான்கு பேர் சங்கீத உயர் ஆசிரியர்களாக, ஆலோசகர்களாக மிளிர்வது என் மனதில் நிறைவை ஏற்படுத்திய சம்பவமாகும்.

1987 ஆம் ஆண்டு முல்லைத் தீவு மகா வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றிய போது 100 வீதம் சித்திகளை க.பொ.த. சாதாரண/ உயர்தர மாணவர்கள் பெற்றதால் ஆசிரியர் ஆலோசகராக உயர்த்தப்பட்டேன்.

ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய காலத்தில் சங்கீத பாடத் துறையில் தரம் 6-11 வரையான ஆசிரியர் கைநூல் வெளியிட்டமையும் கிராமிய இசைச் செயற்றிட்டம் ஒன்றினை வெளியிட்டமையும் என்னை 01-01-1999 இல் துணுக்காய் வலயக் கல்விப் பிராந்தியத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) பதவியைத் தேடித் தந்தது.

அழகியல் பகுதியின் உதவிக் கல்விப்பணிப்பாளராக 15 வருடங்களாக கடமையாற்றிய காலத்தில் பல சங்கீத, நடன, சித்திர - நாடக கருத்தரங்குகள் என்னால் ஏற்படுத்தப்பட்டு ஆசிரிய வளங்கள் மேலோங்க வைக்கப்பட்டன.

கலைப் போட்டிகளுக்கு ஆண்டு தோறும் தலைவராய் இருந்து நெறிப்படுத்தியதன் மூலம் மாவட்ட கலை வளர்ச்சிக்கு உதவின.

சேவைக்காலத்தில் மாவட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலைகளுக்கு அளித்த ஊக்கமும் பயிற்சியும் மாவட்ட, மாகாண தேசிய மட்டங்களில் கலை வெற்றிகளை குவித்தமைக்கு வழிகாட்டல்கள் பெரிதாய் அமைந்தன.

**◆ தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி...?**

2005 இல் பாரம்பரிய இசைக் கலைஞர் (துணுக்காய் வலயம்), 2006 இல் கலைவழிகாட்டி (முல்லை. மாவட்டம்), 2014 இல் முதலமைச்சர் விருது (இசை) வடமாகாணம், 2014 இல் கிரீடம் (தமிழர் முன்னேற்றக்கழகம்), 2016 இல் கலாபூஷண விருது, 2016 இல் புதுவைக் கலைச்சுடர் (பிரதேச செயலகம்)

**◆ தங்களின் புதுவையாள் நுண்கலைக் கல்லூரி பற்றி?**

12.07.2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மன்றத்தின் அதிபராக இருந்த கலைச் சேவையைச் செய்து வருகின்றேன்.

உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து சேவையில் ஓய்வுபெற்ற பின்பும் எனது கலை நடவடிக்கைகள் தொடர்கின்றன. இக் கலை மன்றத்தில் சித்திரம், கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், தபேலா, ஓகன், பண்ணிசை ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. இவற்றிற்கு ஏற்றபடிதான் வளவாளர்களும் செயற்படுகிறார்கள். இங்கே 6-12 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு துறைசார்ந்த பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்துறை சார்ந்த மாணவர்களை பாடத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சைக்குத் தயார்படுத்தல், வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தயார்படுத்தல், கலை சம்பந்தமான போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் போன்றவற்றிற்கு பங்கு பெறச் செய்தல், பல ஆசிரியர்களிடமிருந்து பல வழிமுறைகளைக் கூறி மாணவர்களை கலைத் துறையில் ஈடுபடச் செய்தல், பல்கலைக்கழகத்திற்கு புகும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் பாடரீதியான பயிற்சிகள் வழங்குகின்றோம்.

மாதாந்தம் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் பௌர்ணமி விழா மற்றும் கலை விழாக்கள், கிராமிய விழாக்கள், மாவட்ட கலை விழாக்கள் இந்திய தூதரகத்தினரால் நடத்தப்பட்ட மாவட்ட கலை விழா, கலை இலக்கிய மன்றங்களுக்கிடையேயான மாகாண சபை ஆக்கத்திறன் போட்டிகள் போன்றவற்றில் பங்குபற்றி வெற்றியீட்டுவது கண்டு அவற்றிற்கான வெகுமதிகள், சான்றிதழ்கள் பெற்று மன்றத்திற்கு பெருமை தேடித்தந்துள்ளார்கள். இவை மாணவர்களுக்கு பயன்தருவனவாக அமைகின்றன.

இக் கல்லூரி தொடர்ந்து வளர்ச்சியடையச் செய்வதற்கு பிரதேச மக்கள், கலை ஆர்வலர்கள், கலை சம்பந்தமான ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் வேண்டும்.

**◆ தங்களின் கருணாலய சங்கீத நடனப் பயிற்சி பற்றி?**

இதன் இயக்குநராக நானே செயற்படுகின்றேன். இந்தப் பள்ளியானது10.01.2012 ஆம் ஆண்டு 10 ஆம் வட்டாரத்தில் கருணாலயா நடனப்பள்ளி அமைக்கப்பட்டு 30 மாணவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இங்கே கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் ஆகிய இரு பாடங்களுமே கற்பிக்கப்படுகின்றன. இக் கலைப் பணி என்னுடன் முடிந்து விடாதிருக்க எனது இரு புதல்விகளையும் நடனப்பட்டதாரிகளாக்கி என்னோடு பள்ளி ஆசிரியர்களாக்கி கலையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றேன்.

என் கணவர் என் கலைக்கு முக்கிய பங்கு வகித்தவர். நடனப் பள்ளி அமைப்பதற்கென கட்டடம் இல்லாத வேளை கூட எமது வீட்டிலேயே பள்ளியை உருவாக்குமாறும் அதற்கு இன்றுவரை ஒரு எதிர்ப்பும் இல்லாது இயங்கி வருகின்றது.

இவரே நாட்டிய நாடங்களை அரங்கேற்றும் வேளை அதற்கான பாடல்களை எடுத்தியம்பி கலையில் ஆர்வலராகவும் ஊக்குவிப்பாளருமாக இன்றுவரை செயற்படுத்த கால்கோலாகவுள்ளார்.

1-12 ஆம் ஆண்டு வரையுள்ள மாணவர்கள் கற்கிறார்கள். இவர்களுக்கான பாடசாலைப் பரீட்சைகளுக்கான வழிகாட்டல்கள், வட இலங்கை சங்கீத சபைக்கான வழிகாட்டல்கள் போன்ற பரீட்சைக்கு ஏற்ற பாடத்திட்டத்திற்கு அமைவாகவே கற்பிக்கப்படுகின்றன.

இவ்வாறாக வளர்க்கப்படும் இக் கலையை இன்னும் மேம் படுத்தி மிளரச் செய்வதே எமது இலட்சியம். இக் கலைக்கு பலவித மான ரீதியிலும் பொருளாதார ரீதி யிலும் பிரச்சினைகள் எழுந்தும் கூட அவற்றை பொருட்படுத்தாது இன்னும் எம் பள்ளிக்கு மேலதிகமாக மிருதங்கம், ஓகன் வகுப்புக்கள் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

எம் கலைகள் மிளிர வேண்டும். எம் கருணாலயா சங்கீத நடனப் பள்ளிக்கென ஓர் அங்கம் வகிக்கும் என்ற எண்ணப்பாங்கிலே எம் கலையை அழியாது என்றும் வளர்ப்போம்.

**◆ இன்றைய மாணவர்களிடம் சங்கீதம் கற்பதில் உள்ள ஆர்வம் எப்படி இருக்கிறது?**

ஆரம்ப காலத்தில் மாணவர்கள் கர்நாடக சங்கீதம் கற்பது கஷ்ரம் என உணர்ந்தார்கள். பக்திப் பாடல்களையும் சினிமாப் பாடல்களையும் மெல்லிசைப் பாடல்களையும் கற்று வந்தனர்.

ஏனென்றால் ஆசிரியர்களோ, இசை ஆர்வலர்களோ அவர்களுக்குத் தகுந்த செயற்பாடுகளைச் செய்யவில்லை. கர்நாடக சங்கீதம் கஷ்டமானது என்று ஏதோ சாட்டுக்களைச் சொல்லி விட்டார்கள்.

அத்துடன் தகுதியிலும் திறமை சார்ந்த ஆசிரியர்கள் இருக்கவில்லை. தற்பொழுது தகுதியான ஆசிரியர்கள் திறமையான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். கலை மன்றங்கள் இருக்கின்றன.

ஆகவே மாணவர்கள் கற்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுவதற்காகவும் போட்டி, விழாக்கள், பரீட்சைகள் போன்ற பல நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்காகவும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் கல்வி கற்கிறார்கள். அதன் பிரதிபலனை அடைகின்றனர்.

இயற்கையான சாரீர வசதியில்லாதவன் பாட முடியாது. பொதுவாகச் சொல்லப்போனால் துறை சார்ந்த மாணவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் சங்கீதத்தை கற்கிறார்கள். மேலும் நாங்கள் அவர்களுக்கு விருப்பம் ஏற்படுத்தி அவர்களைப் பிரபல்ய கலைஞர்களாக்குவது எமது கடமையும் பொறுப்புமாகும்.

**நேர்காணல்: ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அரச அதிகாரிகள் தயங்கத்தேவையில்லை

## ஐ.தே.க. அமைச்சர் ஏரான் தெரிவிப்பு

(கொழும்பு)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு, அரச அதிகாரிகள் தயங்காமல் தங்களது தீர்மானங்களை எடுங்கள்.

உங்கள் பின்னால் ஜனாதிபதியும் பிரதமரும் இருக்கின்றனர் என அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான சேவைகளை இன, மத பேதங்கள் பார்க்காமல் செய்ய வேண்டும்.



இந்த விடயத்தில், இராணுவத்தினர் மிகவும் பாரியதொரு சேவையைத் தற்போது வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அரச ஊழியர்களும், தங்களது சேவைகளை வழங்குவதற்கு சுற்றுநிருபங்களைப் பார்த்துக்கொண்டு இருக்காமல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து தனது சேவைகளை வழங்குங்கள். உங்களின் பின் ஜனாதிபதியும், பிரதமரும் உள்ளனர் என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம்,

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட, சிறிய வியாபார நிலையங்களுக்குத் தேவையான கடன் வசதிகளை, வங்கிகளுடன் கலந்தாலோசித்து வழங்குவதற்கு நாளை வெள்ளிக்கிழமைக்குள் தீர்மானம் எடுக்கப்படும்.

அனர்த்தங்களினால், தங்களுடைய கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்களை விரைவாக மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான தேவை உள்ளது. களுத்துறை மில்லனிய பிரதேசத்தில், 4,228 மாணவர்கள் தங்களது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இரத்தினபுரி, மாத்தறை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு, ஒரு மாவட்டத்துக்கு ஒரு வங்கி என்ற அடிப்படையில், சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் குறித்து சீன நிறுவனத்துடன் இன்று மீள பேச்சு ஆரம்பம்

## அமைச்சர் சமரசிங்க தகவல்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு தொடர்பாக, சீனாவின் மேர்ச்சண்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன், அரசாங்கம் மீண்டும் இன்று பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தை அடுத்து, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மகிந்த சமரசிங்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இன்று சீன நிறுவனத்துடன் முதலாவது சந்திப்பை நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனது துறைக்குள் இந்த விவகாரம் இருப்பதால் தாமே நேரடியாகப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும், இந்த விவகாரத்தில் வேறு எவரையும் நுழைவதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பலர் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டதால் தான் இறுதியான இணக்கப்பாடு ஒன்றை எட்டும் முயற்சிகள் முடங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் விவகாரம் தொடர்பாக, அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

அத்துடன் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சராக இருந்த அர்ஜுன ரணதுங்கவும் தனியாகப் பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பேச்சுக்களின் தற்போதைய நிலை தொடர்பாக முன்னர் பேச்சுக்களை நடத்திய அமைச்சர்களுடன், கலந்தாலோசித்திருப்பதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். (இ-7)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு உருத்திரகுமாரன் வேண்டுகோள்

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சாத்தியமான வழிகளில் மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு, புலம்பெயர் தமிழர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் தணிக்க, சாத்தியமான எல்லா வழிகளிலும் தன்னார்வ அடிப்படையில் புலம்பெயர் தமிழர்கள் உண்மையான ஆதரவை வழங்க வேண்டும்.



அத்துடன் பாதிக்கப்பட்ட [illegible] பங்களிக்க அனைத்துலக சமூகம் முன்வர வேண்டும்.

எதிர்பாராத அனர்த்தத்தால் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த தருணத்தில், பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மீது அனைவரும் கரிசனை காட்ட வேண்டும்.

இதுபோன்ற இயற்கை அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு, உள்ளூர் உட்கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம் [illegible] அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கேலி செய்கிறார்கள் என்பதற்காக

ஒருமுறை ஒரு கணவனும் மனைவியும் குதிரை ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து சில வழிப் போக்கர்கள் "பாவம் அந்தக் குதிரை, ஒருவர் பயணிக்க வேண்டிய குதிரையில் இருவர் போகிறார்கள் பார்" என்று கணவன் மனைவி காதில் கேட்கும் படி பேசினார்கள்.

கணவனுக்கு சுருக் என்றது. கணவன் இறங்கிக் கொண்டான். மனைவியை மட்டும் அமர வைத்து குதிரைக் கடிவாளத்தைப் பிடித்தபடி நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்றதும், "இவன் மனைவிக்கு பயந்தவன் போலிருக்கிறது. மனைவியைக் குதிரையிலமர்த்தி விட்டுப் பாவமாய் நடக்கின்றான் பார்" என்று வேறு சிலர் சிரித்தார்கள்.

கணவன் ஞானோதயம் வந்தவனாய் மனைவியை நடக்க வைத்துபடி தான் குதிரையிலமர்ந்தான். சிறிது தூரம் போனதும், "இவன் இரக்கமே இல்லாதவன் போலிருக்கிறது. பெண்ணை நடக்கவைத்து விட்டு இவன் மட்டும் குதிரையிலமர்ந்து கொண்டு விட்டான் பார்" என்றனர்.

கணவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மனைவியை இறங்கச் சொன்னான். இருவரும் நடந்தனர். "இந்தக் கணவனும் மனைவியும் ஒரு சரியான பைத்தியக்கார ஜோடி போலிருக்கிறது. குதிரையில் அமர்ந்து பயணம் செய்யாமல் நடக்கிறார்கள் பார்" என்றனர் சிலர். அவ்வளவு தான்! இருவருமே ஏறிக் குதிரையில் அமர்ந்து கொண்டனர். மறுபடியும் பாவம் குதிரை என்றனர் வேறு சில வழிப்போக்கர்கள்.

கணவன் இப்போது தான் முடிவு செய்தான். யார் என்ன சொன்னாலும் என் பயணம் இனி இப்படித்தான் தொடரும் என்று.

உலகத்தில் நாக்கு ரொம்பவும் பொல்லாதது. நாம் செய்வதைச் சரி என்று எளிதில் ஒப்புக் கொள்ளாது. மாறாக நாம் எதைச் செய்யத் தவறினோமோ– அது நல்லதாக இருப்பினும் சரி, கெட்டதாக இருப்பினும் சரி, அதைத் தான் செய்திருக்க வேண்டும். என்று வாதாடும்.

மற்றவர்கள் கேலி செய்யும் போதெல்லாம் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள் கேலிக்குரியவர்கள்.

நம் செயல்களில் நியாயம் இருக்க வேண்டும் தான். ஆனால் நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கேலி செய்யும் உலகத்திற்கு நாம் ஏன் அந்தச் செயலைச் செய்கிறோம்; எத்தகைய சூழ்நிலையில் அந்த முடிவிற்கு வந்தோம் என்பதெல்லாம் தெரிய வாய்ப்பு இல்லை.

அதே நேரத்தில் உலகில் கேலி செய்யும் போது அதை ஒரேடியாகப் புறக்கணித்து விடலாம், அதில் உள்ள நியாய வாதங்களை மனதில் கொள்ள வேண்டும்; தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு பிறர் என்ன கேலி செய்தாலும் நாம் அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் தினம்

## -சிறப்புக் கட்டுரை-



**யாழ். ஆயர்**
**மேதகு கலாநிதி. யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**(B.Th (Pune),M.A (Hull),PhD in Ed (Southampton)**

யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் அவர்கள் இன்று (01.06. 2017) தனது பெயர் கொண்ட புனிதரின் திருநாளை நினைவுகூருகின்றார். இத்தினம் யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க திருச் சபையால் ஆயர் தினம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆயர் தினத்தில் ஆயர் அவர்கள் குருக்கள், துறவிகள், பொது நிலையினருடன் இணைந்து யாழ். மரியன் னைப் பேராலயத்தில் காலை 9 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கின் றார். இத் திருப்பலியின் விசேட அம்சம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் புலத்த வர்கள் என பெருந்தொகை யினரும் கலந்து கொள்வதாகும். அன்றைய தினத்தில் மறை மாவட்ட ரீதியாக நடத் தப்பட்ட மறையறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவருக்கு ஆயர் பரிசில்களை வழங்குவார். ஆயர் தினம் திருச் சபையின் தலைவர்களுக்கும் இளை ய தலைமுறையினருக்கும் இடையிலான உறவுப் பால மாகும்.

மேதகு கலாநிதி யஸ் ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைசிற ந்த கல்விமான். இளவய தில் இங்கிலாந்தின் சொத ம்ரன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பல்வேறு மொழிகளில் புலமை மிக்க வர். சுமார் 32 ஆண்டுகளாக கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்தவர்.

ஆசிரியராகப் பணியில் காலடி வைத்து பல்வேறு பதவி நிலைகளூடாக உயர்ந்தவர். இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பணியாற்றிய வர். இளவாலை கொத்த ணிப்பாடசாலைகளின் அதி பராக இடப்பெயர்வு கால ங்களில் அரும்பணியாற்றி யவர். யாழ்.பல்கலைக் கழ கம், யாழ். தேசிய கல்வியி யல் கல்லூரி ஆகியவற்றின் மூதவை உறுப்பினராக பணி நல்கியவர். உயர் கல் விப் பீடங்களில் விரிவுரை யாளராகப் பணியாற்றிய வர். யாழ்.மறை மாவட்ட குரு முதல்வராக பணியாற்றி இன்று ஆயராக வழிநடத் துபவர். தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நன்கு அறியப்பட்டவர்.

யாழ்.ஆயர் மேதகு கலா நிதி யஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் அவர்கள் 9.5.2017 அன்று யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசா லையின் பரிசளிப்பு நிகழ் வில் முதன்மை விருந்தின ராகக் கலந்து ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் கல்வி தொடர்பான முக்கிய பகுதி கள் தமிழாக்கம் செய்யப் பட்டு இங்கே பிரசுரிக்கப்படு கின்றது. ஆயர் அவர்களுக்கு எமது ஆயர் தின வாழ்த்துக் கள் உரித்தாகுக.

### எமது கல்விச்சாலைகள் தோற்றுவிட்டனவா?

ஒருவர் தன் வாழ்விலும் தொழி ற்றுறையிலும் வெற்றி பெறுவதற்கு கல்விச்சாலைகள் எத்தகைய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து கற்பிக்க வேண்டும் என் பது தொடர்பில் என் சிந்தனை களை உங்களுடன் பகிர விரும்புகின்றேன்.

இலங்கையில் மாணவர்களும் ஆசிரியர் களும் தமது தொழிற்தர்மத்தில் (WORK ETHICS) அலட்சியப் போக்கினைக் கடைப் பிடித்து வருவதைக் கண்டு கவலையடைகின் றேன். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங் களி லும் 32 வருடங்களாக மாணவரையும் பட்ட தாரி மற்றும் பட்டமேற்படிப்பு மாணவரையும் பயிற்றுவித்த ஆசிரியன் என்ற வகையில் எனது அனுபவத்தினூடாக இந்நிலை கண்டு அதிர்ச் சியும், துயரமும் அடைகின்றேன். இது அவர் க ளது தொழில் ஒழுக்கத்திலும் புறவயமான சிந்தனை முறைமையிலும் ஏற்பட்ட குறை பாட்டினைப் பிரதிபலிக்கின்றது.

இன்று எமது பல்கலைக்கழகங்கள் க.பொ.த. உயர் தரத்தில் மிகச் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையே கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்கின்றன. ஆயினும் இத்தகைய உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களில் பெரும்பான்மையினர் ஒரு பிரச்சினை தொடர் பில் சுயமாக ஆழ்ந்து சிந்திக்கவோ அன்றேல் பொருத்தமான தீர்வுகளை முன்வைக்கவோ திறனற்றிருப்பது வேதனைக்குரியது.

மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள், பேராசிரியர்கள், நிர்வாகிகள், நிபுணர்கள், அரசியல் வாதிகள்கூட சுயசார்பு நிலைகளு க்கும் உணர்ச்சிகளுக்கும் உட்படாமல் புற வயமான முடிவுகளை (OBJECTIVE DECI- SION) எடுக்க முடியாது திண்டாடு வதை யதார்த்தத்தில் காணமுடி கின்றது.

இன்றைய கல்வி முறைமை யின் கட்டுப்பாட்டு மையமாக கலைத் திட்டம், இலக்கு, குறிக்கோள் என் பன விதந்துரைக்கப்படுகின்ற போதி லும் பரீட்சை தொடர்பான நெருக் கீடுகளும் பரந்து விரிந்த பாடத்தி ட்டங்களும் கல்வி முறை மையில் தாக்கத்தை ஏற்படுத்தி அதன் போக்கினைத் தீர்மானிப் பதை அவதானிக்கலாம்.

இன்று பொதுப் பரீட்சைக ளில் வழங்கப்படும் வினாத்தாள் கள் எவ்வகையிலும் பரீட்சார்த்தி யின் சுயாதீனமான விமர்சன சிந்த னையைத் தூண்டுவதாக அமை வதில்லை. மாறாக இவ் வினாத் தாள்கள் மனனம் செய்து ஒப்பு விக்கும் முறையையே ஊக்குவி க்கின்றன. இது ஒரு வகையான வங்கியியல் முறையாகும். மாண வர்களால் மனனம் செய்து உள் ளீடு செய்யப்பட்டவை பரீட்சைக ளில் வாந்தியாக கக்கப்படுகின் றன. இதனால் பாடக்குறிப் புக் களை பிரதி செய்து மனனம் செய்து கற்கும் முறையே எம்மிடையே இன்னும் குடிகொண்டுள்ளது.

இன்று பரீட்சைகளில் சித்தி பெற பாடங்களை மனனம் செய் தால் போதும் என்ற நிலையே நிலவுகின் றது.

உயர்தரத்தில் எத்தனை "A" சித்திகள் பெறப்பட்டன. சாதாரண தரத்தில் எத்தனை பேர் சகல பாடங்களிலும் "A" சித்தி பெற் றனர். புலமைப் பரிசில் பரீட்சை யில் எத்தனை மாணவர்கள் சித்தி பெற்றனர். எத்தனை பேரு க்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது.. அதிலும் குறிப் பாக மருத்துவம், பொறியியல் துறை களுக்கு தெரிவானோர் எத் தனை பேர் என்ற அடிப்படையி லேயே இன்று பாடசாலைகள் மக்க ளால் மதிப்பீடு செய்யப்படுகின் றன. இத்தகைய அடைவுகள் மட்டும் ஒரு பாடசாலையின் தர த்தை மதிப்பீடு செய்ய அன்றேல் தர நிர்ணயம் செய்யப் போது மான அளவுகோல்களா?

என்னைப் பொறுத்தவரை ஒரு தரமான, முன்மாதிரியான பாட சாலை என்பது அங்கு கற்கும் ஒவ் வொரு மாணவன், மாணவி மீதும் கவனம் செலுத்துவதாக இருக்க வேண்டும். அவர்களின் பலம் - பலவீனத்தை இனங்க ண்டு அவர்கள் தமது இயலு மைக் கேற்ப (Potential) பொரு த்தமான துறையில் உச்சநிலையை அடைய வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.

எவ்வாறாயினும் யதார்த்தத் தில் அநேகமான பாட சாலைகள் தம்மிடமுள்ள சிறந்த மாணவர்க ளில் மட்டுமே கவனம் செலுத்துகி ன்றன. ஒரு வகுப்பிலுள்ள இத்த கைய 10% மாணவர்களில் மட் டும் அதீத கவனம் செலுத்தி அவர் கள் உச்சப் பெறுபேறுகளையும் புகழையும் ஈட்ட உந்துதலளிக் கப்படுகின்றது. ஆனால் 90% மீதமுள்ள மாணவர்கள் மீது இத்தகைய கவனம் செலுத்தப்ப டுவதில்லை. அவர்கள் தம் வழியை தாமே பார்த்துக் கொள்ள விடப் படுவதே பரிதாபத்திற்குரியது.

பரீட்சைகளில் சித்தி பெறுவது நமக்கு தொழிலைப் பெற உதவு கின்றது. ஆயினும் எமது வாழ் விலும் தொழிலிலும் வெற்றி பெற பரீட் சைச் சித்தி மட்டும் போது மானதல்ல. வாழ்வில் வெற்றி பெற பரீட்சைச் சித்திகளுக்கு மேலாக வேறு காரணிகளும் நமக்குத் தேவை.

சுய கட்டுப்பாடு, புறவயமான விமர்சன சிந்தனை, பிறர் கரு த்தை உள்வாங்கும் திறன், ஆக்க பூர்வமாக முடிவெடுக்கும் திறன், நேர் மனப்பாங்கு, நேர்மை, பரிவு, பணிவு, பிறருடன் சர்வ சாதாரண மாக தொடர்பாடும்திறன் போன்ற பண்புகளும் வாழ்வில் நாம் சித்தி பெற தேவைப்படுகின்றன. இத் தகைய பண்புகள் வீட்டிலும் பாட சாலைகளிலும் இருந்தே பண்ப டுத்தப்பட வேண்டும்.

### ஒழுக்கம் அற்ற கல்வி பயன் தருமா?

இன்றைய உலகில் பிள்ளைகளி டத்தே ஒழுக்கத்தை - ஒழுங்கை ஏற்படுத்துவது மிகக் கடினமான பணியாகவுள்ளது. அதற்குக் கார ணம் பிள்ளைகள் தமது சுதந் திரம் கட்டுப்படுத்தப்படுகின்றது என்று எண்ணுவதேயாகும்.

ஆயினும் ஒழுக்கம் என்பது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக் கும், அதனை அடைவதற்கும் இடையிலான பாலம் என்பதை பல சந்தர்ப்பங்களில் உணரத் தவறி விடுகின்றனர்.

ஒழுக்கத்தை நிலை நாட்டு வதில் பாடசாலைகளுக்கும் பெற் றோருக்குமான இடைவினைத் தொடர்பு முக்கியமானது. பிள் ளைகளிடத்தில் சிறுகச் சிறுக ஒழு க்கத்தை ஏற்படுத்துவதில் முக்கிய வகிபாகம் பெற்றோருக்குரியது. இத்தகைய பொறுப்பை அவர் கள் தட்டிக்கழிக்கவோ அன்றேல் இன்னொருவர் மீது சுமத்தி விடவோ முடியாது. இத்தகைய வகிபாகம் ஆசிரியர்களுக்கும் உரியது.

ஆசிரியர்கள் இத்தகைய பொறுப்பை மாணவ முதல்வர் களிடமோ அல்லது வகுப்புத் தலை வர்களிடமோ சுமத்தி விடு வதை அநேக சந்தர்ப்பங்களில் காண கின்றோம்.

பிள்ளைகளிடையே ஒழுக்க த்தை துளிதுளியாக விதைத்து அவர்கள் கற்றலில் மகிழ்வுடன் ஈடுபட பல வழிமுறைகள் உண்டு. பெற்றோரும் ஆசிரியர்களும் முரண்படுகின்ற தம் பிள்ளை களை சீரிய வழியில் இட்டுச்செல்ல மாற்று வழிக ளைத் தேட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஒழுக் கம் என்ற பெயரில் நாம் பிள்ளைகளை தம் சந்தேக ங்களைக்கூட கேட்க அனுமதிப்பதில்லை. கேள்வி கள் கேட்டதனால் பிள்ளைகள் தண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகைய இறுக்க மான அணுகு முறை பிள்ளைகளின் ஆக்கத் திறனை யும் ஆழ் சிந்தனைப் போக்கையும் மழுங்கடிக்கின்றது.

### சுயாதீன சிந்தனைக்கு சுதந்திரம் கொடுப்போம்

எமது பிள்ளைகள் எம்மை விட அறிவுக் கூர்மையானவர்கள், சாதுரியம் மிக்கவர்கள் என் பதை எம்மில் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. ஆயி னும் பிள்ளைகள் எம்மை விட ஆழமாக, வேகமாக, சாணக்கிய மாக சிந்திக்கக் கூடியவர்கள் என்பதற்கு இரு கதைகளை கூற விரும்புகின்றேன்.

ஆரம்பப்பிரிவில் கற்பித்த ஆசிரியர் ஒருவர் திமிங் கலங்களின் தொண்டைப் பகுதி சிறியது. எனவே நாம் எண்ணுவது போல் அவற் றினால் மனிதர்களை முழுமையாக விழுங்க முடியாது என்றார். ஆயினும் அங்கே கற்ற சிறுமியால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை திருவி விலியத்தில் யோணா என்ற இறைவாக்கினர். திமிங் கலத்தால் விழுங்கப்பட்டு 3 நாட்கள் அதன் வயிற்றில் உயிருடனிருந்தார் என்ற பகுதியை சுட்டிக்காட்டினாள்.

சிறுமியின் கூர்மையான பதி லால் சீற்றமடைந்த ஆசிரியர் 'நீ அது பற்றி யோணாவையே கேள்' என்றார். அதற்கு சிறுமி 'நான் மோட்சம் (சொர்க்கம்) போகும் போது இது பற்றி யோணாவிடம் கேட்கிறேன்' என்றாள். சிறுமியை மட்டம் தட்ட நினைத்த ஆசிரியர் 'யோணா சில வேளை நரகத்தில் இருந்தால் என்ன செய்வாய்?' என்று சிறு மியை கேட்டார்.

அதற்கு சிறுமி 'அவ்வாறு யோணா நரகத்திலிருந்தால் நீங் கள் அங்கு போகும் போது அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங் கள்' என்றாள். சிறுமி யின் பதிலால் ஆசிரியர் வாயடைத்துப் போனார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் முன்பள்ளியொன்றில் உணவு நேரம் மேசையில் அப்பிள்கள் வைக்கப்பட்டிருந்தன. குழந்தை கள் ஆசை மிகுதியால் ஒன்றுக்கு மேல் அதை எடுத்து விடக்கூடும் என்பதால் முன்பள்ளிக்குப் பொறுப் பான அருட்சகோதரி அப்பிள் கூடையின் மீது 'ஒரு அப்பிள் மட்டும் எடுக்கவும். கடவுள் பார்த் துக் கொண் டிருக் கிறார்' என்று எழுதி வைத்தார். மேசை யின் இன்னொரு புறத்தில் இனிப்புக் கள் வைக்கப்பட்டிருந்தன.

அதனை அவதானித்த சிறுவன் ஒருவன் அதன ருகே சென்று ஒரு காகிதத்தை எடு த்து 'எத்தனை இனிப் புக்க்ள் வேண் டும் என்றா லும் எடுங்கள். கடவுள் அப்பிள் கூடையைத் தான் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்று எழுதி வைத்தான். பிள்ளை கள் அறிவுக் கூர்மை யானவர் கள், அவர்கள் சுயாதீனமாக சிந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும். தம் ஆக்கத் திறனை வெளிப்படுத்த அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அவற்றிற்கு நாம் வாய்ப் பளிக்காவிட்டால், மழுங் கடிக்க முற்பட்டால் முரண் நடத்தைகள் தோன்றவாய்ப்பேற்படும் (தொடரும்)

**தமிழாக்கம்**
**எப்.எக்ஸ்.அன்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து பிரஜையிடம் நிதிமோசடி செய்தவர் கைது

கொழும்பு - 7 பகுதியில், வெளிநாட்டவரிடம் மாணிக்கக்கல் எனக் கூறி, போலிக் கல் ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் சந்தேகநபரால் நியூஸிலாந்து பிரஜை ஒருவரிடம் நீல நிற மாணிக்கம் எனக் கூறி போலி கற்கள் இரண்டு, 2400 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த நியூஸிலாந்துப் பிரஜை ஹொங்கொங் நாட்டுக்குச் சென்று இது குறித்து ஆராய்ந்த போதே அது போலி எனத் தெரியவந்துள்ளது.

பின்னர், அவர் கடந்த 18ம் திகதி மீண்டும் இலங்கைக்கு வந்து சுற்றுலா பொலிஸ் பிரிவினரிடம் இது பற்றி முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்படி, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# வெளிநாட்டவரைத் தாக்கி கொள்ளையிட்ட 12பேர் கைது

ஹபுத்தலை பகுதியில் வெளிநாட்டுப் பிரஜைகளைத் தாக்கி அவர்களிடம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் நான்கு பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 28ம் திகதி காலை ஹபுத்தலை நகரின் ஊடாக பயணித்த வெளிநாட்டுப் பிரஜைகள் மூவர் தாக்கப்பட்டனர்.

ஆட்டோ மூன்றில் வந்த சிலரே இவ்வாறு அவர்களைத் தாக்கியுள்ளதோடு, அவர்கள் வசம் இருந்த பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

எதிர்வரும் 12ம் திகதி நடைபெறவுள்ள மவுன்டண் சைக்கிள் பயிற்சிப் போட்டிகளில் கலந்து கொள்ள வந்திருந்த வெளிநாட்டவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து விரைந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அன்றையதினமே ஒருவரைக் கைதுசெய்தனர். இதனையடுத்து சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கு அமைய மேலும் 12 பேர் கைதுசெய்யப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

# வேலைக்கு சமுகமளிக்காத அரச ஊழியருக்கு விடுப்பு

வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில், கடமைக்குச் சமுகமளிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு, விடுமுறை வழங்குவதற்கு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கையை அனுப்புமாறு, தனது அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக, அமைச்சர் தெரிவித்தார். அனேகமான இடங்களில், வெள்ள நிலைமை குறைவடையாத நிலையில், ஊழியர்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அரச ஊழியர்கள் பற்றி நாங்கள் கவனமெடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட அனேக இடங்களில் அவர்கள் இன்னமும் பணிக்குத் திரும்ப முடியவில்லை. பாதிக்கப்பட்ட காலத்துக்காக அவர்களுக்கு, நாங்கள் கடமை விடுப்பை வழங்குவோம். இந்தக் காலப்பகுதி, இடத்துக்கு இடம் மாறுபடும்" என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# 44 சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவி

## அரசாங்கம் தகவல்

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக 44 சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் சர்வதேச நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவியுடன் தற்போதைய இயற்கை அனர்த்தங்கள் உட்பட மீதொடமுல்ல, கேகாலை அனர்த்தங்கள் சாலாவ அனர்த்தம் ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வீடுகளை நிர்மாணித்து வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர்கள் வாகனக் கொள்வனவிற்கான நிதியை பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வழங்க வேண்டும்

(கொழும்பு)

அமைச்சர்களின் வாகனக் கொள்வனவுகளுக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியினை பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களுக்கு வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளுக்காக அரசாங்கத்திற்குப் பாரியளவு நிதி தேவைப்படுவதுடன் அவை விரைந்து ஒதுக்கப்படவேண்டும். வெளி நாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவிகளை முறையான திட்டமிடல்களுடன் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன் பாடசாலைகள் ஆரம்பிக்கும் காலப்பகுதி அண்மித்து வரும் நிலையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலைகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் உடனடியாகக் கவனமெடுக்க வேண்டும்" என பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1089

Search for people places and things Nagendram Home


**விபுலன்**




**நித்தியா**




**காவேரி**




**சிறி**




**கமலன்**




**வினோத்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஓர் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

தமிழ்நாடு கைத்தொழில் துறையில் முக்கியத்துவம் பெற்ற மாநிலமாக இருக்கின்றதுடன் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. கனிமங்களை, விவசாயத்தை அடிப்படையான கைத்தொழில்களில் இருந்து நெசவுத் தொழில்கள், தோல் தொழில்கள், வாகன உற்பத்தி, எலெக்ட் ரோனிக்ஸ், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் எனப் பல்வேறு கைத்தொழில்கள் தமிழ்நாட்டில் காணப்படுகின்ற[illegible].


கனிமங்கள[illegible] அடிப்படையாகக் கொண்டு சீ[illegible]மந்து தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. கரூர், திருச்சி, அரியலூர் ஆகிய இடங்களில் மிக[illegible] பெரிய சீமெந்து ஆலைகள் இ[illegible]வமைவு பெற்றிருப்பதுடன் உ[illegible] பயன்படுத்தும் கொங்கிறீட் [illegible]வை உற்பத்தியில் பெரிய ள[illegible]வில் ஈடுபட்டுள்ளன. நெய்வேலி பழுப்பு நிலக்களி அகழ்தல் மூலம் பெறப்படும் பழுப்பு நிலங்கள் அனல் மின்சார உற்பத்திக்குப் பயன்படு கிறது. தமிழ்நாட்டில் கருங்கல் அகழ்தல், கருங்கல் வெட்டும் தொழிலும் முக்கியம் பெற்றவை.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் முக்கியம் பெற்றுள்ளன. சீனித் தொழிற்சாலைகள், அரிசி குத்தும் ஆலைகள், தாவர எண்ணெய் உற்பத்தி, உணவுப் பொருட்கள் பதனிடுதல் ஆகியன அண்மைக்காலத்தில் பெரியளவில் வளர்ச்சி பெற்றுள் ளன. தமிழ்நாடு சீனி உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

நீண்டகாலமாக தமிழ்நாடு நெசவுத் தொழிலில் முக்கியத்துவம் பெற்று இருக்கின்றது. நாட்டின் மொத்த நூல் நூற்றல் உற்பத்தியில் 50 சதவிகித செயற்றிறன் தமிழ்நாட்டில் காணப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், கரூர் ஆகிய இடங்களில்நெசவுத்தொழில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. திருப்பூர் பின்னலாடை உற்பத்தியில் உலகில் மிக முக்கிய இடங்களில் ஒன்றாகும். வருடம் ஒன்றுக்கு 3000 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட பெறுமதியான பின்னலாடைகள் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். மேலும் இத்தொழிலில் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இத் தொழிலில் பணிபுரிகின்றார்கள். கரூர் புடைவை உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இங்கு கொசு வலை, மீன்வலைகள், ஜன்னல் கதவு மறைப்புக்கள் மற்றும் சமையல் அறைத் துணிகள் உற்பத்தியில் சிறப்புற்று விளங்குகின்றது. கோயம்புத்தூர் நெசவுத் தொழிலில் முக்கியத்துவம்பெற்றிருப்பதுடன்நெசவு யந்திரங்கள், உதிரிப்பாகங்கள்,நெசவு யந்திர உபகரணங்கள் உற்பத்தியில் சிறப்புற்று விளங்குகின்றது.

சென்னையைச் சூழ ஆடைகள் உற்பத்தித் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. இத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தைத்த ஆடைகள் பிரதானமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் உயர் தரமான கைத்தறிப் பட்டுப் புடைவைகள் உற்பத்தி தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற பொழுது காஞ்சிபுரம், மதுரை மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இந்தியாவில் தோல் பதனிடுதலிலும் தோல் பொருட்கள் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது. இந்தியாவில் தோல் ஏற்றுமதியில் 30 சதவீதத்தையும் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 70 சத வீதத்தையும் தமிழ்நாடு பங்களிக்கின்றது. இத்தொழில் குறிப்பாக ஆத்தூர், இராணிப்பேட்டை, வண்ணியம்படி மற்றும் திண்டுக்கல் பகுதிகளில் காணப்படுகின்றது. இத்தொழில் மிகவும் கடினமானதுடன் சுற் றுப்புறம், தரை கீழ் மாசடையுதென்று குற்றம் சுமத்தப்படுகின்றது.




வாகன உற்பத்தியில் சென்னை தெற்காசியாவின் டெற்றியொட் என அழைக்கப்படுகின்றது. இங்கு சர்வதேச பிரசித்தி பெற்ற நிறுவனங்களின் வாகன உற்பத்தித் தொழிற் சாலைகள் அமைந்துள்ளன. B.M.W. FORD, RENA ULT, HYUNDAI, MITSUBI, MOTORS, CATE PILLAR, BOSCH போன்ற நிறுவனங்களின் உற்பத்திகள் இடம்பெறுகின்றன. மேலும் பல நிறுவனங்களை வாகன உதிரிப் பாகங்களும் வாகன உற்பத்திக்குத் தேவையான பல் வேறு தொடர்புடைய பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இங்கு உற்பத்தியாகும் வாகனங்களின் ஒரு பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சென்னை வாகன உற்பத்தி மாத்திரமல்ல பாரிய யந்திரங்கள் உற்பத்தியிலும் முக்கியம் பெற்றுள்ளன. உழவு இயந்திரங்கள் கட்டடங்களுடன் பெருசாலை அமைப்புடன் தொடர்புபட்ட யந்திரங்கள் உழவு இயந்திரங்கள் போக்குவரத்து லொறிகள், போர்த் தாங்கிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. சென்னை பெரம்பலூரில் புகையிரதப் பிரயாணிகள் கோச்சுக்கள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை அமைந்துள்ளது.

இந்தியாவின் பெங்களூருக்கு அடுத்து சென்னை மென்பொருள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இர ண்டாம் இடத்தை வகிக்கின்றது. தகவல் தொழில்நுட்பத் தொழிற்றுறையில் சென்னையில் நேரடியாக 350000 பேர் வீடு கட்டியிருப்பதாகவும் மறைமுகமாக 750000 ஆயிரம்தொடர்பு பட்டிருப்பதாகவும் அறியக் கிடக்கின்றது. சென்னை நகரில் அடையாறில் இருந்து மகாவலிபுரம் வரை தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களும் மென்பொருள் உற்பத்தி நிலையங்களும் அமையப் பெற்றுள்ளன. மேலும் கோயம்புத்தூர், திருச்சி, சேலம் நகர்களில் சிறிதளவு மென்பொருள் உற்பத்தி மையங்கள் வளரத் தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டின் 580 பொறியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் தகவல் தொழில் நுட்பப் பட்டதாரிகளும் இலத்திரனியல் பட்டதாரிகள் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்களித்துள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து பேருந்து லொறி இயந்திரங்கள் உற்பத்தி செய்தபொழுதும் கரூரில் தான் போக்குவரத்து பேருந்துகளுக்கு பொடி அமைக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இது போல லொறிகளுக்கு பொடி அடிக்கும் தொழிற்சாலைகள் கூடுதலாக நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு நகர்களில் காணப்படுகின்றன. கரூரில் கரும்புச் சர்க்கரை உற்பத்தி கழிவுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மிகப்பெரிய கடதாசி உற்பத்தி ஆலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை தமிழ் நாட்டின் கடதாசிப் பொருட்கள் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்கிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் தீப்பெட்டி மற்றும் சீனவெடி உற்பத்தியின் பெரும்பங்கு சிவகாசியில் உற்பத்தி செய்யப்படுகின்றது. சிவகாசியில் இத்தொழில் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சிவகாசியில் சரியான கைத் தொழில் பாதுகாப்பு இன்மையால் அடிக்கடி வெடிவிபத்து ஏற்பட்டு குறிப்பிடத்தக்க தொழிலாளர்கள் மரணி த்தும் அவயவங்களை இழந்து மாற்றுத் திறனாளிகளாகவுள்ளனர். சிவகாசி இந்தியாவில் கலண்டர் மற்றும் தினக் குறிப்பு புத்தகங்கள் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக் கின்றது.

ஓசூரில் Titan பெயர் கொண்ட கைக்கடிகார உற்பத்தி பெரியளவில் இடம்பெறுகின்றது. மேலும் ஓசூரில் வாகன உற்பத்தி இடம் பெறுகின்றது. இந்நகர் பெங்களூருக்கு அண்மையாக இருப்பதால் பெங்களூரில் இருக்கும் நிறுவனங்கள் சில ஓசூரில் காணப்படும் சாதகமாக இடவமைவு காரணிகளைப் பயன்படுத்தி இந்நகரில் தங்கள் தொழில் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் போக்கைக் காணமுடிகின்றது.

மேற்குறிப்பிட்ட தொழில்களைத் தவிர இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டில் பெரிய சில தொழில் களை நிறுவியுள்ளது. திருச்சியில் பாரிய மின்சார கொதிகலன்கள் உற்புத்தி, துப்பாக்கித் தொழிற்சாலை, சேலத்தில் உடுக்காலை, சென்னையில் புகையிரத பணிகள் கோச்சுத் தொழிற்சாலை, யுத்த தாங்கித் தொழிற்சாலை, மருத்துவ சத்திர சிகிச்சை உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலை போன்றவற்றை நிறுவியுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொழில்களைத் தவிர மேட்டூரில் இரசாயனத் தொழிற்சாலைகள், தூத்துக்குடியில் உப்பு உற்பத்தியும்,உப்புடன் தொடர்பான தொழில்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

திண்டுக்கல் பூட்டுக்கள், இரும்பு பெட்டகங்கள் உற்பத்தியில் சிறந்து சிளங்குகின்றது.

சென்னை மற்றும் முக்கிய நகர் களில் அச்சுத்தொழில், பத்திரிகை வெளியிடுதல் போன்றன முக்கியமாகவுள்ளன. சென்னையில் மருந்து உற்பத்தித் தொழில்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு கைத்தொழில் துறையில் தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டுவருவதைக் காணலாம். பாரம்பரிய குடிசைத் தொழில், கைவினைத் தொழில், இலேசான குடிசைக் கைத்தொழில், நடுத்தர கைத்தொழில்கள் என பலவகைப்பட்ட கட்டமைப்பிலும் விவசாயம்சார் தொழில்கள், கனிமம் சார் தொழில் கள்,நெசவுத் தொழில்கள், இயந்திர உற்பத்தித் தொழில்கள் என வளர் ச்சி பெற்று இன்று தகவல் தொழில் நுட்பத் தொழிலில் பிரவேசித்து, பிரகாசித்து கொண்டு இருக்கின்றது.

வரும்காலத்தில் தமிழ் நாட்டின் கைத்தொழில் துறை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் வளர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தொழில் துறை வளர்ச்சி பெற்றிருக்கி ன்ற பொழுது தமிழ்நாட்டின் கைத்தொழில் செறிவு சென்னை யைச் சூழவும் கோயம்புத்தூரைச் சூழவுமே கூடுதலாகக் காணப்படுகின்றது.

பொதுவாக வட தமிழ்நாடு கைத் தொழில் வளர்ச்சி பெற்றதாகவும் தென் தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சியற்று அபிவிருத்தியில் பின் தங்கியிருப்பதைக் காணலாம்.

தென்மாவட்டங்களில் குறிப்பாக இராமநாமபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, புதுக்கோட்டை மாவட்டங்கள் அபிவிருத்தியில் பின்நிற்பதுடன் வேலைவாய்ப்பு குறைவாக இருப்பதால் சென்னைப் பிரதேசத்திற்கும் கோயம்புத்தூர் பிரதேசத்திற்கும் இடம்பெயர வேண்டியிருக்கின்றது. தமிழ்நாட்டின் வடக்கு, தெற்கு பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் அபிவிருத்தி வேறுபாட்டால் பிரிவினை கோரிக்கை எழும் போக்கு தென்படுகிறது.

பா.ம. க.நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் அவர்கள் தமிழ்நாட்டை இரண்டாகப் பிரித்தால் தான் தென் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி பெறும் என்ற கருத்தை முன்வைத்தார்.

இக் கருத்து பலரிடமும் இருந்து கடும் எதிர்ப்பு வந்ததால் இக் கருத்து மேல் எடுக்கப்படவில்லை. எனினும் வடக்கு- தெற்கு வேறுபாட்டைக் குறைத்க தென்தமிழ் நாடு கைத்தொழிலில் விருத்தியடைய வேண்டும்.

மேலும் விவசாயத்தில் மிகவும் செழிப்பாக திகழ்ந்த தஞ்சாவூர் திருவாவூர், நாகபட்டினம் மாவட்டங்கள் காவேரி நீர்ப் பிரச்சினையால் இவர்களது விவசாயம், பொருளாதாரம் பெரிதும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

இதனால் டெல்டா மாவட்டங்களின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டின் விவசாயம் நீர்ப் பிரச்சினையாலும் வரட்சியாலும் பெரிதும் பாதிக்கப்படும் நிலையில் தமிழ் நாட்டின் பொருளாதார மேம்பாடு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் கைத்தொழில் வளர்ச்சியி லேயே தங்கியள்ளது எனலாம்.

மாநில த்தின் கைத்தொழில் வளர்ச்சியில் தென் தமிழகமும் காவேரி டெல்டா பிரதேசமும் முன்னுரிமை பெற வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்தில் பயணித்த மாணவனுக்கு குத்தூசியால் குத்திய புஷ்பியா கைது


பேருந்தில் தனது வலப் பக்கத்தில் அமர்ந்திருந்திருந் தவாறு பயணித்துக் கொண்டிருந்த 14 வயது மாணவனின் இடது பக்க இடுப்பில் குத்தூசியால் குத்திப் பதம் பார்த்த, புஷ்பியா என்பவரைக் கைது செய்துள்ளதாக, கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவன், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புஷ்பியா என்ற அந்தப் பெண், கண்டி-தென்னக் கும்புர பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

குத்தூசியால், மாணவனின் இடுப்பைப் பதம்பார்த்த அந்தப் பெண், பேருந்திலிருந்து இறங்கியோடி தப்பிப்பதற்கு முயன்ற போதிலும், அப்பெண்ணை சுற்றிவளைத்த பயணிகள், அவரைப் பிடித்து, கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, அந்த மாணவனின் கையிலும், குத்தூசிக் காயம் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தன்னுடைய தாயுடன், கண்டியை நோக்கி தனியார் பேருந்தில், கடந்த திங்கட்கிழமையன்று பயணித்து கொண்டிருந்த போதே, இவ்வாறான அசாதாரண நிலைமைக்கு, அம் மாணவன் முகங்கொடுத்துள்ளார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட புஷ்பியா தொடர்பில், விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



கேலிச்சித்திரம்

# 1000 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு யாழில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்



தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பௌத்த மதம், இந்து மதம், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதம் ஆகிய அனைத்து மதங்களையும் உள்ளடக்கக் கூடிய வகையில், தேசிய ஒருமைப்பாட்டினையும் நல்லிணக்கத்தையும் ஞாயிறு தின அறநெறிப் பாடசாலைகளில் முன்னெடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பாக, ஞாயிறுதின அறநெறிப் பாடசாலைகளின் கற்பித்தலில் தேசிய ஒருமைப்பாட்டினையும், நல்லிணக்கத்தினையும் பற்றியதான எண்ணக்கரு மற்றும் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தலும், அதனை பாடவிதானங்களில் உள்வாங்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். இது அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும், மாவட்ட அலுவலர்களுக்கும் மிகப்பயனுள்ளதும், மிக்க வினைத்திறன் வாய்ந்தது மான நிகழ்ச்சித்திட்டமாக அமைந்திருந்ததென தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

பல்வேறு மதக் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் மதிப்பளிக்கின்றதும், சண்டை சச்சரவுகளற்றதும், சமாதானத்தை ஆசிக்கின்றதும், நல்லிணக்கத்தை நேசிக்கின்றதுமான சமூகமொன்றை தோற்றுவிப்பதுடன், வளமிக்கதும், அமைதியானதுமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் தொலைநோக்கும் குறிக்கோளுமாகும். மதம், மொழி மற்றும் இனம் தொடர்பாக எவ்வித பாகுபாடுகளும் காட்டாது பல்வகைத்தன்மைக்கு மதிப்பளித்தல், ஒருமைப்பாட்டினையும் நல்லிணக்கத்தினையும் மேம்படுத்தல், அது குறித்த வசதியளித்தல்களின் ஊடாக முழுமைபெற்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான தொனிப்பொருளும் இலக்குமாக இனங்காணப்பட்டுள்ளன.

அமைதியான சமூகமொன்றையும், வளமிக்க தேசமொன்றையும் கட்டியெழுப்புவதற்கு அடிப்படைவாதம், சமூக அநீதி மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிப்பதற்காக நாம் ஒன்றிணைந்து முனைப்புடன் செயலாற்றுதல் வேண்டும். நல்லிணக்கம் என்பது, அனைத்து குடிமக்களையும், சமுதாயங்களையும் ஊக்குவித்து, உற்சாகமூட்டுவதன் மூலம் சமாதானம், கௌரவமான வாழ்வு என்பவற்றை இலக்காகக் கொண்ட ஒரு நீண்ட பயணத்தை அடைய முடியும்.

இவ் எண்ணக்கருவின் கீழ் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் இவ்வாறான மாற்றமொன்றை ஏற்படுத்துகின்ற முன்னோடிகளாக கருதப்படுவதுடன், அவர்களுக்கு ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பற்றிய அறிவு, எண்ணக்கரு என்பன தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

சமாதானத் தூதர்களாக வலுவான பங்களிப்பு வழங்கும் பொருட்டு கற்பிக்கின்ற ஆசிரியர்களை வலுவூட்டுவதற்கு சமயத் துறைகளின் பங்களிப்புடன் பயிற்சிகளுக்கான கருவிகள் மற்றும் அறிவூட்டல் நூல்கள் என்பன மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்பது பற்றி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளரான சிவஞானசோதி தெரிவித்தார். (இ)

# 18 மாதங்கள் தாமதித்து சிகிச்சைக்காகவே பிரதமர் ரணில் அமெரிக்காவுக்கு சென்றார்

## சுகாதார அமைச்சர் ராஜித தகவல்





18 மாதங்களாகத் தாமதித்து வந்த மருத்துவ சிகிச்சைக்காகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரட்ன, மீண்டும் தள்ளிப்போட முடியாமல் போனதாலேயே அவர் அங்கு சென்றதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில், தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு, கடந்த சனிக்கிழமை, அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். இலங்கையில், பாரிய இயற்கை அனர்த்தம் ஏற்பட்டிருந்த நிலையில், அவர் இவ்வாறு சென்றமை, அதிக விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராஜித, வெள்ள நிலைமை தொடர்பாக, தினமும் 4 தடவைகள், பிரதமருக்கு அறிக்கைகள் அனுப்பப்படுவதாகவும், இவ் விடயம் தொடர்பாக அவர், முழுமையான அறிவுடன் [illegible] எனினும், அவ்வாறான மருத்துவ தேவைக்காக, அவர் அமெரிக்காவுக்குச் சென்றார் என்ற விடயத்தை, அமைச்சர் ராஜித வெளிப்படுத்தவில்லை.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவும், இந்த அனர்த்த காலத்தில் இலங்கையில் இருக்காமை குறித்து, அமைச்சர் ராஜித விடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, மெக்ஸிக்கோவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்ததாகவும் அங்கிருந்து அதே தினத்தில் கொழும்புக்கு வரக்கூடிய விமான சேவையைப் பெற்றுக் கொண்டிருக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு, மெக்ஸிக்கோவிலிருந்து கொழும்புக்கு நேரடியான விமான சேவையைப் பெற்றாலும், இலங்கைக்கு வருவதற்கு, அவருக்கு 30 [illegible] தேவை [illegible] என்றும் தெரிவித்தார். (இ-7)

# செவன நிதியத்துக்கு நன்கொடை வழங்குக

## சஜித் கோரிக்கை

கடந்த சில தினங்களாக நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் புனரமைத்துக் கொள்வதற்கான செவன நிதியத்துக்கு நன்கொடை வழங்குமாறு, வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச, நன்கொடையாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவருடைய அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பான சரியான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு, பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் புனரமைக்கத் தேவையான திட்டமிடல் தொகையை அளவிடும் பணி, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மீள் புனரமைக்கும் பணிக்கு அரச பங்களிப்புடன் நன்கொடையாளர்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள அமைச்சர் சஜித் பிரேமதாச எதிர்பார்க்கின்றார்.

இந்த நற்பணிக்கு பங்களிப்பை மேற்கொள்ள விரும்புவோர் அல்லது நன்கொடை நிறுவனங்கள், மக்கள் வங்கியின் இல - 204100140 003931 கணக்கில் வைப்பிலிட முடியும் என, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. தம்மால் முடிந்தளவு பணத்தை நன்கொடையாக வைப்பிலிட முடியும் என்பதுடன் அந்த தொகைக்கு 100% வருமான வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களுடன் 071-8047526 தொலைபேசி ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசர் குதிரை



ஆதனார் என்ற அரசர் தென்றல் நாட்டை நல்லாட்சிசெய்து வந்தார். மக்களுக்கு ஏதேனும் குறை உள்ளதா என்பதை அறிய விரும்பினார். வணிகனைப் போல மாறுவேடம் போட்டுக் கொண்டு குதிரையில் அமர்ந்தார்.

ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு வந்தார்.

வழியில் வழிப் போக்கன் ஒருவன் நின்று இருந்தான். குதிரையில் அவர் வருவதைப் பார்த்த அவன் கை காட்டினான்.

அவரும் குதிரையை நிறுத்தினார்.

"ஐயா! நீண்ட தொலைவு நடந்து வந்ததால் களைப்பு அடைந்து உள்ளேன். பக்கத்து ஊர் செல்ல வேண்டும். உங்கள் குதிரையில் என்னையும் ஏற்றிச் செல்லுங்கள். இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்" என்று வேண்டினான்.

இரக்கப்பட்ட அவர். "குதிரையில் ஏறிக் கொள்" என்றார்.

அவனும் குதிரையில் ஏறி அமர்ந்தான்.

இருவரையும் சுமந்து கொண்டு குதிரை பக்கத்து ஊரை அடைந்தது.

"உன் ஊர் வந்துவிட்டது இறங்கிக் கொள்" என்றார் அரசர்.

"இது என் குதிரை... நான் ஏன் இறங்க வேண்டும்? இரக்கப்பட்டு உன்னைக் குதிரையில் ஏற்றி வந்தேன். பெரிய ஏமாற்றுக்காரனாக இருப்பாய் போல இருக்கிறதே. நீ கீழே இறங்கு" என்று அதட்டினான் வழிப்போக்கன்.

"இது என் குதிரை. நீ கீழே இறங்கு" என்றார் அரசர்.

அங்கே கூட்டம் கூடி விட்டது.

"தான் யார் என்ற உண்மையைச் சொல்ல வேண்டாம். என்ன தான் நடக்கிறது பார்ப்போம்" என்று நினைத்தார் அரசர்.

கூட்டத்தினரைப் பார்த்து. "ஐயா! இது என் குதிரை... வழியில் இவன் குதிரையில் தன்னை ஏற்றிச் செல்லுமாறு கெஞ்சினான். நானும் குதிரையில் ஏற்றி வந்தேன். இங்கே வந்ததும் இதைத் தன் குதிரை என்று அடாவடியாகப் பேசுகிறான்" என்றார்.

அவனோ. "இது என் குதிரை. இவனை நான் ஏற்றி வந்தேன். உங்கள் எல்லாரையும் இவன் ஏமாற்றப் பார்க்கிறான்" என்றான்.

அங்கே இருந்தவர்களால் குதிரைக்குச் சொந்தக்காரர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இருவரையும் பார்த்து. "இந்த ஊர் நீதிபதியிடம் செல்லுங்கள். அவர் உங்கள் வழக்கைத் தீர்த்து வைப்பார்" என்றனர்.

அவர்கள் இருவரும் குதிரையுடன் நீதிபதியிடம் வந்தனர். தான் அரசன் என்ற உண்மையை அவர் வெளிப்படுத்தவில்லை.

"நீதிபதி எப்படி தீர்ப்பு வழங்குகிறார்? பார்ப்போம்" என்று நினைத்தார்.

இருவரையும் பார்த்து நீதிபதி. "உங்களுக்குள் என்ன வழக்கு?" என்று கேட்டார்.

"நீதிபதி அவர்களே! நான் குதிரையில் வந்து கொண்டிருந்தேன். வழியில் இவர் குதிரையில் தன்னை ஏற்றி வரும்படி வேண்டினார். நான் இவரை ஏற்றி வந்தேன். இந்த ஊர் வந்ததும் இவர், இது தன் குதிரை என்கிறார். என்னை ஏற்றி வந்ததாகச் சொல்கிறார். என் குதிரைக்கு உரிமை கொண்டாடுகிறார். நீங்கள்தான் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்" என்றார் அவர்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று அரசரைப் பார்த்து கேட்டார் நீதிபதி.

"நீதிபதி அவர்களே! இது என் குதிரை. இரக்கப்பட்டு இவனை ஏற்றி வந்தேன். இப்போது இந்தக் குதிரையே இவனுடையது என்கிறார். இப்படி ஒரு ஏமாற்றுக்காரனை நான் பார்த்தது இல்லை. நீங்கள்தான் என் குதிரையை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றான் அவன்.

அங்கிருந்த வீரர்களை அழைத்தார் நீதிபதி.

"இந்தக் குதிரையைக் கொட்டடியில் அடையுங்கள். மற்ற குதிரைகளுடன் இது இருக்கட்டும்" என்றார்.

அவர்களும் அந்தக் குதிரையை மற்ற குதிரைகளுடன் சேர்த்துக் கட்டினர்.

சிறிது நேரம் சென்றது. குதிரைகள் கட்டப்பட்டு இருந்த இடத்திற்கு நீதிபதி வந்தார்.

அவர்கள் இருவரையும் ஒவ்வொருவராக அழைத்தார்.

"உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள்" என்றார்.

இருவருமே. அந்தக் குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினர்.

மாறுவேடத்தில் இருந்த அரசரைப் பார்த்த நீதிபதி. "இது உங்கள் குதிரை. இவன் ஏமாற்ற முயன்று இருக்கிறான்" என்றார்.

இதைக் கேட்ட அரசர் வியப்பு அடைந்தார். தன் மாறுவேடத்தை நீக்கினார். அரசரைப் பார்த்த நீதிபதி அவரை வணங்கினார். "நீதிபதி அவர்களே! நாங்கள் இருவருமே குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினோம். நான் தான் குதிரையின் சொந்தக்காரன் என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

"அரசர் பெருமானே! நீங்கள் குதிரையின் அருகே சென்றதும். அது மகிழ்ச்சியாகக் கனைத்தது. உங்களை உரசிக் கொண்டு நின்றது. ஆனால், அவன் அருகில் சென்றதும் அந்தக் குதிரை அவனை உதைத்தது. இதைப் பார்த்த நான் நீங்கள்தான் குதிரையின் சொந்தக்காரன் என்பதை அறிந்து கொண்டேன்" என்று விளக்கம் தந்தார் நீதிபதி.

"உங்கள் அறிவுக்கூர்மையைப் பாராட்டுகிறேன்" என்ற அரசன் அவர்களுக்கு பரிசுகளை கொடுத்தார்.

ஏமாற்ற முயன்ற வழிப் போக்கனுக்கு. தக்க தண்டனை கொடுத்தார் அரசர்.




- 1605 - மொஸ்கோவில் ரஷ்யப் படைகள் மன்னன் இரண்டாம் ஃபியோதரையும் அவனது தாயாரையும் சிறைப் பிடித்தனர். இவர்கள் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1792 - கென்டக்கி ஐக்கிய அமெரிக்காவின் 15வது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1796 - டென்னசி ஐக்கிய அமெரிக்காவின் 16வது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1812 - அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் மாடிசன் ஐக்கிய இராச்சியம் மீது போரை அறிவிக்கும்படி காங்கிரசைக் கேட்டுக்கொண்டார்.
- 1855 - அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றினார்.
- 1869 - மின்சாரத்தால் இயங்கும் வாக்களிக்கும் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை தோமஸ் எடிசன் பெற்றார்.
- 1879 - பிரெஞ்சு இளவரசன் நெப்போலியன் யூஜின்ஆங்கிலோ-சூளு போரில் தென்னாபிரிக்காவில் கொல்லப்பட்டான்.
- 1910 - றொபேர்ட் ஸ்கொட் தலைமையிலான ஆய்வுக்குழு தென் முனையை நோக்கிய பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தது.
- 1941 - ஈராக், பக்தாத்தில் யூதர்களுக்கெதிராக இடம் பெற்ற கலவரங்களில் 180 யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- 1946 - ருமேனியாவின் பிரதமர் இயன் அண்டனேஸ்கு மரணதண்டனக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1947 - சுதந்திரன் இதழ் கொழும்பில் இருந்து வெளியாக ஆரம்பித்தது.
- 1959 - நிக்கராகுவாவில் புரட்சி ஆரம்பமானது.
- 1962 - நாசி வதைமுகாம்களை உருவாக்கிய அடொல்ஃப் ஐக்குமன் இசுரேலில் தூக்கிலிடப்பட்டார்.
- 1971 - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1980 - சிஎன்என் ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்தது.
- 1981 - தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ் பொது நூலகம் நள்ளிரவில் சிங்களக் காவல் துறையினரால் எரிக்கப்பட்டதில் பல்லாயிரக்கணக்கான பெறுமதி மிக்க நூல்கள் அழிந்தன.
- 2001 - நேபாள மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பமும் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1926 - மாரிலின் மன்றோ, அமெரிக்க நடிகை (இ. 1962)
- 1953 - ரோனி டுன், அமெரிக்க இசைக் கலைஞர்
- 1959 - ஆலன் வல்டேர், பிரித்தானிய இசைக் கலைஞர்
- 1969 - தெரசா போலோ, அமெரிக்க நடிகை
- 1974 - அலனிஸ் மாரிஸ்சாட், கனேடிய இசைக் கலைஞர்
- 1970 - மாதவன், தமிழ் நடிகர்

### இறப்புகள்

- 1968 - ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (பி. 1880)
- 1979 - வேர்னர் ஃபோர்ஸ்மன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)
- 1996 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் ஆறாவது குடியரசுத் தலைவர் (பி. 1913)
- 2001 - பிரேந்திரா, நேபாள மன்னர் (பி. 1945)

### சிறப்பு நாள்

- பன்னாட்டு குழந்தைகள் நாள்
- சமோவா - விடுதலை நாள் (1962)
- துனிசியா - அரசியல் நிர்ணய நாள். வெற்றி நாள் (1959) (1845)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 350 | 130 | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 80 | 110 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 800 | 450 | 450 | 600 | 400 | 500 |
| தக்காளி | 160 | 150 | 100 | 120 | 120 | 180 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 150 | 80 | 100 | 70 | 70 |
| கோவா | 160 | 200 | 130 | 160 | 200 | 140 | 160 |
| கரட் | 200 | 400 | 200 | 240 | 400 | 200 | 320 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 | 100 | 60 | 70 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 300 | 300 | 300 | 300 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100. | 80 | 80 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 90 | 160 | 140 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 | 120 | 140 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 160 | 140 | 140 |
| கறிமிளகாய் | 250 | 280 | 100 | 180 | 280 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 90 | 120 | 150 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 150 | 200 | 200 | 200 | 240 |
| கத்தரிதும்புள்ள | 180 | 100 | 100 | 160 | 200 | 160 | 160 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 40 | 60 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 200 | 400 | — | 220 | 200 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 200 | — | — | — | 350 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 80 | 200 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | — | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லக்கில் பவனி வருபவனுக்கு அதைச் சுமப்பவனின் துன்பம் தெரிவதில்லை.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சிங்கள இனம் சார்ந்தவராக அன்றி வடக்கின் ஆளுநராக கதையுங்கள்

காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை எதுவும் நடத்த முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் நேற்று முன்தினம் 100ஆவது நாளை நிறைவு செய்தது.

இந்நிலையில் காணாமல்போனவர்களின் உறவினர்களும் பொதுமக்களும் இணைந்து கிளிநொச்சியில் பிரமாண்டமான மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஏ9 வீதியை மறிப்புச் செய்து நடத்தப்பட்ட போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், இரண்டு வாரங்களுக்குள் காணாமல்போனவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாக ஆளுநர் கூரே உறுதிமொழி வழங்கினார். இவ் உறுதிமொழியை அடுத்து வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் நடத்திய மறியல் போராட்டத்தை முடிவுறுத்தும் வகையில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக, ஆளுநர் கூரே வழங்கிய வாக்குறுதி ஏற்புடையது.

ஒரு மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் றெஜினோல்ட் கூரேயின் இவ் உறுதிமொழி மிகவும் சரியானது என்று நினைக்கையில்,

ஆளுநர் கூரே அவர்கள் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பொன்றில்; காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை எதுவும் நடத்த முடியாது. யாரைச் சந்தித்தாலும் இதுதான் முடிவு எனக் கருத்துரைத்துள்ளார்.

இங்குதான் ஆளுநர் கூரே தான் வடக்கின் ஆளுநர் என்பதை மறந்து தன்னை ஒரு சிங்கள இனத்தவராக – பேரினவாத சிந்தனையுடையவராகக் காட்டிக் கொள்கிறார்.

வன்னிப் போர்க்காலத்திலும் வன்னிப் போரின் இறுதி நாட்களிலும் காணாமல்போனவர்கள் பலர்.

அவர்களைத் தேடி இன்று வரை அவர்களின் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரிகின்றனர்.

படையினரிடம் ஒப்படைத்த என் பிள்ளை எங்கே என்று கேட்கின்ற ஒரு தாயின் பரிதவிப்பை புரிந்து கொள்வதென்பது இந்த நாட்டின் ஜனாதிபதி முதல் சமானியர்கள் வரை கட்டாயமானதாகும்.

என் பிள்ளை வருவான் என்ற நம்பிக்கையோடு எட்டு ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருக்கும் பெற்றோர்களின் – உறவினர்களின் மனங்களை பாதிக்காமல் கருத்துரைப்பது மனித பண்பாகும்.

இதைவிடுத்து காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த முடியாது என்றால்,

நடத்திய விசாரணைகளுக்கு நடந்தது என்ன? அந்த விசாரணைகள் ஏன் நடத்தப்பட்டன என்ற கேள்விகள் எழும்.

எதுவாயினும் காணாமல்போனவர்கள் என்ற பிரச்சினை இந்த நாட்டில் இன்று வரை கண்ணீர் சிந்த வைக்கிறது.

எனவே இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன், கழிவிரக்கத்துடன் பார்க்க வேண்டும்.

மருந்துக்கேனும் கண்டபாட்டில் கதைத்து நொந்து போயுள்ள மக்களின் மனங்களை மேலும் நோகடித்து விடாதீர்கள் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# ஓர் இலட்சத்து 21,000 பேர் யாழில் வரட்சியால் பாதிப்பு

## யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொடர்ச்சியாக நிலவிவரும் வரட்சி காரணமாக யாழ்.மாவட்டத்தில் ஓர் இலட்சத்து 21 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக வரட்சி நிலவி வருகிறது. அண்மையில் மிககுறைந்த அளவிலேயே மழையும் கிடைத்துள்ளது. அது பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. எனவே தொடர்ச்சியாக நீர் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை, மருதங்கேணி மற்றும் தீவகங்கள் போன்ற பிரதேசங்கள் கடுமையாக வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை பெய்யாத காரணத்தால் இந்த பகுதிகளுக்கு தொடர்ச்சியாக நீர் விநியோகம் தேவையாகவுள்ளது.

இதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து எமது மாவட்டத்துக்கு 6 தண்ணீர் தாங்கிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதன் மூலம் நீர் விநியோகித்து வருகிறோம்.

அதற்கான அனைத்து செலவுகளையும்அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எமக்கு வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யாழ்.நூலக எரிப்பின் நினைவேந்தலும் கலந்துரையாடலும்

தமிழர்களின் அறிவுக் களஞ்சியமான யாழ்.பொது நூலகம் பேரினவாதிகளால் எரியூட்டப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ளன.

தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் இலங்கை அரசின் கட்டமைப்பு சார் இனவழிப்பின் ஓர் அங்கமான பண்பாட்டுப் படுகொலையாக அரங்கேற்றப்பட்டது யாழ்.நூலக எரிப்பாகும்.

மேற்படி நூலக எரிப்பின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் கலந்துரையாடலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று 01.06.2017 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். பொதுநூலக முன்றலில் நடைபெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அறிவித்துள்ளார். (இ-3)

# மூத்தோர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ராசாராணி சேவை இல்லத்தின் மூத்தோர் ஒன்று கூடலும மருத்துவ முகாமும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை பருத்தித்துறை ராசாராணி சேவை இல்ல மண்டபத்தில் இடம்பெறும்.

யோ.இருதயராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மனநல வைத்திய ஆலோசகர் டாக்டர் சங்கர் தலைமையில் மருத்துவ முகாமும், ஆசிரியர் சியான் மா.இரத்தினசோதியின் தியான உடற்பயிற்சியும் கலாபூஷணம் இ.ஆழ்வாப்பிள்ளையின் முதியோர் கலாசார நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (இ-3-134)

# மீன்பிடிக்கச் செல்லலாம்

(குருநகர்)

சீரற்ற காலநிலை காரணமாக மறு அறிவித்தல் வரை குருநகர் கடற்றொழிலாளர்களை மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் எனக் குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது. இந் நிலையில் காலை 8.15 மணி முதல் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லலாம் என கடற்றொழிலாளர் சங்கம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளது.(இ-5-106)

# ஆட்டுத் திருடர்கள் அகப்பட்டனர்

வடமராட்சிப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக ஆடுகளைத் திருடி வந்தவர்கள் எனக் கருதப்படும் இருவரை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் திருடப்பட்ட ஆடு ஒன்றையும் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாயக்கிழமை இரவு 11 மணியளவில் மண்டான்- உப்பு ரோட்டு பகுதியில் நெல்லியடிப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது தப்பிச் செல்ல முற்பட்ட ஆட்டோ ஒன்றைச் சோதனையிட்ட போது அதற்குள் ஆடு ஒன்று இருப்பதனைக் கண்டு ஆட்டோவில் வந்த இருவரையும் கைது செய்ததுடன் ஆட்டையும் மீட்டு பொலிஸ நிலையம் கொண்டு வந்தனர். (இ-60)

# மாணவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்ற அமர்வு நாளை 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திரு.கோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியர் ம.சசிகுமார், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் சோ.இராஜன் சேதுபதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

# உயிரிழந்தவர்களுக்கு யாழில் மௌன அஞ்சலி

தெற்கில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்த உறவுகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூத்த அரசியல்வாதியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. கூட்டத்தின் ஆரம் பத்தில் இவ்வாறு உறவுகளுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-9)

## சத்திய தரிசனம்



### நல்ல மனம் வேண்டும்

❖ ஒரு விஞ்ஞானி, இன்னொரு விஞ்ஞானியைப் போலவே காப்பியடித்து சிறுமாற்றம் செய்துவிட்டு மார்தட்டுவதில் பயனில்லை. தனித்துவ மாக வித்தியாசமான ஒரு கண்டுபிடிப்பைக் கொடுத்தால்தான் உலகம் பாராட்டும். பிறரைப் பார்த்து நாமும் அதேபோல் செய்ய முற்படுவது, நமக்கென்று ஒரு தனித்துவத்தை ஒருநாளும் தராது. அது நம்மை தவறான பாதைக்குத்தான் அழைத்துச்செல்லும்.

❖ பிறரைப்பார்த்து செய்யும் செயல் வேண்டுமானால் இலகுவாக இருக்கலாம். ஆனால், சுயசிந்தனையும், கட்டுப்பாடும், நேர்மையும் குலைந்துபோகும். பிறர் நம்மை கைதூக்கி விடுவதைவிட, நம்மைநாமே உயர்த்திக் கொள்வது எவ்வளவோ மேலானது. உன்னால் முடிந்த மட்டும் சாதனை செய். அதில் வெட்கித் தலைகுனிய எதுவுமே இல்லை.

❖ நம் நாட்டில் பல மகான்கள் இருந்தார்கள். அவர்களைப் பார்த்து நாம் முன்னேற நினைக்கலாம். அதில் தவறு இல்லை. ஏனெனில் அவர்கள் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தவர்கள். அவர்கள் அமைத்துக்கொடுத்த கட்டுப்பாடுகள் நம்மை மென்மேலும் உயர்த்தும். அவர்களு[illegible] பின்பற்ற [illegible] நிச்சயம் வளர்ச்சி பெறுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன் கட்டு, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, குமுழமுனை, கரியாலைபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 651 வது பிரிவு இராணுவ முகாம, நாச்சிக்குடா கடற்படை முகாம, இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.(இ-9)

## எமது பிரதேசத்தில் இருந்து விலங்கு விசர் நோயை ஒழிப்போம்!

விலங்கு விசர் நோயானது நாய்க்கடியினால் மட்டுமல்ல சிறு நகக் கீறலால் கூட ஏற்படலாம். ஆபத்தினை உணர்வோம். அவதானமாக இருப்போம்.

**காட்டு விலங்குகளை செல்லப்பிராணிகளாக்க வேண்டாம். அது ஆபத்தானது.**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் கே.சி.சி.சி. அணி முன்னிலை



ஜோர்ஸ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (தரவரிசை) 01.01.2017 தொடக்கம் 28.02.2017 வரை நடைபெற்ற 7 போட்டிகளுக்கு (விக்ரம் ராஜன், கங்கு நினைவுச் சுற்றுப் போட்டி - 2017) வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி. அணி 4 போட்டிகளில் பங்கு பற்றிப் போட்டிகளில் வெற்றி பெற்று 21.53 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திலும் உள்ளது.

இரண்டாவது இடத்தில் ஜொலிஸ்ரார் அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 16.73 புள்ளிகளை பெற்று 2 இடத்திலும், திருநெல்வேலி சி.சி.அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 11.32 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக் கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 10.61 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் 2010 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகம் 13 போட்டிகளில் பங்குபற்றி 11 போட்டியில் வெற்றி பெற்று 44 புள்ளிகளையும் பெற்று முதலாம் இடத்திலும், ஜொலிஸ்ரார் அணி 16 போட்டிகளில் பங்கு பற்றி 12 போட்டிகளில் வெற்றிபெற்று 37 புள்ளிகளைப்பெற்று 2ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் அணி 18 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றிபெற்று 28 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியில் நடத்தும் கிரிக்கெட் தொடருக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் வார நாட்களில் ஆரம்பமாகவுள்ளதனால் பங்குகொள்ள விரும்பும்கழகங்கள் 0750491420 அல்லது 0770469971 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (க)

# சிநேகித பூர்வ மென்பந்தாட்டம் விக்டோரியன்ஸ் வெற்றி

யாழ்.மாவட்ட சுகாதார திணைக்கள மென்பந்து அணியுடனான சிநேகித பூர்வமான மென்பந்து போட்டியில் விக்டோரியன்ஸ் அசத்தல் வெற்றி பெற்றுள்ளது.

கிரிசாந் தலைமையில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று சுகாதார திணைக்கள அணி முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

விக்டோரியன்ஸ் அணியின் கிரிசாந் 55 ஓட்டங்களையும் லதீஸ் 43 ஓட்டங்களையும் அதிகப்படியாக பெற்றனர். அவ் அணி 15 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு துடுப்பாடிய சுகாதார திணைக்கள அணி 11 ஓவர்களில் பிரதீஸ், லங்கேஸ், லதீஸ், கிரி இன் சிறப்பான பந்துவீச்சின் மூலம் விக்கெட் டுக்களை சரிக்க 11 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமம் இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் லங்கேஸ், க.பிரதீஸ் தலா 3 விக்கெட்டுக்களையும் லதீஸ், கிரி தலா 2 விக்கெட்டுக்களையும் பெற்றனர். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் திக்கம் இளைஞர், றேஞ்சஸ் வெற்றி



நவிண்டில் கலைமதியின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (2017.05.29) நடைபெற்ற முதலாவது போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் எந்த ஒரு கோல் களையும் போடாத நிலையில் ஆட்டமானது சமநிலையில் முடிவுற்றது.

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.கழகமும் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் எந்த ஒரு கோல் களையும் போடாத நிலையில் ஆட்டமானது சமநிலையில் முடிவுற்றது.

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 4 : 3 என்ற கோல்கணக்கில் றேஞ்சஸ் விளையாட்டுக்கழகமானது வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (க)



மாகாணமட்ட கயிறு இழுத்தல் போட்டியில் 27.05.2017 அன்று நடை பெற்ற போட்டியில் யாழ்.மாவட்டம் சார்பாக பங்குபற்றிய உதய ஒளி சனசமூக நிலையம் பெண்கள் பிரிவில் 3ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது. (க)

# அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## துறையூர் ஐயனார் சம்பியன்



தீவக உதைபந்தாட்ட அனுமதியுடன் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி அணியுடன் (29.05.2017) அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் அணியினர் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 1:0 கோல்கணக்கில் வெற்றியீட்டி துறையூர் ஐயனார் அணி கிண்ணத்தை கைப்பற்றியது. (க)

# நவிண்டில் கலைமதி உதைபந்தாட்டம் அடுத்தசுற்றில் கரவைசுடர், டயமன்ஸ்



நவிண்டில் கலைமதியின் உதைபந்தாடட்ட சுற்றுப் போட்டியில் (2017.05.30) நடைபெற்ற முதலாவது போட்டியில் கரவை சுடர் விளையாட்டுக்கழகமும் சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டிருந்ததால் ஆட்டமா்னது சமநிலையில் முடிவுற்றது.

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் கரவை சுடர் விகழகம் 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்ட நேர முடிவில் 3 : 0 என்ற கோல்கணக்கில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமானது வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லுண்டாய் வெளி...

வில் அமைந்துள்ள குடிமனைகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு அண்மைக்காலமாக ...தால் நோய்கள் தொடர்ச்சியாக தென்பட்டு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிரங்கு போன்ற நோய் சிறுவர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அத்துடன் சுவாசம் சம்பந்தமான ஒருவித நோய்த்தொற்றும் பெரியவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் நோய்த்தாக்கத்தால் தொண்டை, ...ாய் என்பன பாதிக்கப்பட்டு மக்கள் செய்வதறியாது அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கல்லுண்டாய் பகுதியில் பெருமளவு கழிவுகள் கொட்டப்பட்டு வந்த நிலையிலும் சீரான கழிவு முகாமைத்துவம் இன்மையால் அப்பகுதி முழுவதும் கழிவுகள் பரவி காணப்படுகின்றன. அப்பகுதியில் உள்ள வீதியால் சென்று வர முடியாத நிலையில் பொதுமக்கள் தமது பயணத்தினை பெரும் அவதியுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் நாளுக்கு நாள் தாம் இறந்து கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளனர். துர்நாற்றம் மற்றும் இலையான் போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

இதனால் நாளுக்கு நாள் தமது உடல்களில் பாரிய மாற்றங்களை உணர்வதாகவும் உடலில் பலத்தினை இழந்து வருவதாகவும் தெரிவித்ததுடன் சிறு பிள்ளைகளுக்கு தோல் சம்பந்தமான நோய்கள் அதிகரித்து காணப்படுகின்றன என சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ள கால்நடைகள் அண்மை காலத்தில் திடீர் திடீரென இறந்து போகின்றன. இது அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட கால முறையில் தமக்கு பாரிய நோயத்தொற்று ஏற்பட்டுள்ளதா எனவும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார துறையினரை விசாரித்த போது, அப்பகுதியில் இவ்வாறான தோல் மற்றும் சுவாச நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் 90% காணப்படுகிறது என தெரிவித்துள்ளனர்

இந் நிலையில் குறித்த விடயம் பாரதூரமாக மாற்றம் அடையும் என்பதால் சம்பந்தப்பட்ட அனைத்து சுகாதார அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் உடனடியாகவே களத்தில் இறங்கி மக்களின் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நோய் தொடர்பில் கூடிய கவனத்தை செலுத்துமாறு சுற்றுச் சூழலியலாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-9)

## ஞானசார தேரரை...

றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஞானசார தேரர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரை சிறைச்சாலைக்குள்ளேயே வைத்து தீர்த்துக் கட்டும் இரகசிய சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் சிறைச்சாலையில் இருந்து விடுதலையான தண்டனைக் கைதியொருவர் பொலிஸாருக்கு எழுத்து மூல அறிவித்தல் கொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் தற்போதைக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் அறிக்கையொன்றின் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த 2015ஆம் ஆண்டு இது தொடர்பாக சிறைக் கைதியொருவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததாகவும் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது பல சேனா அமைப்பும் இது தொடர்பாக அண்மைக்காலமாக பகிரங்கமாக குற்றம் சாட்டி வந்துள்ளது. இவ்வாறான ஒரு முறைப்பாட்டின் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்ற நிலையை ஏற்படுத்துவதுடன், ஞானசார தேரரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி அவரை சிறையில் அடைக்கப்படுவதிலிருந்து தப்புவித்துக் கொள்ளவும் பொது பல சேனா அமைப்பு முயற்சி செய்வதாகவும் பல தரப்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ளன. (செ-11)

## இயற்கை பேரிடர்...

ள்ளது. அத்துடன் இந்த அனர்த்தங்கள் காரணமாக 63 பேர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் 96 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் 15 மாவட்டங்களை பாதிக்கும் விதமாக ஏற்பட்ட இந்த வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தம் காரணமாக மொத்தமாக ஓர் இலட்சத்து 49 ஆயிரத்து 678 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 75 ஆயிரத்து 816 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 19 ஆயிரத்து 68 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 754 பேர் 383 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அந்தந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த அனர்த்தங்கள் காரணமாக 901 வீடுகள் முற்றாகவும் 6064 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக மாவட்ட செயலகங்கள் உறுதி செய்துள்ளன.

அதிகமான உயிரிழப்புக்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் அங்கு இதுவரை 79 பேர் உயிரிழந்துள்ளதுடன் 26 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும் 28 பேர் காயமடைந்து சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இதனைவிட களுத்துறை மாவட்டத்தில் 59 மரணங்களும் மாத்தறை மாவட்டத்தில் 27 மரணங்களும் பதிவாகியுள்ளதுடன் அந்த மாவட்டங்களில் முறையே 5316 பேர் காணாமல் போயுள்ளனர்.

தெற்கின் காலி, மாத்தறை, மேற்கின் களுத்துறை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் வெள்ள நீர் பெருமளவு வடிந்தோடி வரும் நிலையில் சில பிரதேசங்கள் தொடர்ந்தும் வெளளத்தில் மூழ்கி காட்சி அளிக்கின்றன. எனினும் இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்றும் தொடர் மழை பதிவான நிலையில் களுகங் கையின நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் வெள்ள நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது.

தெற்கில் வெள்ள நீர் வடிந்தோடும் நிலையில் நிவாரணம் மற்றும் தொற்று நோய் தொடர்பில் பெரும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. களுத்துறை காலி, மாத்தறை, மாவட்டங்களில் முப்படையினரும் இணைந்து நிவாரண, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் இரத்தினபுரியின் பல பகுதிகளில் நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனைவிட மாத்தறை நில்வள கங்கையின் நீர்மட்டம் குறைந்துள்ள நிலையில் வெள்ள நீர் வடிந்தோடி வருகின்றது. எனினும் பொதுமக்கள் வெள்ளத்தால் மூழ்கியிருந்த தமது வீடுகளுக்கு செல்ல தொடர்ந்தும் அச்ச நிலையில் உள்ளனர். குறிப்பாக முதலைகள் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் இத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. நில்வள கங்கையில் உள்ள முதலைகளே வெள்ள நீரில் இவ்வாறு வீடுகளுக்குள் புகுந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். (செ-11)

## வித்தியா கொலை ...

மன்றத்தில் நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்றைய தினம் சந்தேகநபர்கள் பத்து பேரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அவர்களுக்கான விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் மொழி பேசும் மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதாய விளக்கமுறையில (ட்ரயல் அட்பார்) வித்தியா கொலை தொடர்பான விசாரணைகள் இம்மாதம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மாணவன் ஒருவர் ...

யதினம் மாணவர்கள் சிரமதானப்பணியினை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது தரம் 10 மாணவன் ஒருவர் குறித்த உயிரிழந்த மாணவனின் நண்பனைத் தாக்கியுள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த மாணவன் தாக்கிய மாணவனை அதட்டியுள்ளார். இதை சடுதியாக பார்த்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் பிரஸ்தாப மாணவனை சக மாணவர்களுக்கு முன்பாக வைத்து தண்டித்துள்ளார்.

இதையடுத்து மனமுடைந்த குறித்த மாணவன் வீடு சென்று மரமமான முறையில் உயிரை மாய்த்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவன் உயிரிழந்ததற்கான காரணம உடனடியாக தெரியவராத நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் சடலம் மரண மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## காணாமல் ஆக்கப்பட்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத்தருமாறு கோரி அவர்களது பெற்றோர் கிளிநொச்சியில் 100ஆவது நாளாக நேற்று முன்தினம் பாரிய போராட்டத்தை நடத்தியிருக்கும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி இந்த தகவலை சர்வதேச ஊடகமொன்றுடன் நடத்திய விசேட நேர்காணலின்போது வெளியிட்டார்.

திருகோணமலை-மூதூர் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மக்கள் மத்தியில் உரையாற்றியபோது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இன்னும் குறிப்பிட்ட இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்ற பெற்றோரை அந்த இடத்திற்குச் சென்று ஆராய்வதற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதாக தெரிவித்திருந்தார்.

குறித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோருடன்தானும் அவ்விடத்திற்குச்சென்று ஆராய்ந்து பார்ப்பதற்குத் தயார் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இந்த நிலையில் தேசிய நல்லிணக்கச் செயலணியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று நேர்காணலை வழங்கினார்.

அதில் சந்திரிகா குமாரதுங்க குறிப்பிடுகையில்,

அவர்களுடைய பிள்ளைகளும், கணவன்மார்களும் இராணுவத்தினரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். அப்படி அவர்கள் இருந்தால் தயவு செய்து அதனை தெரிவியுங்கள், அவ்வாறு தெரிவிக்கும் இடங்களுக்கு அவர்களைக் கூட்டிச்செல்ல தானும் வரத்தயார் என்பதை அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்தபோது ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்திருந்தார். விசாரணை நடத்தி தேடுவதற்கும் பெற்றோருக்கு சந்தர்ப்பத்தை அளிக்கவும் தயார் என்றும் அவர் கூறியிருந்தார். எனவே அந்த இடத்தில் அமர்ந்திருப்பதை விடவும் குறித்த இடங்களுக்குச் சென்று ஆராய்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது என பிரதமர் அண்மையில் தெரிவித்திருந்தார். அதனை மற்றவர்கள் கூறுவதற்கு பயப்படுகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே உயிருடன் இருக்கின்றார்களா அல்லது உயிரிழந்துவிட்டார்களா என்பதை தேடிப்பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த வகையில் அப்படி யாரையும் முகாம்களில் மறைத்துவைக்கவில்லை. அப்போது ராஜபக்ஷவின் ஆட்சியிலிருந்த இராணுவத்தின் பழக்கத்திற்கேற்ப அவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம். அது எனக்குத் தெரியாது. ஆனால் அப்போது அவர்களை பொறுப்பேற்றிருந்தால் யாரையும் கொலை செய்வார்களே அன்றி, இவ்வளவு வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்க மாட்டார்கள். எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தயாரென்றால், ஜனாதிபதியும் அதற்கு இணங்கினால் நானும் இதற்கு உதவிபுரிவேன். ஜனாதிபதி அப்படியான அறிவிப்பொன்றை விடுத்தார். அதற்குப் பின்னர் இதுகுறித்து நான் அவரிடம் வினவவில்லை. ஆனாலும் ஜனாதிபதி பொய்யை கூறவில்லை. ஜனாதிபதி உண்மையாகவே அதனை தெரிவித்தார். இருந்த போதிலும் முடியாது என்று ஜனாதிபதி தெரிவிக்காத பட்சத்தில் அவர்கள் தயாரென்றால் அவர்களை எந்த இடத்திற்கும் அழைத்துச்செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம். இந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென அவர்கள் கோரினால் அவர்களை நாங்கள் அழைத்துச்செல்வோம். எனது கருத்தை நான் உண்மையாக கூறுகிறேன். அதனை தெரிவிக்க அநேக சிங்களவர்களுக்கு அச்சம் உள்ளது. அவர்கள் இன்னும் உயிருடன் இல்லை. உண்மையை சொல்ல வேண்டும். யுத்தநேரத்தில் இவர்களை அழைத்து, இற்றைக்கு 9 வருடங்களாக அவர்களை வைத்துக்கொண்டிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்றார்.

அப்படியென்றால் அரசாங்கம் நேர்மையாக உள்ளது என நினைத்தால் இவர்கள் உள்ளனர் என்றும் இவர்கள் இல்லை என்றும் பட்டியலிட்டு வெளியிடலாம்தானே? என்று செய்தியாளரால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

அரசாங்கத்திற்கு அதனை கூறமுடியாது. இராணுவமே அதனை அறிவிக்கவேண்டும். அவர்களே இல்லை என்று கூறுகின்றனர். இந்த அரசாங்கத்திற்கு அதனைக்கூற முடியாது. ஆனால் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தெரிவிக்கமுடியும். எனவேதான் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைத்து அவர்களூடாக யார் காணாமல் போனவர்கள் என்பதை ஆராயவேண்டும். ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 3 ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. எல்.எல்.ஆர்.சி, பரணகம ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு என்பன அமைக்கப்பட்டன. அவர்களும் பல பட்டியல்களைத் தயாரித்துள்ளனர். எனினும் இந்தப் பட்டியர்கள் முழுமைப்பெறவில்லை என்று தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். அதனால்தான். இந்த அலுவலகத்தை அமைப்பதாக சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் இணக்கம் வெளியிட்டது. அந்த பட்டியலையும் பெற்று இன்னும் சிலர் இருந்தால் அவர்களையும் உள்ளடக்கி முழுமைப்படுத்தி விசாரணை செய்து, கருத்துக்களை தெரிவிக்க மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி, காணாமல்போனோர் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றை தயாரித்து அதற்கும் முன்னர் நட்டஈடு தொடர்பிலும் தயாரிக்க வேண்டும். அதனை செய்த இராணுவச் சிப்பாய்களை இழுத்துச்சென்று கொல்வதைப் பார்க்கிலும் அவர்கள் வாழ்வதே முக்கியமாகும். அவர்கள் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை செய்வதோடு பாரிய குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கே அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது. முதலாவது பட்டியல் செய்து அதன் பின்னர் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்து அதன் பிறகு உண்மையைக் கண்டறியும் பொறிமுறை அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று சந்திரிகா தனது நேர்காணலில் குறிப்பிட்டார். (செ-11)

# குணவர்தனவுக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ரதுபஸ்வெல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு வெலிவேரிய பிரதேசத்தைச் சேர்ந்த ரதுபஸ்வெல கிராம மக்கள் தங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்ததுடன், மேலும் 33 பேர் காயமடைந்தனர். குறித்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட நான்கு இராணுவத்தினர் தற்போது கைது செயயப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களைக் கொலை செய்தமை, மேலும் பலரைக் கொலை செய்ய எத்தனித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. பிரிகேடியர் குணவர்த்தன உள்ளிட்ட சந்தேகநபர்கள் நேற்று கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ருவன் பதிரண உத்தரவிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்திடம்...

ள்ளதாகவும் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, யுத்தகாலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் பலர் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய இராணுவத்தினர் மற்றும் ஆயுத குழுக்களினால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பல அமைப்புக்களின் தலைவர்கள் உயிருடன் இல்லாத நிலையில், காணாமல் போனோர் தொடர்பில் எவ்வாறு விசாரணைகளை மேற்கொள்வது என்றும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் பொறுப்பற்ற விதமாக கருத்துக்களை வெளியிட கூடாது என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கை இராணுவத்தினரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பாக சாட்சியங்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது ஒரு நாள் விடுதலைப்புலி உறுப்பினராக இருந்தாலும் அவர்களையும் தங்களிடம் சரணடையுமாறு இராணுவத்தினர் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துக்கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் உதவியாளராக இருந்த விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பலர் சரணடைந்தார்கள்.

அவ்வாறு சரணடைந்தோர்களுக்கு என்ன நடந்தது. உண்மையில் அவர்கள் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? அவர்கள் இருந்தால் எங்கிருக்கிறார்கள்? இல்லை என்றால் என்ன நடந்தது? எப்படி நடந்தது? எந்த இராணுவத்தால் நடந்தது? என்ற விபரத்தை இந்த அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தியுள்ளார். (செ-281)

Organ, Guitar,
புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293

IELTS
IELTS Test Prep
வெளிநாடுகளில் STUDENT VISA வில் படிப்பதற்கு அவசியமான IELTS எளிமையான முறையில் கற்பிக்கப்படும்

• வேலைசெய்வோரின் நலன்கருதி மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்
• பிரத்தியேக வகுப்புக்களும் (PERSONAL CLASSES) உண்டு.
தொடர்புகளுக்கு: 0768226236
V2 TRAVELS
49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 9ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஜுன் 6 செவ்வாய் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.
(சி-6726)

## ஞானசார தேரர்...

திகதி நீதிமன்றில் பிரசன்னமாவதாக தெரிவித்த ஞானசார தேரர் அன்றைய தினம் சமுகமளிக்கவில்லை.

உடல் நிலை பாதிப்பு காரணமாகவே அவர் சமுகமளிக்கவில்லை என்று அவரது தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, மருத்துவச் சான்றுகளுடன் நேற்று ஞானசார தேரர் நீதிமன்றில் பிரசன்னமாக வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

எனினும் அவர் நேற்றும் ஆஜராகவில்லை. சுகவீனம் காரணமாக ஞானசார தேரர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவரது சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதனையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இன வெறுப்புப் பேச்சுக்கள் மூலம் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைக் குலைக்க முயற்சி செய்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் பேரில், பொலிஸார் பல குழுக்களாக பிரிந்து ஞானசார தேரரை கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இராஜாங்க, பிரதி...

மைத்ரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். அவர்களது விபரங்கள் வருமாறு.

இராஜாங்கஅமைச்சர்கள்

1.லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன - அரச தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

2.பாலித்தரங்கே பண்டார - நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்.

3.வசந்த பராக்ரமசேனநாயக்க - வெளி விவகார இராஜாங்க அமைச்சர்.

4.எரான் விக்ரமரத்ன - நிதி இராஜாங்க அமைச்சர்.

பிரதி அமைச்சர்கள்

1. ஹர்ஸ டி சில்வா - தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார பிரதி அமைச்சர்.

2. ரஞ்ஜன் ராமநாயக்க -சமூகவலுவூட்டல்,நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் பிரதி அமைச்சர்.

3. கருணாரத்ன பரணவிதான - திறன் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி பிரதி அமைச்சர். (செ-11)

## போராளிகள் மூன்...

அரசியல் கைதி ஒருவரும் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு நேற்று வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் இராணுவத்தினரிடம் சரணடைந்தும் கைது செய்யப்பட்ட நிலையிலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு ஒருவருட காலம் புனர்வாழ்வளிக்கப்பட்டு வந்த முன்னாள் போராளிகள் மூவரே நேற்று சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றத்தில் ஊடாக புனர்வாழ்விற்கு அனுப்பி வைக்கப்பட்ட அரசியல் கைதி ஒருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி கிளிநொச்சியைச் சேர்ந்த 44 வயதுடைய சற்குணசிங்கம் தயாபரன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 35 வயதுடைய விக்னராசா துஷ்யந்தன், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த 37 வயதுடைய முத்துலிங்கம் ஜெயகாந்தன் ஆகிய முன்னாள் போராளிகளும், பேலியகொடவைச் சேர்ந்த 48 வயதான அஜித் ரோகண என்ற அரசியல் கைதியுமே சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக, நிலைய பயிற்சிப் பொறுப்பாளர் சித்திரகுணதுங்க, சிரேஷ்ட அதிகாரி சமன்பெரேரா, பூந்தோட்ட நிலைய பொறுப்பதிகாரி கேணல் ஹேமிடோன், சர்வமதத் தலைவர்கள், முன்னாள் போரளிகளின் குடும்ப உறுப்பினர்கள், பொலிஸார், விமானப் படையினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

## பொறுப்புக்கூறலி...

வமே கடத்தி சென்றது என 18 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் பொறுப்பற்ற வித்தில் கருத்து தெரிவித்துள்ளமை கண்டனத்துக்குரியது என ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் பதிலளிப்பவர் ஆளுநராக இருக்க தகுதியற்றவர் எனவும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எந்த விசாரணையும் நடத்த முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட தமிழ் இயக்கங்களும் ஆட்கடத்திலில் ஈடுபட்டன என்ற குற்றச்சாட்டை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்வைத்திருந்தார். இது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணாமல் போனோரை தேடியறியும் ஆணைக்குழுவிடம் 24 ஆயிரம் பேர் வரையில் சாட்சியமளித்துள்ளனர். இதில் 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இராணுவத்தினராலும், புலனாய்வு பிரிவினராலும் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடத்தலில் ஈடுபட்டார்கள். ஆகவே அவர்களும் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லாவிட்டால் நாங்களும் சொல்ல முடியாது என கூறி பொறுப்புக்கூறலில் இருந்து நழுவிட முடியாது.

தமது பிள்ளைகள் எங்கே? யாரால் கைது செய்யப்பட்டார்கள்? யாரிடம் எப்போது ஒப்படைக்கப்பட்டார்கள்? என அனைத்து புள்ளி விபரங்களும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அதற்கான பதிலை வழ்ங்காமல் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்காமல் தான்தோன்றிதனமாக பதிலை கூற முடியாது. ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோரின் கொலைகள் கடத்தல்களின் பின்னணியில் இராணுவம் இருந்ததாக கூறப்பட்டு, இராணுவத்தினர் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இருக்க இராணுவம் தான் தனது பிள்ளைகளை கைது செய்தது என்று அனைத்து புள்ளிவிபரங்களோடும் அவர்களது பெற்றோர்கள் தகவல் வழங்கிய பின்னரும் ஏன் இதுவரை எந்த இராணுவத்தினரும் கைது செய்யப்படவில்லை.

ஒரு அரசாங்கம் ஒரு இயக்கம் ஒன்றோடு தன்னை ஒப்பிட்டு பேசி அந்த குற்றத்திலிருந்து தப்பித்து கொள்ள முடியாது. தமிழீழ விடுதலைப்புலிகளும் தான் கடத்திலில் ஈடுபட்டவர்கள். ஆகவே எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என ஒரு ஆளுநர் கூறியுள்ளதன் மூலம் அவருடைய கோமாளித்தனத்தின் உச்சகட்ட வெளிப்பாட்டை காட்டியுள்ளார்.

இந்த விடயத்திற்கு உயர் பொறுப்பில் உள்ள ஜனாதிபதி தான் பதில் சொல்ல வேண்டும். அதனை விட அந்த அரசாங்கத்தின் பிரதிநிதியாக உள்ள ஆளுநர் ஒருவர் பொறுப்பற்று பதில் கூற முடியாது. வடக்கு மாகாண ஆளுநர் தனது பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர்.

அவரது நேற்றைய (நேற்று முன்தினம்) கருத்து கண்டிக்கத்தக்கது என தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் பொறுப்பான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (செ-4)

## உதவி வழங்க நட...

எடுத்திருப்பதாக அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த உதவி திட்டத்தில் பொது மக்களையும் இணைந்து கொள்ளும்படி அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் வெள்ள மற்றும் நிலச்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொருட்கள் மற்றும் உணவு அல்லாத பொருட்கள் தொடர்ந்தும் தேவையாக இருக்கின்றது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாவட்ட மக்களின் நல்லெண்ண உதவியாக யாழ். மாவட்ட செயலகம் ஊடாகவும், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் மக்கள் தங்கள் உதவிகளை வழங்கலாம்.

பாதிக்கப்பட்ட பகுதியில் தொண்டாற்றுவதற்கு விருப்பம் உள்ளவர்களும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் என்றார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் மாரி மழை பெய்யாமையினால் கடுமையான வரட்சி உருவாகியுள்ளது. இதனால்வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், மருதங்கேணி போன்ற கடலை அண்டிய பகுதிகளில் உள்ள 33 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த ஓர் இலட்சத்து 21 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகின்றன. அத்துடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 6 புதிய பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

## யாழ்.வாள்வெட்டு...

மூன்று முக்கிய நபர்கள் பொலிஸாரால் பல காலமாக தேடப்பட்டு வந்தனர்.

இந்த மூன்று நபர்களும் தலைமறைவாகி உள்ளதாகவும், அவர்கள் பல மாணவர்கள் மற்றும் இளைஞர்களை தம்முடன் இணைத்து சட்ட விரோத செயற்பாடு மற்றும் வாள் வெட்டுக்களில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்து, பொலிஸாரால் பல காலமாக தேடப்பட்டு வந்தனர்.

அவர்களின் புகைப்படங்களை ஊடகங்களுக்கு வழங்கி பொதுமக்களிடம் இருந்து அவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸார் கோரியிருந்தனர்.

இவர்கள் பல காலமாக தலைமறைவாகி இருந்த நிலையிலும் யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டு சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்டதுடன் அது தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த மூவர் எங்கு தலைமறைவாகி உள்ளார்கள் என எந்த வித தகவல்களும் பொலிஸாருக்கு கிடைத்திருக்கவில்லை.

இருப்பினும் இந்த குழுக்களின் தலைவர் என தெரிவிக்கப்படும் பிரசன்னா ஏன்பவர் வெளிநாட்டுக்கு தப்பி சென்றுள்ளார் எனவும் ஏனையவர்கள் இலங்கையில் ஏதோ ஒரு இடத்தில் தலைமறைவாகி உள்ளார்கள் எனவும் அண்மையில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலே நேற்று முன்தினம் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இந்தியா சென்றவேளை தேவா, பிரகாஸ் மற்றும் கரிஸ் டானியல் ஆகியோர் இந்தியாவின் உளவுத்துறை (கியூ பிரிவு) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் தாம் இலங்கையில் "இன்பம் துன்பம்" என்ற குழுவில் அங்கத்தவர்களாக இருப்பதாகவும் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## பெண்ணொருவர்...

குறித்த கொலைக்கான காரணம் தெரியாத நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org